# குகன்




வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# குகன்


சு. வேலுப்பிள்ளை

ஆசிரியர்



சான்றிதழ் இல. ஈபீபி / ச / 268

1952ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ந்திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19(A)-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப் புத்தகம் ஒரு நூல்நிலையத்திற்குரிய புத்தகமாக உபயோகித்தற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஜீவானந்த நாணயக்கார

செயலாளர்

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,

மலாய்வீதி, கொழும்பு 2,

28-9-1965

சுன்னாகம் :

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்



பதிப்புரிமை]



1966


[விலை : ரூ. 1-00

முதற் பதிப்பு — 1959
இரண்டாம் பதிப்பு (மறுபிரசுரம்) 1966

சுன்னாகம் :
திருமகள் அழுத்தகம்

இப்புத்தகம் வாழைச்சேனைக் கடதாசியில் அச்சிடப்பட்டது

[உரிமை பதிப்பகத்தார்க்குரியது]

# பதிப்புரை

பாரத இராமாயணக் கதைகளை எத்தனை முறை படித்தாலும் அவை அத்தனை முறையும் இன்பம் பயக்கும். அதுவுமன்றி அது புதிய பல சம்பவங்களை அறிவதற்கும் ஏதுவாகும். ஆனால், ஒருவிதத்தில் அக் கதைகளைத் திரும்பத் திரும்பப் படிப்பதில் எமது மனம் சாதாரணமாகச் சலிப்படைந்துவிடுவது இயல்பு. அன்றி, புதுக் கருத்துக்களை ஆராய்வதிலும் மனம் அத்துணை ஈடுபாடு கொள்ளாது. ஆகையால் ஒரே பொருளைத் தினந்தோறுங் கறியாக்கவேண்டி நேரிட்டால் அதனை, வற்றலாகவும் கூட்டாகவும் மாற்றி மாற்றி ஆக்கி உணவுக்குச் சுவை பிறப்பித்தல்போல ஒரே கதையைப் பலவிதமாக எழுதுவதன்மூலம் அதிற் சுவையை ஏற்படுத்தல் முடியும். அம்முறைக்கியைய 'குகன்' என்னும் நூல், குகனை மாணவர்க்கு நன்கு புலப்படுத்துவதோடு இராமாயணக் கதையின் பெரும் பகுதியையும் மாணவருக்கு ஞாபகமூட்டவும் வழிசெய்கிறது. இதனால் மாணவர் ஒரு கதாபாத்திரத்தினைப் பற்றிய பூரண அறிவைப் பெறுவதோடு பொதுவாகக் காவியம் முழுவதையுங் கற்கவும் வசதியேற்படுவதால் மாணவர்களுக்கு இருவித பயனை இத்தகைய நூல்கள் தரக்கூடும்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் வரிசையில் முன்னணியில் திகழும் அநுபவம் வாய்ந்த ஆசிரியர் திரு. சு. வேலுப்பிள்ளை அவர்கள், இந் நூலை, கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் கல்விபயிலும் 7ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கேற்ற முறையில் இனிய நடையில் எழுதியுள்ளார்கள். இந்நூல் ஷை வகுப்பு மாணவர்களுக்கு விடய அறிவைத் தருவதோடு வசனம் எழுதும் ஆற்றலையும் தரவல்லது என எண்ணுகிறோம்.

இனிய வசன நடையும், அரும்பத உரையும், பயிற்சி வினாவும் மாணவரை இலக்கிய வழிப்படுத்தப் பேருதவி புரியுமாதலால் ஆசிரிய, மாணவர் முன்னிலையில் இந் நூலைச் சமர்ப்பிக்கிறோம். ஆதரித்து வரவேற்பார்களென எண்ணுகிறோம்.

வணக்கம்

இங்ஙனம்

சுன்னாகம், — வட - இலங்கைத்

11-11-59 — தமிழ்நூற் பதிப்பகத்தார்

# முகவுரை

இராமாயணத்தில் நாம் பலவேறுவகையான கதா பாத்திரங்களைக் காண்கிறோம்: அரச குடியிற் பிறந்து அதி உன்னத குண இயல்பு படைத்த பரதன்; அதே குடியிற் பிறந்து தீவினைகள் பலவற்றுக்குக் காரணமாகிய கைகேயி; அரக்கர் குடியிற் றோன்றிப் பிறர்மனை நயந்த இராவணன்; அரக்கர் குடியிற் றோன்றியும் பாதகச் செயலைப் பொறுக்கலாற்றாது தன் சகோதரனை வெறுத்து இராமரை யடைந்த விபீடணன்; தீய அரக்க மகளிர் நடுவே காணப்பட்ட உத்தமி திரிசடை, என இவ்வாறு இன்னும் எத்தனை எத்தனையோ குணசித்திர கதாபாத்திரங்களைக் காண்கிறோம். இவர்களேயன்றி, தனக்கெனத் தனி இயல்புபடைத்த குகனும் இராமாயணத்தின் மூலம் நமக்கு அறிமுகமாகின்றான்.

குகன், இராமகாதையில் வரும் மற்றக் கதாபாத்திரங்களைப் போலப் பிறப்பினாலோ, பழக்கத்தினாலோ, தரிசனத்தினாலோ இராமபிரானிடம் அன்பு கொண்டவனல்லன். கானக மத்தியிலே, இழிந்த பண்புகள் வாய்ந்த வேடர் குலத்திலே, வெறுக்கப்பட்ட புறத்தோற்ற முடையவனாகத் தோன்றிய அவன், 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, அவனிருக்கும் வண்ணம் கேட்டு, ஆரூர் கேட்டு பிச்சியாகி, தலைப்பட்ட' அந்த நங்கையைப்போல, தானும் தன்னை இராமனுக்கு அருப்பணித்து அன்பினால் அடியனாயினான். அவனது அன்பு, இராமனைக் கண்டபோதும் அவனைப் பிரிய மனமின்றிப் பிரிந்தபோதும் பரதனைக் கண்டு சந்தேகித்தபோதும்—ஏன்; இராமகாதையின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் எங்ஙனுமே சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. அவனது புறத்தோற்றம் வன்மை மிக்கதாய் விளங்கிய

போதிலும் அகத்தோற்றம் அன்பு நெகிழ்ச்சியினால் மென்மை மிக்கதாய், தூயதாய் விளங்கியது. அதனால், குகன் யாவராலும் போற்றப்படத் தகுந்தவன்.

இந்த உன்னத பாத்திரமான குகனை மாணவர்கள் கண்டு, உணர்ந்து, அறிதல்வேண்டும் என்னும் ஆவலிற் பிறந்தது இந்நூல். அன்றியும், மாணவர்களின் இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டத் தூண்டும் ஒரு சிறு ஏது, இந்நூல் என்பதும் என் தாழ்மையான கருத்து.

சொல்வளம், இலக்கியப் பயிற்சிக்குப் பெருஞ் சிறப்புத் தருவது என்ற எண்ணத்தில் அருஞ் சொற்களின் விளக்கமும் மாணவர்கள் பெற்றுக்கொண்ட அறிவைப் பூரணப்படுத்தும் நோக்கில் பயிற்சி வினாக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேவையான இடங்களில் தக்க திருத்தங்களைச் செய்து பேருதவி புரிந்தவரும், என்னாற் பெரிதும் மதிக்கப்படுபவரும், சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியருமான பண்டித வ. நடராஜன் அவர்களுக்கும் இச் சிறுநூலைப் பார்வையிட்டு அன்புகனிந்த மதிப்புரை வழங்கிய எனது குருசிகாமணியாகிய பண்டிதமணி அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி என்றும் உரியது. இந்நூலை அழகிய முறையில் வெளிக்கொணர்ந்த சுன்னாகம், வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகத்தாருக்கு யான் பெரிதும் கடப்பாடுடையேன்.

இச்சிறு நூலை ஆசிரிய, மாணவ உலகம் உவந்தேற்கும் என்ற பூரண நம்பிக்கையில், அவர்களிடம் இதனைச் சமர்ப்பிக்கிறேன்.

நாவற்குழி
*11-11-59*

**சு. வே.**

திருநெல்வேலி, சைவாசிரிய காலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்** உவந்தளித்த

# மதிப்புரை

இராமாயணத்துக்குச் 'சோகராமாயணம்' என்று பெயரிடுவது பொருத்தம். இராமன் பச்சைக் குழந்தையாயிருக்கும்போது ஒருநாள் விசுவாமித்திரர் தோன்றுகிறார். தசரதனிடம் 'சோகம்' உதயமாகின்றது. அது மற்றொருநாள் அவன் உயிரையே வாங்கிவிட்டது.

இந்தப் பொல்லாத சோகத்தை அநுபவிக்கத் தக்க வகையில் இரசனை செய்தற்குப் பல்வேறு சந்தர்ப்பங்களும் பாத்திரங்களும் வருகின்றன. பாத்திரங்களுள் தொடர்பால் முந்தியதும், அன்புமயமானதும், 'நீவிர் ஐவீரும் ஒருவீர்' என்று கௌசலையாற் பாராட்டப்பட்டதுமான ஓர் உத்தம பாத்திரம் குகன்.

குகனை நடுநாடியாக வைத்துக்கொண்டு, சில உத்திகளை உபயோகித்து, இராமனது தோற்றம் முதல் முடிசூட்டுப் பரியந்தம் இராமகாதை முழுவதையும் ஒருவாறு சுருக்கித் தருகின்றது இந்தப் புத்தகம். அன்றி, கம்பராகிய பாற்சமுத்திரத்துக்கு ஒரு சிறு வழிகாட்டியாயும் அமைந்திருக்கின்றது இது.

இதன் நடை தெளிவானது; சில சந்தர்ப்பங்களில் முதனூற் சுவையை இயன்ற அளவு கொணர்தற்கு முயற்சி செய்கின்றது.

ஆசிரியர்களும் மேல்வகுப்பு மாணவர்களும் இதனைப் பயன்செய்வார்களாக.

**சி. கணபதிப்பிள்ளை**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிருங்கிபேரம் ... .. | 1 |
| 2. | குகனுஞ் சுற்றமும் .... ... | 6 |
| 3. | குகன் இராமனைக் கண்டமை ... | 9 |
| 4. | குகன் அயோத்தியில் நிகழ்ந்தன அறிதல் | 16 |
| 5. | காவல் வீரர் இருவர் .. | 25 |
| 6. | குகனை இராமன் பிரிந்தமை ... | 29 |
| 7. | பரதனைக் கண்ட குகனின் சீற்றம் .... | 36 |
| 8. | குகன் சீற்றம் தணிந்தமை ... | 41 |
| 9. | குகனுக்குப் பரதன் கூறியவை ... | 45 |
| 10. | குகன் பரதனைப் பாராட்டுதல் ... | 52 |
| 11. | குகன் பரதனை இராமனிடம் அழைத்துச் செல்லல் ... | 57 |
| 12. | குகனுக்கு அனுமான் கூறியவை ... | 67 |
| 13. | குகன் இராமனைத் தரிசித்தல் ... | 77 |
| 14. | குகன் முடிசூட்டு விழாவைக் கண்டு மீண்டமை .. | 82 |
| | அரும்பத விளக்கம் ... ... | 89 |
| | பயிற்சி வினாக்கள் ... ... | 101 |

# குகன்

## 1. சிருங்கிபேரம்

**பு**ண்ணிய பூமியாகிய பாரதநாட்டின் வடபால், கங்கை யெனப் பெயரிய ஆறொன்று பாய்கின்றது. அஃது, ஆழமும் அகலமும் நீளமும் மிக்கதாய் ஆறுகளுக்கு அரசு என்னுந் தன்மையுடையதாய் விளங்குகின்றது. அது திருமாலின் திருவடிகளைத் தீண்டியமையினாலே தெய்வத் திருநதி யெனவும், தன்னிடத்தே முழுகி எழுவாரது பாவத்தைத் தீர்ப்பதனாலே புண்ணியப் பெருநதி யெனவும் வழங்கப்படுகிறது.

அது, தன் புனிதநீரை மக்களுக்கு ஊட்டி அவர்களை வளர்த்தலின், தன் முலைப்பாலைத் தன் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்குந் தாயை ஒக்கும். அன்றியும், உணவுப் பொருள்களை ஆக்கி வளம் பல தந்து செல்வதனாலே, தன் குடும்பத்துக்குச் செல்வந் தேடித் தருந் தந்தையையும் ஒக்கும். இமயத்துச்சியிலே, தொடர்ந்து அடுக்கடுக்காகக் காணப்படும் பல குன்றுகள் பாம்புப் புற்றுகள்போலத் தென்பட, அவற்றினின்று புறப்பட்டுப் பள்ளங்களை நாடி வளைந்து வளைந்து செல்லுங் கங்கையாறு, புற்றினின்று புறப்பட்டு ஊர்ந்து செல்லும் பாம்பு போலக் காட்சி தரும். அந்நதி கடலோடு கலக்கும் அகன்ற இடம், அப்பாம்பின் படம்போலத் தோன்றும்.

அது கரைமருங்கு வளர்ந்த மூங்கிற் கழிகளுடன், மேட்டு நிலங்களிலே மெல்ல மெல்ல ஏறியும் பள் ளங்களிலே விரைவாக வீழ்ந்தும் பின்னர் அசைந்து அசைந்து இரைந்து வெண்ணுரை கக்கிக்கொண் டும் செல்வதனுல், தள்ளாமை காரணமாக மூங்கிற் கழிகளை ஊன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நெடுமூச்செறிந்து செல்லும் நரை திரை மூப்புக் கண்ட கிழவர்களையும் ஒக்கும். அன்றியும், அந் நதியிற் பெண்களின் திருமுகம் போன்ற செந்தா மரைகளும் கண்கள் போன்ற காவி மலர்களும் காதுகள் போன்ற கொடிவள்ளைகளும் தனங்கள் போன்ற நீர்க்குமிழிகளும் கூந்தல் போன்ற கொடிப் பாசிகளுங் காணப்படலால் அது அழகிய நங்கையை யும் போலும். அன்றியும், நானிலச் செல்வங்களையும் அள்ளிக்கொண்டு செல்வதனுல் அது வணிக மக் களைப் போலவும் விளங்கும். இவ்வாறு, அது நீதிவேந்தன் புகழ்போலவும் நல்லறத்தின் விளைவு போலவும் பரந்து சிறந்து காணப்பட்டது.

அக் கங்கைநதி குறிஞ்சிநிலத்திற் குதித்தோடும் போது, மலைச்சாரல்களில் மண்டிக்கிடக்குஞ் சந்தனம், குங்குமம், கோட்டம், வெட்சி, சுரபுன்னை, நரந்தம் முதலிய நறுந்தருக்களையும் அவற்றின்மீதுள்ள தேனிறுல்களையும் வாரிக்கொண்டு செல்வதனுல் அது செல்லுமிடமெங்கும் நறுமணங் கமழ்ந்து செல்லும். அது குறிஞ்சியைக் கடந்து பாலைநிலத்திற் பாயுங்கால் தனது அலைக் கரங்களை வீசிப் பேராரவாரஞ் செய்யும். அதனுல், கரையோரங்களில் வாழும் எயின மகளிர் அச்சங்கொண்டு வயிறலைத்து ஓட, அஃது அவர்கள் குடிலுட் புகுந்து ஆங்குள்ள அம்பை

யும் வில்லையுங் கவர்ந்து செல்வதனல், போர்மேற் செல்லும் ஒரு பெருவீரன்போற் காட்சியளிக்கும். அது முல்லைக்காட்டூடு செல்லுங்கால் ஆயர் குடிசை யுட் புகுந்து, ஆண்டுள்ள முளிதயிரையும் நறுநெய் யையும் வாரி, அயலிலுள்ள குருந்தையும் மருதை யும் ஒசித்து, மரக்கிளைகளில் உலரவிட்ட ஆய்ச் சியரது ஆடைகளைக் கவர்ந்து பாய்வதனல், பாலிய லீலைகள் பல புரிந்த கமலக்கண்ணனையும் ஒக்கும். முல்லையைக கடந்து மருதத்தையடையும் அந்நதி, ஆண்டுள்ள மடைக் கதவங்களில் மோதிப் பேரொலி செய்யும். அவ்வோசையைச் செவிமடுத்த மடைக் காவலர் கிணை என்னும் மருதப் பறையை யறைந்து மன்னர்களை யழைப்பர். அவர்கள் ஆண்டுக் கூடி, கங்கையைக் கடவுளெனப் போற்றி, மருதப் பண் பாடி மகிழ்வர். அது மடைவழியாகப் பெருகி வலை போல விளங்கும். பற்பல கால்வாய்களின்மூலம் பொய்கைகளையுந் தடாகங்களையும் ஏரிகளையும் நிரப்பி, சோலைகளையுஞ் செந்நெற்கழனிகளையும் நீர்ப்பாய்ச்சி, புல்லிய நெய்தல் நிலத்தூடு தவழ்ந்து சென்று மாக்கடலைத் தழுவும்.

இவ்வாறு கோசலமென்னும் நன்னட்டின் தென் னெல்லையாக விளங்கிய அக் கங்கைநதி, அந் நாட்டிற்கு நீர்வள மீந்து, நிலவளம் பெருக்கி, பல் வளந் தேக்கியது. அதனல், அஃது அந்நாட்டின் உயிரெனப் போற்றப்பட்டது. அங்குள்ளாரனைவரும் வறுமையறியாராகி எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்று இந்திரபோகமனுபவித்து வாழ்ந்து வந்தனர்.

அக் கங்கைநதியின் இருகரைமருங்கும் வானுற வோங்கிய வன விருக்கங்கள் மலிந்த பல காடுகள்

இருந்தன. அவற்றிலே சில, முனிவர்களின் தவப் பள்ளிகள் நிறைந்த தவ வனங்களாக விளங்கின. அம் முனிவர்கள் இல்லறம் பூண்டு, எளிமைசான்ற வாழ்வுடையோராய், தவவொழுக்கம் பேணி வாழ்ந் தனர். அவர்கள் மறுமையின்பம் விழைந்து கடவு ளரை வேண்டி வேள்வியியற்றியும் தம்மை வந் தடைந்த மாணுக்கர்களுக்குக் கல்வி பயிற்றியும் அருணெறி பேணி நின்றனர். அவர்கள் வாழ்ந்த ஆச்சிரமச் சூழலின் ஒருபால், கனிதரு மரங்களும் மருத்து மூலிகைச் செடிகளுஞ் செழித்து வளர்ந்திருந் தன. அவற்றின் புத்திளந்தளிர்கள் வேள்விப் புகையை யுண்டமையால், பன்னிறப் பொலிவோடு விளங்கின. இன்னொருபால், செடிகளும் கொடிக ளும் பூசனைக்குரிய புதுமலர்களைச் சுமந்து நின்றன. இடையருது முழங்கும் வேத வொலியைக் கேட்டுக் கேட்டு மரப் பொந்துகளில் வாழ்ந்த கிள்ளைகளும் பூவைகளும் வேதம் பாடின. பேணி வளர்க்கப்பட்ட மையால் இயல்பாகிய அச்சம் நீங்கப்பெற்ற மான்கள், தருப்பைப்புல்லின் புதுக் குருத்தைக் கறித்து அங்குமிங்கும் உலாவின. இவ்வித தன்மை களினுல், அவ் வனப்பிரதேசந் தூய்மையும் அமைதி யுந் திகழுந் தெய்வ சந்நிதிபோன்று விளங்கியது.

அவ்வனங்களிற் சில, வனவேடர் வாழும் ஊர்கள் நிறைந்தனவாக விளங்கின. அவற்றுட் சீருஞ் சிறப்பும் பெற்றது சிருங்கிபேரம் என்னும் பேரூராகும். அது கங்கையின் இரு கரைகளையுந் தன்னகத்துக் கொண்டது. ஆங்கு பல்லாயிரக்கணக்கான வேடர் கள் வாழ்ந்தனர். அவர்களது குடிலின் முன்றிலிலே நின்ற திரண்ட அடியையுடைய விளாமரங்களிலே

அங்காந்த வாயையுடைய வேட்டை நாய்கள் கட்டப் பட்டிருக்கும். அம் மரக்கிளைகளிலே தோலாற் செய் யப்பட்ட வார்களும் கண்ணிகளுந் தொங்கும். வேட்டுவச் சிறுவர்கள் எவ்வித அச்சமுமின்றி, வரிப் புலிக் குருளைகளோடுங் களிற்றிளங் கன்றுகளோடும் விளையாட்டயர்வர். வேட்டுவச் சிறுமகளிர் தாம் வளர்த்த மான் பிணைகளோடு ஆடிப் பாடி மகிழ்வர். வேட்டுவக்குழுவினரிடையே 'கொல்', 'எறி', 'குத்து' என்ற ஓசை மாத்திரமன்றி, துடிப்பறையினெலியுங் கொம்பினெலியும் ஆகுளி என்னும் ஒருவகை முழவின் முழக்குங் கேட்கும். அவ்வேடர் வேட்டை யாடலையும் ஆறலைத்துப் பொருள் வௌவலையுமே பெருந் தொழிலாகக் கொள்வர். சிருங்கிபேரம் ஆற் ரோரப் பேரூராகையால் அங்குள்ளார் அவற்றினெடு மீன்பிடித்தலையும் தோணி செலுத்தலையுந் தந் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

அச் சிருங்கிபேரத்திலே கங்கையின் வடகரையி லொன்றுந் தென்கரையி லொன்றுமாக இரு தோணித் துறைக ளிருந்தன. அதனுல், கங்கையின் ஒரு கரையிலுள்ளார் மறுகரையை யடையவேண்டின் சிருங்கிபேரத்திலுள்ள ஒருபடகுத்துறையை யடைந்து படகுமூலமே மறுகரையை யடைவர். அதனுல், ஒவ்வொரு தோணித்துறையிலும் அன்னமன்ன அழ கமைந்த பன்னூறு தோணிகளோடு அவற்றைச் செலுத்துந் திறலமைந்த பன்னூறு வீரர் நிற்பர். இக்காரணத்தினுலே சிருங்கிபேரம் யாவராலும் அறியப்பட்ட பிரதான இடமாக விளங்கியது.

## 2. குகனுஞ் சுற்றமும்

அச் சிருங்கிபேர நகரில் வாழ்ந்துவந்த வேடர்களின் தலைவனுக விளங்கியவன் குகன் எனப்படுவான். ஆறுகள் அனைத்தினும் கங்கை ஆழத்தால் மேம்பாடுற்று விளங்குதல்போல அவன், மக்களனைவரிலும் நீண்டுயர்ந்த பேருருவினை உடையவனுயிருந்தான். அவன், நீண்ட வலிய பாதங்களையுங் கறுத்த பாறைபோன்ற வலிமைசான்ற அகன்ற மார்பினையும் பனஞ்சிரும்புபோன்ற தடித்த கருமயிர் பொருந்தின முன்னங்கைகளையும் நெற்கதிர்போன்ற நெரித்த புருவங்களையும் உடையவன். அவனது காரிருள்போன்ற கரிய தலைமயிரும் எண்ணெயுண்ட இருண்ட கட்டமைந்த உடலும் பார்ப்போர் எவரையும் நடுக்குறச்செய்யுந் தன்மை வாய்ந்தன. சிரித்தலற்ற சீற்றஞ் சிந்தும் அவனது முகத்தில் அக்கினித் துண்டங்கள்போன்ற அவனது இரு கண்களுஞ் சுழன்றுகொண்டிருக்கும். மீனையும் ஊனையும் உண்பதால் அவன் வாய் எஞ்ஞான்றும் முடைநாற்றம் வீசும்.

அவனது பரந்த பாதங்களை வலிய தோற்செருப்புக்கள் அலங்கரித்தன. கணுக்கால்களில் வீரகண்டைகளும் தொடைகளிற் சல்லடங்களுங் காணப்பட்டன. அவன் புலிவால் தொங்கும் புலித்தோலை ஆடையாக அணிந்திருந்தான். அவனது அகன்ற பெரிய மார்பிலே சோகிகள் கோக்கப்பட்ட மாலைகள் காணப்பட்டன. இறுகக் கட்டப்பட்ட வாள்

அவனது அரையிலே தொங்கிற்று. அவன் குரல் கூற்றுவனையும் அஞ்சச் செய்யுந் தன்மையுடையதாய் இருந்தது. மழை முகிலின் இடியோசை போன்ற தொனியோடு பேசும் அவன் குரலைக் கேட்டமாத்திரத்தே, அவ்வேடர் அனைவரும் நடுநடுங்கிக் கை கட்டி வாய் பொத்திச் சேவகஞ் செய்யக் காத்து நிற்பர்.

குகனது சுற்றத்தினரான அவ் வேடர்கள் யானைத்திரள்போன்ற பெருவலியுங் பெருந்தோற்றமும் படைத்தவர்கள்; கடுங்கண் மறவர்; கல்லெனத் திரண்டு போரெனிற் பூரிக்குந் தோளினர்; கரிய நிறமுஞ் சுருட்டை மயிருமுடைய பயங்கரவுருவினர்; தந் தலைவன் ஏவியவண்ணம் ஏவியன முடிக்குந் திண்மையர்; குகன்பால் ஆராவன்புபூண்டு அவனுக்காகத் தம்முயிரையும் ஈயும் இயல்பினர்; தந் தலைவனுக்கன்றி மற்றெவர்க்குந் தலைவணங்காத் தன்மையர். அவர்கள் குகனது சுற்றத்தினர் மாத்திரமல்லர்; அவனது நற்குடிகளும் படைவீரருமாவர். அவர்கள் கையிலே வில்லும் அரையிலே வாளும் நெஞ்சிலே உரமுங் கொண்டவர். எப்படை எதிர்த்து வரினும் நிலைகலங்கா வியல்பினர். இயற்கையோடியைந்த வாழ்வும் அவ்வாழ்விலே விளைந்த வீரமும் அவ்வீரத்திலே பிறந்த இன்பமுமே அவர்களது வாழ்வை மகிழ்விப்பன. அதனால், அவர்கள் மனநிறைந்த செல்வர்களாக வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய பெருஞ் சேனை சூழக் குகன் வன பரிபாலனஞ் செய்துவந்தான். அவனையும் அவனது பெரும் படையையும் பார்த்த மாத்திரத்திலேயே

பகைவரனைவரும் நெறிகெட்டு ஓடி ஒளிப்பர். எப்பொழுதும் அவன்பின்னே பிளந்த வாயும் தொங்கிய நாவும் மடிந்த செவிகளுமுடைய வேட்டை நாய்கள் நிழல்போல அவனடியைத் தொடர்ந்து செல்லும். அப்பொழுது, கொம்பு, கொட்டு, பம்பை, துத்தரி முதலிய பலவகை வாத்தியங்கள் மனக்கிளர்ச்சியையும் வீரத்தையும் மிகுவிக்கும் வகையிலே இசையை எழுப்பும்.

குகன் தூய்மையும் அழகுமற்ற உடலினையுடைய இழிந்த வேடனேயாயினும், அவன் உள்ளம் தூய்மையும் பண்பாடும் பொலிந்து சிறந்து விளங்கிற்று. அவன் தூய கங்கைத் துறைகளிலே தோணியோட்டுந் தொழிலினன்; ஆயிரம் அம்பிகளுக் கதிபதி; குடியோம்பி, சுற்றந் தழுவி, முறைவேண்டிஞரையுங் குறைவேண்டிஞரையும் புரந்து, பகை கடிந்து, முறை செய்யும் விறல் வேந்தன்; அன்பு சுரக்கும் மாசிலா மனத்துடன் தெய்வத் திருவடி தொழும் தூயவன். அவனது கோல் கோடா நெறிமுறையிலே சிருங்கிபேரம் அமைதியும் வளனும் அளப்பருங் கீர்த்தியும் பெற்று விளங்கியது. ஆழ நீர்க் கங்கைக் கரையிலுள்ள தோணித்துறைகளில் அவன் படகோட்டுந் தொழிலை மக்கட் பெரும்பணியாக மதித்தனனேயன்றி, பெருநிதி திரட்டும் வாணிபமாகக் கருதிஞனல்லன். இத்தன்மைகளிஞல், சிருங்கிபேர நன்னகர்க் கிறைவஞன குகனது சீர்த்தி நாற்றிசையும் பரந்தது.

# 3. குகன் இராமனைக் கண்டமை

குகன் இவ்வாறு சிருங்கிபேரத்திலே அரசியற்று நாளிலே, அயோத்தியரசனாகிய தசரதராமன் தனது சிற்றன்னையாகிய கைகேயியின் சூழ்ச்சியினால் அரசிழந்து, தன் பெருந்தேவியாகிய சீதையோடுந் தம்பியாகிய இலக்குமணனோடும் வனம் நண்ணி, கங்கைக்கரையிலுள்ள மாதவர் வாழிடத்தை யடைந்திருந்தான். இராமனின் அரும் பெருங் குணங்களையும் பெருமைகளையும் வீரச்செயல்களையும் முன்னரே யறிந்து அவன்பாற் பேரன்பு பூண்டிருந்த குகன், தன்னூர் எல்லையில் இராமன் எழுந்தருளியுள்ளானென்பதனை அறிந்தான். உடனே இராமனைக் காணல் வேண்டுமென்னும் ஆவல் தோன்ற, தன் பரிவாரம் புடைசூழ, இராமன் எழுந்தருளியிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான். அரசன், குரு, தெய்வம் என்போரைத் தரிசிக்கச் செல்வோர் கையுறைப் பொருள் கொண்டு செல்வார்களல்லவா? ஆதலால் துவாரகாபதியாகிய கண்ணனுக்குக் குசேலமாமுனிவரின் மனைவியாகிய சுசீலை கொடுத்தனுப்பிய அவலைப்போல, குகனும் தனது அன்பிலே ஊறித் தித்திக்கும் மீனையுந் தேனையுங் கையுறைப் பொருளாகக் கொண்டு இராமன்பாற் சென்றான்.

இவ்வாறு தபோதனர் வாழிடத்தின் எல்லையை யடைந்த குகன், அங்கே சிறிதுநேரந் தாமதித்து நின்றான். தவவேந்தர்களான முனிவர்களின் ஆச்சிரமத்திற்குச் செல்லும்போது, அகமும் புறமுந் தூயராய்,

அடக்க வொடுக்கத்தோடு செல்லல் வேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்தகத்தெழுந்தது. அன்றியும், தவ வேந்தர்களும் தலைவணங்குந் தகைமைசான்ற அரசர்க்கரசனுகிய இராமன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு மிக மிகப் பணிவுடையவனுகவும் எளியனுகவும் அன்றோ செல்லல் வேண்டும். அதனுல், கண்ணுவ முனிவரது தவப்பள்ளிக்குச் சென்றபோது துஷ்யந்த மன்னன் தன் சேனையைப் புறத்தே நிறுத்திச் சென்றமைபோல, தன் படைவீரரை அங்கே நிற்கும்படி பணித்து, தன் கரத்தேந்திய வில், அம்பு என்பனவற்றையும், தன்னரையிலே தொங்கவிடப் பட்டிருந்த வாளையுந் துறந்து, மனத்துக்கண் மாசிலனுகிய குகன், இராமன் தங்கியிருந்த அந் நற்றவப் பள்ளியின் வாயிலை யடைந்தான்.

இராமனடியைத் தொழல்வேண்டு மென்னும் பேராவல் அவன்பாற் கரைகடந்துவிட்டபோதினும், அனுமதியின்றி உள்ளே செல்லுதல் அழகன்றுதலின், நெஞ்சிலே நிறைந்து விஞ்சுகின்ற அன்புப் பெருக்கோடு, இராமன் தங்கியிருந்த தவப் பள்ளியின் வாயிலில் நின்று, "இறைவ, இந்நாயடியேன் நுமது கட்டளைக்கமைந்து நும் பணிபுரிய ஈண்டு இப்பொழுதே வந்தேன்" எனக் கூவினுன்.

அக் குரலைக் கேட்ட இளவல், ஆச்சிரம வாயிலை யடைந்து ஆங்கு நின்ற குகனைக் கண்டான். அவன் குகனைக் கண்ட மாத்திரத்தே தன் நுண்மதிகொண்டு குகனது தூய இயல்பை யறிந்துகொண்டான். குகனது புறத்தோற்றம் வன்மையுடையதாய் அமைந்திருந்த

போதினும், அவனகத்துறைந்துநின்ற அன்பின் ஆழத்தை அவனது முகம் பளிங்குபோற் காட்டியது; தூரத்திலே நின்ற பெருஞ்சேனை அவனது சுற்றப் பெருமையைக் காட்டியது, இவற்றுல் குகனை நன்கறிந்து கொண்ட இளையபெருமாள் அவனை நோக்கி, "நீயார்? வந்த காரியம் என்ன?" என வினவினுன். அதற்குக் குகன் மிகப் பணிவோடு, சுருங்கிய சொற்களால், "தேவ, நின் திருவடி தொழுதற்கு வந்தேன்; நான் கங்கையில் ஓடம்விடும் வேடன்; என் பெயர் குகன்" என்று, விடை கூறினுன். அவ்வளவிலே இலக்குமணன் அவனது மனக்கருத்தை ஐயப்பாடெதுவுமின்றித் தெளிவாக உணர்ந்து, தணியாக் காதலனுகிய இவன், தேவதேவனுந் தன் தமையனுமாகிய இராமபிரானைக்கண்டு சேவிக்கவே வந்துளான் என எண்ணி, அவனை அவ்விடத்தில் நிற்கும்படி பணித்துவிட்டு, உள்ளே சென்றுன். சென்றவன் இராமனைப் பணிந்து, "கொற்றவ, நின் தாள்தொழும் பெருவிருப்பினனுய் ஒருவன் வாயிற்புறத்து நிற்கின்றுன். அவன் மனத்தூய்மை மிக்கவன்; தாயினும் நல்லவன்; தொகை மிகுந்த சுற்றத்தவன்; கங்கையிற் செல்லும் பல நாவாய்களின் தலைவன். அவன் பெயர் குகன்" என்றுன். அதனைக்கேட்ட இராமன் மிக விருப்புடன், "அப்படியாயின் அவனை என்னிடம் அழைத்து வருக" எனலும், இலக்குமணன் குகனையடைந்து "உள்ளே வருக" என்றுன். அம்மொழியைக் கேட்ட குகன், காந்தத்தினு லீர்ப்புண்ட இரும்பைப்போன்று, காற்றினும் மிக விரைந்து உட்சென்றுன்; கமலக்கண்ணனைத் தன் கண்களாற் கண்டான்; தான் பிறந்த பயன்பெறத் தன்னிருண்ட

குஞ்சி மண்ணிலே பொருந்துமாறு பணிந்தான். பின்னர் எழுந்து தனது குன்றனைய உடலைக் கூனிக் குறுக்கி, மிகுந்த பயபக்தியோடு செருக்குச் சிறிதுமின்றி, இராகவன் வாய்மொழியை எதிர்நோக்கி நின்றான்.

அப்பொழுது இராமன் தன் னருட்கண்களாற் குகனை நோக்கி, "ஈண்டு இருத்தி" என்று உபசரித்தான். ஆனால், இராமன் சொற்படி அவ்விடத்தில் இருப்பதற்குக் குகனது மனம் இடந்தரவில்லை. இராமன் எழுந்தருளியிருக்கும் அவ்விடத்தில் இராமனுக் கொப்பாகத் தானும் தரையிலே அமர்தல் அழகன்று, என்று அவன் எண்ணினான்போலும்! பின்னர், குகன் இராமனை நோக்கி, "தேவரீர் திருவமுது செய்தற்கு ஏற்றவண்ணம் நன்கு ஆராய்ந்தெடுக்கப்பட்ட மீனுந் தேனுங் கொணர்ந்துள்ளேன். இவற்றை அமுது செய்வதற்குத் தேவரீர் திருவுளம் யாதோ?" என்று கூறி, தான் கொணர்ந்த தேனையும் மீனையும் இராமன முன்னிலையில் வைத்தான். அப்பொழுது இராமன் தன்னருகிருந்த முனிவர்களைப் பார்த்து, 'இது தவத்தோர் வாழுந் தூய தவப்பள்ளி என்பதை எண்ணாது, இவ்விடத்துக்குத் தகுதியற்ற மீனையுந் தேனையுங் கொண்டுவந்த இவனது அன்பில் விளைந்த அறியாமை என்னே!' என்னுங் கருத்துத் தோன்றப் புன்முறுவல் பூத்தான். இராமன் மனதிலே அருளுணர்வு பெருகிற்று. மீனுந் தேனுங் கொண்டுவந்த குகனது மனநிலையை யுணர்ந்தான்; அன்பின் முதிர்ச்சியில் விளைந்த பத்தி மனநிலையைத் தெளிந்தான்; காளத்தி வேடனாகிய கண்ணப்பன்

கண்ணுதற் பெருங்கடவுளுக்குத் தான் சுவைத்த மிச்சிலாகிய ஊனை ஊட்டிய செயலை, கங்கை வேடனாகிய குகனது செயலிற் கண்டான். உடனே இராமன், "அப்பா, இப்பொருள்கள் என்மீது நீ கொண்ட அன்பின் அருமையை எடுத்துக் காட்டுகின்றன. பரிவுடன் கொணரப்பட்ட எப்பொருள்களுந் தூயன; தேடற்கரியன; அமிழ்தினுஞ் சிறந்தன. அவை எமக்குரியனவும் உவப்புடையனவுமாம். அவற்றை யாம் அருந்தினேமாகவே கருதிக்கொள்வாயாக" என்றான்.

"'அரியதாம் உவப்ப உள்ளத்
தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த தென்றால்
அமிழ்தினுஞ் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய தென்னில்
பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனெம் அன்றோ' என்றான்."

[கங்கைப்படலம் 43]

இவ்வாறு கூறிய இராமன் குகனை நோக்கி "அன்ப, யாம் இன்றிரவு இங்கு தங்கியிருந்து நாளைக் காலையிற் கங்கை நதியைக் கடப்போம். அதனால், இன்று நீ நின்னூர் சென்று, நின் கிளையுடன் தங்கியிருந்து வைகறைப்போதில் நாவாயுடன் வருவாயாக" எனக் கூறினான். அதனைக் கேட்ட குகன், இராமனைப் பிரிய மனமின்மையால், இராமன் சொற்படி செல்லாது கண்ணீர் மழை பொழியுங் கண்ணனாய் நின்றான். அவன் இராமன் திருவடிகளைத்

தொழுது, "ஐய, நீ பட்டுப் பீதாம்பர மணிந்து, பொன்னணி புனைந்து, மணிமுடி கவித்து, மாமன்னனாக விளங்குவதைக் கண்டு களிக்க வேண்டிய இந்தக் கண்கள், மரவுரியணிந்து, சடைமுடி தரித்து நிற்கும் நின் தவவடிவைக் காண்கின்றனவே! இஃது என் கண்கள் செய்துகொண்ட தீவினையேயாம். இத் தீவினை செய்த இக் கண்களைத் தோண்டித் தூர வீசி எறிவதுதான் யான் நின்னிடம் அன்புடையவன் என்பதற்கு அடையாளமாகும். அவ்விதஞ் செய்யாத இப்பாவி நின்னிடம் அன்புடையவன் போலத் தோன்றுவது வெளிவேடமேயாம். அதனால், யான் நின்னைவிட்டுக் கணப்போதும் பிரியேன்; என்னூர் செல்லேன்" என்றான்.

அதனைக்கேட்ட இராமன் சீதையையும் இலக்குமணனையுங் குறிப்பாக நோக்கினான். 'குகன் திராக் காதலன்; இவனன்பு அளவிடற்கரியது' என்ற குறிப்புப் பொருள் அந்நோக்கிலிருந்தது. பின்னர், இராமன் கருணை பொழியும் விழிகளாற் குகனை நோக்கி, "இனிய நண்பனே" என விளித்துக் கேண்மை காட்டி, "எம்மோடிருப்பாயாக" எனக் கூறியருளினான். அதனைக் கேட்ட குகன் ஆனந்த மேலீட்டினால் இராமனது பாதங்களிலே வீழ்ந்து வணங்கி எழுந்தான். இராமன் குகனது முகக் குறிப்புமூலம் அவனது மனக்கருத்தை யுணர்ந்து, இலக்குமணனைப் பார்த்து, "தம்பீ, யாம் அயோத்தியை விட்டுக் கானடைந்த வரலாற்றை அறியும் பெருவிருப்பினனாகக் குகன் நிற்கின்றான். அவனுக்கு அதைச் சொல்லுக" என்று கூறினான்.

அப்பொழுது மாலைக்காலமாயிற்று. பகையிருளை ஓட்டி, உலகைப் புரந்து, புகழ் பரப்பிய ஒரு வெற்றி வேந்தன் இறந்தமைபோல, பகல் முழுவதும் உலகை ஆட்சிபுரிந்த ஆதவன் குடபால் மறைதலும் இராமன் மாலைக் கடன் முடிக்கச் சென்றான். இலக்குமணனும் குகனும் அத் தவப்பள்ளி வாயிலை யடைந்து காவல் புரியத் தொடங்கினர். அப்பொழுது இலக்குமணன் குகனுக்கு அயோத்தியில் நடந்த துன்ப நிகழ்ச்சிகளையும் இராமனாதியோர் கானடைந்த பரிபவத்தையுங் கூறத் தொடங்கினான்.

# 4. குகன் அயோத்தியில் நிகழ்ந்தன அறிதல்

இலக்குமணன், இராமன் கட்டளைப்படி, அயோத்தியில் நிகழ்ந்தனவற்றையும், இராமன் கானடைந்த வரலாற்றையும் குகனுக்குக் கூறியதன் மூலம், குகன் அறிந்துகொண்டன இவை:

சக்கரவர்த்தியாகிய தசரதனது ஆட்சிக்குட்பட்டிருந்த கோசலம் என்னும் நாடு, கங்கை நதியின் வடபால் அமைந்திருந்தது. அக் கங்கைநதி அந்நாட்டிற்கு வளமூட்டிச் சென்றமையினாலே, அந்நாடு நிலவளமும் நீர்வளமும் பொருந்திச் செல்வமுஞ் சீரும் பெற்றுப் பொலிந்தது. அந்த நன்னாட்டின் கண்போல விளங்கியது அயோத்திமா நகரம். அதனைத் தலைநகராகக்கொண்டே, இரவிகுலதிலகமான தசரதச் சக்கரவர்த்தி அந்நாட்டைப் பன்னெடுங் காலம் பரிபாலித்து வந்தான்.

தசரதனுக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என மூவர் மனைவியர் இருந்தனர். தசரத மன்னனது சிறந்த தவபலத்தாலும் யாகத்தாலும் கோசலை வயிற்றில் இராமனும் கைகேயி வயிற்றில் பரதனும் சுமித்திரை வயிற்றில் இலக்குமண, சத்துருக்கரும் தோன்றினர். இராமனைக் கோசலை பெற்றனளாயினும், இளமை முதல் அவனைத் தன் மகன் போலக் கருதி வளர்த்துவந்தவள் அவன் சிற்றன்னையான கைகேயி ஆவாள். அவ்வண்ணமே பரதன், பெருந் தேவியாகிய கோசலையின் அரவணைப்பில்

வளர்ந்துவந்தான். இராமனுடன் இலக்குமணனும், பரதனுடன் சத்துருக்கனும் நிழல்போலவும் உயிர் போலவும் தினைத்துணைப்போதும் பிரியாராகிப் பேரன்புடையோராய் மகிழ்ந்திருந்தனர். அவர்கள் நால்வருந் திமிர்ந்த ஞானச் செருக்குடையோராக வும் குணநலம் மிக்கோராகவும் வெற்றி வீரர்க ளாகவும் விளங்கினர். அவர்களுள் மூத்தோனாகிய இராமன் இளவரசனாகிப் பெருஞ் சிறப்புப் பெற்று, கோசலநாட்டு மக்களினாலே அவர்தம் கண்மணி யாகப் போற்றப்பட்டான்.

தசரதன், தன் முதுமைத் தளர்வினாலும் பன் னெடுங் காலம் அரசபாரத்தைச் சுமந்த களைப்பினாலும் மிக வருந்தி, அரச வாழ்வைத் துறந்து, மறுமையின்பம் விழைந்து, தவம் புரியக் கருதினான். அதனால், சுமந் திரனைத் தலைவனாகக்கொண்ட தன் மந்திரிச் சுற்றத்தா ரோடும் குல குருவாகிய வசிட்டரோடும் ஆலோ சனை செய்து, மனு முதன் மரபு வழுவாது தன் மூத்த மைந்தனாகிய இராமனுக்கு மணிமுடி புனையத் தீர்மானித்தான்.

இராமனது முடிசூட்டு விழாவுக்குரிய நன்னாளைச் சோதிட நூல்வல்ல வேதியர் கணித்துக் கூறுதலும், வள்ளுவன் யானையின் பிடர்த்தலையிலே பேரிகையை யேற்றி முழக்கிக்கொண்டு, நகரத் திருவீதியெங்குஞ் சென்று, "நாளை, இராமன் பூமகள் கொழுநனாக மௌலி புனைவான். அவ்விழாவிற்காக நகரை யணி செய்க" எனக் கூறி, அச்செய்தியை யறிவித்தான், அதனைக்கேட்ட நகர மாந்தர் அமுதுண்டார்போன்று பெருங் களிப்புடையராகி ஆர்த்தனர்; ஆடிப் பாடிக்

களித்தனர்; இராமனுக்கு முடிசூட்டக கருதிய அரசனை வாழ்த்தினர்; அக்கணமே அவர்கள் அழகினுக்கு அழகுசெய்வார்போன்று, அவ்வணி நகரை அலங்கரிக்கத் தொடங்கினர்.

வானளாவிய மாடமாளிகைகள் எல்லாம் வெண்சுதை தீட்டப்பட்டமையால் தண்ணிலவெறித் தன. அந்த மாளிகைகளின் கோபுரவாயில்களிலே அணியணியாகப் பொலிந்த செம்மணித் தூண்களும் பவளத் தூண்களும் வெண்டுகில் போர்க்கப்பட்டு விளங்கியமையால் முறையே நீறணிந்த நிமலனையும் பனித்திரை மறைத்த பருதியையும் நிகர்த்துக் காணப்பட்டன. அவ்வாயில்களிலே குலைவாழை களும் கமுகுகளும் கட்டப்பட்டு, முத்துச் சரங்களும் மகர தோரணங்களுந் தொங்கவிடப்பட்டிருந்தன. தேரோடுந் திருவீதியெங்கும் நாட்டப்பட்டு, தென்றற் காற்றில் அசைந்தாடுஞ் சேலைக் கொடித் தொகுதி, வானவெளியிற்பறந்துதிரியும்பன்னிறப்பறவையீட்டம் போன்று காட்சிதந்தன. அந்நகர மாந்தர் வீதியிடங்க ளெங்கும் பனிநீர் தெளித்து, மணமலர் பரப்பினர்; வாசனைச் சுண்ணமும் முத்தும் பவளமுந் தூவினர்; பூரணகும்பம் பொலிவாக முன்வைத்து மணிவிளக் கேற்றினர். தன் மைந்தன் மௌலிபுனைவதனாற் பெருமகிழ்வெய்தும் தசரதனைப் போன்று அந்நகர முதியோர் அளவிலா மகிழ்வு கொண்டனர். மண மான பெண்கள், தன் கொண்கனது பெருவாழ்வை யெண்ணிப் பேரானந்தமடையுஞ் சீதையைப் போன்றனர். புத்திரர்களைப் பெற்ற பேரிளம் பெண் கள் இராமனைப் பெற்றெடுத்த கோசலையைப்போற் பூரித்தனர். அப்பொழுது பலதேசத்து மாமன்னர்களும்

நெடுந்தேரில் வந்து பட்டாபிடேக மண்டபத்தை யடைந்தனர். அவர்களையடுத்துச் சிற்றரசர்களுங் குறுநில மன்னர்களும் வந்தனர். அருமறை நன்குணர்ந்த அந்தணர்கள் அம்மண்டபத்தின் ஒருபால் அமர்ந்திருந்தனர். அப்பொழுது, வேதியர் நான்மறையோதிச் சூழ்ந்துவர, வசிட்டமாமுனிவர் அம்மணிமண்டபத்தை வந்தடைந்தார். அவர் முடி சூட்டு வைபவத்துக்குரிய கிரியைகளனைத்தையுங் குறைவற முடித்து, சிங்காசனத்தையும் உரிய இடத்தி லமைத்தலும், ஆண்டுக் கூடியிருந்த கணிதநூல் வல்லார் சுபவேளைவந்தடுத்ததென அவருக்குத் தெரிவித்தனர். அவர் மேற்கொண்டு ஆகவேண்டியன நிகழ்தற்பொருட்டுத் தசரதனை அழைத்துவரும்படி சுமந்திரனிடம் கூறினர். குருமொழியைச் செவி மடுத்த சுமந்திரன், சென்று தசரதனை அவனது மாளிகையிற் காணாது, கைகேயியின் அரண்மனையி லுள்ளான் என்பதை யறிந்து ஆங்குச் சென்று தான் வந்த செய்தியைப் பணிப் பெண்கள் மூலந் தெரிவித்தான். தெரிவித்தலும் கைகேயி சுமந்திரன் முன்னர்த் தோன்றி, "இராமனை அழைத்துவருக" என்றனள். சுமந்திரன் கைகேயியின் கட்டளைப்படி மாடவீதியனைத்தையுங் கடந்து, இராமனை யடைந்து, அவனைத் தொழுதுநின்று, "நின் சிற்றன்னை நின்னை அழைத்துவரும்படி பணித்தனள்; மகுடஞ்சூட விரைந்து வருக" என்றனன்.

இராமன் அரசவெள்ளங் கடல்போற் சூழ்ந்துவர வும், தேவகீதம் முழங்கவும், அருமறை நன்குணர்ந்த அந்தணர் வாழ்த்திசைக்கவும் பொன்மயமான

தேரேறிப் புறப்பட்டான். அவன் முதலில் தன் தந்தையின் திருவடிகளைத் தொழும் பெரு விருப்புடன் தசரதன் திருமாளிகையை யடைந்து, அவனைக் காணுளுகிக் கைகேயியின் அந்தப்புரத்திலுள்ளானென அறிந்து ஆண்டுச் சென்றுன்.

முதனுளிரவு, கைகேயி தன் மகனுன பரதன் நாடாளவும் இராமன் பதினுன்காண்டு காடுறையவும் வேண்டுமென, தசரதனிடம் அவன் எதிர்பாராதவாறு, தன் உயிர்த் தோழியான கூனியின் சூழ்ச்சியினுல், இருவரங்கள் பெற்றுள். அவ்வரங்களினுல் தான் ஏமாற்றப்பட்ட கொடுமையையுணர்ந்த தசரதன் தன்னுயிர்க்குயிரான இராமனின் பிரிவைப் பொறுக்கலாற்றுது உயிரற்றுன்போன்று உணர்வொழிந்து நிலமிசை வீழ்ந்து கிடந்தான்.

கைகேயியின் அரமனையை நோக்கிவந்த இராமன், வாயிலிலேநின்ற கைகேயியைக் கண்டு, தாயைக் கண்ட ஆன்கன்றை யொப்ப உருகி, தேரினின்றிழிந்து, தன் சென்னி மண்ணுற வணங்கி, எழுந்து, தன் செங்கையாற் பவளவாய் பொத்தி, துவண்டு நின்றுன். அவ்விதம் நின்ற இராமனை, இரும்பையொத்த நெஞ்சினளாகிய கைகேயி நோக்கி, "மைந்த, நின் தந்தை நினக்குத் தெரிவிக்க விரும்பும் உரையொன்றுளது" எனலும், "தந்தையே ஏவ, நீரே உரை செய்யின் அது யான்பெற்ற பெரும்பேறேயாகும். தாயுந் தந்தையும் நீரே; பணித்தருள்க" என்றுன். உடனே அவள், "'ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே யாள, நீ தவவேடந்தாங்கி, கானடைந்து ஏழிரண்டாண்டின்பின் வருக' என உன் தந்தை

பணித்தனன்" என்றாள். அதனைக் கேட்ட இராமன், எல்லையற்ற பெருங்களிப்பினால் அன்றலர்ந்த செந் தாமரை மலரை வென்ற முகமலர்ச்சியோடு, மீண்டுந் தன் தாயைப் பணிந்தெழுந்து, "அன்னாய், இது மன்னவன் பணியன்றி நும் பணியாயினும் யான் மறுப்பனோ? என் தம்பி பெற்ற அரச செல்வம் யான் பெற்றதேயாமன்றோ? எனக்கு இதனினும் மேம்பட்ட நன்மையுமுண்டோ? இன்றே வனம் போகின்றேன்; விடையுங் கொண்டேன்" என்று கூறி, கோசலையின் கோவிலை நோக்கிச் சென்றான்.

கவரியின்றி, கொற்ற வெண்குடையின்றி, மௌலியின்றித் தன்முன்னர் வந்து வணங்கிய இராமனைக் கோசலை கண்டு, "நெடுமுடி புனைதற்கு இடையூறுண்டோ?" என்று வினவினாள். அதற்கு இராமன் "நின் காதன் மைந்தனும் எம்பியுமாகிய பரதன் நாடாள்வான்" எனலும், பெருங்குணம் நிறைந்த கோசலை, "மூத்தோனிருக்க இளையோன் அரசாளல் முறைமையன்று என்பதன்றி, அவன் நின்னினும் நல்லன். அவனுக்கு அரசைக் கொடுத்து ஒன்றி வாழ்க" என்றாள். அதைக்கேட்டு மகிழ்ச்சியால் தழைக்கின்ற உள்ளத்தானாகிய இராமன், பின்னும், "என்னை நன்னெறியுய்ப்பதற்காக, கானத்திலே மாதவர்களுடன் பதினான்காண்டு வாழ்ந்து வரல் வேண்டும் என அரசன் அருளினன்" என்றான். இதனைக்கேட்ட கோசலை, பரதன் நாடாளலை விரும்பினளாயினும், இராமன் காடுறைதலைப் பொருளாய்த் துன்புற்று ஏங்கினாள்; பலவாறு அரற்றிப் புலம்பினாள். பின்னர், இராமன் பலபல நீதிமொழிகள்

புகன்று தேற்ற, ஒருவாறு தேறி, தன் மகன் காடேகா வண்ணம் மன்னனை வேண்டுவேனென எண்ணி, தசரத மன்னனிருந்த இடத்தை யடைந்தாள்.

கைகேயியின் மாளிகையிலே, தசரதன் உணர்வு சிறிதுமின்றி மயங்கிக் கிடத்தலைக் கண்ட கோசலை, அனல்மேல் நிற்பாளைப் போன்று துடித்து, வயிறலைத்துப் பெருங்குரலெடுத்துப் புலம்பத் தொடங்கினாள். அந்தக் குரலைப் பட்டாபிடேக மண்டபத்திற் கூடியிருந்த மன்னர்களும் முனிவர்களுங் கேட்டுத் துணுக்குற்றனர்; மங்கல வேளையில் அமங்கல ஒலி எழுங் காரணம் அறியாராகித் திகைத்தனர்; அந்தப்புரஞ் சென்று அத் துன்ப நிகழ்ச்சிக்குக் காரணம் யாதென அறிந்துவருமாறு வசிட்டரை ஏவினர். வசிட்டமுனிவர் அக்கணமே கைகேயியின் கோவிலையடைந்து, தன் செயல் சிறிதுமின்றி நிலமிசைக் கிடந்த வெந்திறல் வேந்தனையும் அவன் நிலைக்கிரங்காளாய்க் கவலையற்ற முகத்தினளாய் அயலே நின்ற கைகேயியையும் துணையிழந்த அன்றிலைப்போலத் தசரதன் நிலை கண்டு ஏங்கித் துடிதுடிக்குங் கோசலையையுங் கண்டார். அவர் கைகேயியை வினவி, ஆண்டு நடைபெற்ற துன்ப நிகழ்ச்சிக்குரிய காரணங்களை அறிந்து பெருந் துயரடைந்து, பின்னர், யாவும் விதியின் விளையாட்டேயெனத் தெளிந்து, மன்னவை வந்து சேர்ந்தார். அவரது பொலிவிழந்த முகத்தினைக் கண்ட மன்னரும் மற்றுமுள்ளோரும் எத்தகைய துன்பம் நிகழ்ந்ததோ என ஏங்கியிருக்கும்போது, அவர் அங்கிருந்தோரை நோக்கி, "கேகயன் மடந்தை தசரதனிடம் இருவரங்கள் பெற்று, ஒன்றினால் பரதனை

நாடாளவும் மற்றொன்றினால் இராமனைப் பதினான் காண்டு காடாளவுஞ் செய்தனள்" என்றார். அவ் வார்த்தைகளைக் கேட்ட யாவருந் தசரத மன்னனைப் போன்று அறிவு சோர்ந்து மயங்கி வீழ்ந்தனர். அத் துன்பச் செய்தி காட்டுத் தீபோற் பரவுதலும் மக்க ளனைவரும் உயிர் இழந்தார்போன்று மூர்ச்சித்துத் துன்ப சாகரத்துள் ஆழ்ந்தனர்.

கொடியாளாகிய கைகேயியிடம் விடைபெற்று, கோசலையைக் கண்டு தொழுதுவந்த இராமன், தசரத மன்னனின் இளந்தேவியாகிய சுமித்திரை யின் கோவில் நண்ணி, பெருந்துயர்கொண்டு வருந் தும் அன்னைளுக்குத் தேறுதல் கூறி விடைபெற்ற னன். இவ்விதம் எல்லாரிடமும் விடைபெற்று இரா மன் மீளும்பொழுது, கைகேயியனுப்பிய மரவுரி யாடையைப் பணிப்பெண்கள் கொண்டுவந்து கொடுத்தனர். இராமன் அதனை மனக்களிப்புடன் ஏற்று உடுத்து, தவவேடந் தாங்கி தன் தேவியான சீதையோடு தேரேறிக் காடு நோக்கிப் புறப்பட்டான். நகர எல்லையிலே, இராமனைப் பிரியமாட்டாது ஆறாத் துயர் கொண் டழுங்கும் சுமந்திரற்கு அறநெறிகாட்டி ஆறுதல் கூறி அனுப்பிவிட்டு, தென்றிசை நோக்கிக் கால்நடையாகச் சென்று, வளங்கொழிக்கும் மருத நிலத்தைக் கடந்து, கங்கைக் கரையிலுள்ள ஆரணி யத்தை யடைந்தான்" என,

இவ்வாறு, அயோத்தியிலே கைகேயியின் கொடிய சூழ்ச்சியினாலே இராமன் அரசிழந்து சீதை

யுடனும் இலக்குவனுடனும் வனமடைந்த வரலாற்றை இலக்குவன் மூலம் குகன் அறிந்தான்.

மணிமுடி புனைய விருந்த இராமன் அஃதின்றி மீண்ட அநீதியை அறிந்த இலக்குவன், ஊழிக்காலத்துப் பெருமேகம்போன்று உருத்தெழுந்து, போர்க்கோலம் பூண்டு. தந்தையையும் தாயையும் தம்முன் ஆகிய பரதனையும் வெறுத்து, அவர்களை எதிர்க்கும் எண்ணம்கொண்டு பலபல வீரமொழிகள் புகன்று, நாணொலி செய்து திரிய நாணோசையைக் கேட்ட இராமன், அவனிடம் விரைந்து வந்து அறிவுரை கூறி, தான் அரசிழந்தமைக்குத் தாயுந் தந்தையும் பரதனும் காரணரல்லர் எனவும் விதியே காரணம் எனவும் கூறி, அவனது பெருஞ் சினத்தை ஆற்றியவகையையும் குகன் அறிந்து பெருந் துயருற்றுக் கண்ணீர் சோர நின்றான்.

# 5. காவல் வீரர் இருவர்

குகன், இவ்வாறு அயோத்தி அரமனையிலே உருவாகிய கைகேயியின் சூழ்வினையையும் அதன் விளைவாக இராமன் வனமேகிய வரலாற்றையும் பிறவற்றையும் அறிந்தான். இதனால், இராமன் தன் தந்தையின் சொற்காத்தலையே பேரறமாகப் பேணி, கானடைந்து அவனைச் சத்தியவந்தனாக்கினான் என்பதையும் தானடைந்த பேரரசை முகமலர்ச்சியோடு பரதனுக்குக் கொடுத்தான் என்பதையும் நினைந்த போது, குகனது நெஞ்சம் கசிந்துருகியது. அதனால், இராமன்மேற்கொண்ட குகனது தணியாப் பெருங்காதல், அணைகடந்த வெள்ளம்போற் பெருகியது. அறத்தின் ஆணிவேரான இராமன், ஆரணியம் ஆள நேர்ந்ததே என்று உன்னுந்தோறும் அவனிரு விழிகளும் அருவிபோன்று கண்ணீர் உகுத்தன. 'ஆ! இப் பூமகள் பெருந்தவம் நோற்றுத் தனக்குத் தலைவனாக இவ் விராமனை யடைந்தும் அவனால் ஆளப்படும் பெரும்பேற்றை இழந்தனளே!' என அவன் எண்ணினான்.

அப்பொழுது மாலையாயிற்று. குகன் இராமனை விட்டுப் பிரிய மனமின்றி அவ்விரவை அங்கே கழிக்க நிச்சயித்தான். இராமனுந் தேவியும் மாலைக் கடன்களை முடித்துக்கொண்டு மாதவப் பள்ளியை யடைந்தனர். அரமனையிலே பசும்பொற் கட்டிலிலே பஞ்சணை மெத்தையிட்டு நாண்மலர் பரப்பிய படுக்கையிலே பள்ளிகொள்ளவேண்டிய இராமனுந் தேவியும்

தரையிலே நாணற்புல்லே பாயலாகவும் கையே தலையணையாகவுங் கொண்டு துயின்றனர். இலக்குமணன் ஆச்சிரமவாயிலிலே வில்லேந்திய கையோடு அவர்களைக் காத்துநின்றான். அவன் தன் கண்ணிமைகளை வருடிய நித்திராதேவியைப் பார்த்து "பதினன்காண்டுகள் கழித்து, நான் இராமனோடு அயோத்தியை அடையும்போது, அங்கே வந்து சேருக. இப்பொழுது என்னைத் துன்புறுத்தாது நீங்கிச் செல்க" என்றான். நித்திராதேவியும் அவன் வேண்டுகோளுக்கிணைந்து, அப்பாற் சென்றனள்.

இவ்வண்ணம் தன்னுயிரனைய அண்ணன் தன்னருமைத் தேவியோடு, பருக்கைக் கல்லிலும் புல்லிலும் படுத்துறங்குவதைக் காண இலக்குமணனின் உள்ளம் துன்புற்றது. நிறை, பொறை, அறிவு என்னுமிவற்றாற் பண்படுத்தப்பட்ட உள்ளம் படைத்த மாவீரனாகிய இலக்குமணனாற்கூட இராமனின் அப்போதைய நிலையைக் கண்டு சகிக்க முடியவில்லை. இராமனது பரிபவ நிலையை உன்னுந்தோறும் துன்பம் மேலும் மேலும் கிளர்ந்தெழுதலினாலே, அக்கினிப்புகையி லிடப்பட்ட பசுங்காய்போல அவனுள்ளம் வெம்பி வெந்தழிந்தது. இவ்வாறு வெம்பி வெந்தழிந்து நின்ற நெஞ்சினையும், துயிலை மறத்தலினாலே விழித்த கண்ணினையும் உடையனாய் நிற்குந் தம்பியாகிய இலக்குமணனின் தோற்றத்தையும் அதற்குக் காரணனான தலைமகன் இராமனின் நிலையையுங் கண்டான் ஆயிரம் அம்பிகளின் அதிபதியாகிய குகன். உடனே யானைத்திரள்போன்ற தன் வேட்டுவச் சுற்றத்தினரை அம் மாதவப் பள்ளி

யைச் சூழ்ந்துநின்று, பகைகடிந்து காவல்புரியும்படி பணித்து, உச்சியினின்றும் அருவியானது கீழே விழக் காணப்படும் ஒரு குன்றுபோல, தன் கண்களி னின்றுந் தாரைதாரையாகக் கண்ணீர் வீழ, தொடுத்த வில்லைத் தாங்கி ஆடாது அசையாது நின்றான். இவ் வாறு,

" தும்பியின் குழாத்திற் சுற்றும்
சுற்றத்தன், தொடுத்த வில்லன்,
வெம்பிவெந் தழியா நின்ற
நெஞ்சினன், விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித்
தலைமகன் தன்மை நோக்கி,
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான் "

*(கங்கைப்படலம் 54)*

ஆகிய குகன், இலக்குமணனைப் பார்த்து, 'ஐய, இந்த நாயடியேன் கண்ணுங் கவசமும் போல, தேவனையுந் தேவியையுங் காப்பேன். தாங்கள் சிறிது நேரம் கண்வளர்க" என்றான். அதற்கு இலக்குமணன், "அண்ணலுந் தேவியும் மண்ணிற் கிடக்கும் இப் புன்மையைக் கண்ட பின்னரும் இக் கண்கள் துயில்கொள்ளுமோ? உறக்கம் வருவதற்கு ஏதுவும் உண்டோ?" என்று மன வியாகுலத்துடன் கூறினான். அதைக் கேட்ட குகன் விம்மிதங் கொண்டு மேலே பேச இயலாதவனாய், இராமனை யுஞ் சீதையையும் மாத்திரமன்றி, இலக்குமணனை யுங் காத்து நின்றான்.

பொழுது புலர, உலகைப் போர்த்திருந்த கனத்த இருள் மெல்ல மெல்லக் கரைந்தது. சூரியனின்

செம்பொற் சோதி உலகை அணைத்து, ஒளிமய மாக்கி, அதற்கு உயிர்ப்பும் இயக்கமும் அளித்தது. இம் மாநில மக்கள், இறந்து இவ்வுலகை விட்டு நீங்குவது இவ்வாறெனக் காட்டுவான்போல முதனாள் மாலையில் மேலைத் திசையிலே மறைந்த சூரியன், அம்மக்கள் மீண்டும் பிறவியெடுத்து இவ்வுலகிலே தோன்றுவதும் இவ்வாறெனக் காட்டுவான்போல அன்று காலையிலே கீழ்த்திசையிலே மறுபடியும் உதயமானான். அந்தச் செஞ்ஞாயிற்றின் உதயத்தைக் கண்டு வாவிகளிலுள்ள கமலங்கள் மலர, இராமனாகிய கருஞாயிற்றைக் கண்டு சானகியின் வதனமாகிய கமலம் மலர்ந்தது.

இராமன் காலைக்கடன் கழித்து, கடவுள் பூசனை முடித்து, கங்கைக் கரையில் வாழும் தவமுனிவர்கள் பின் தொடரப் புறப்பட்டு, அம் மாதவப் பள்ளி வாயிலிலே எடுத்த வில்லோடும் தொடுத்த பாணத்தோடும் நிற்கின்ற எயினர் கோனாகிய குகனைக் கண்டான்.

# 6. குகனை இராமன் பிரிந்தமை

அப்பொழுது இராமன் கனிவோடு குகனை நோக்கி, "யாம் இக் கங்கையாற்றினைக் கடந்து அப்பாற் செல்வதற்கேற்ற வலுவும் விரைவும் வாய்ந் தனவாய படகுகளை விரைவிற் கொணர்க" எனப் பணித்தான். அதனைக் கேட்டுப் பெரிதுந் துன்புற்ற குகன் அருவி பொழியுங் கண்ணனாய், இராமனை விட்டுப் பிரிய மனமின்மையால், இராமனைப் பணிந்து, "கொய்து அடுக்கித் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்த இறைவனே, யாம் வசிக்குமிட மாகிய இவ்விடமும், தங்கள் பிதுர்வாக்கிய பரி பாலனத்துக்கேற்றவாறு வனமாகவே இருக்கிறது. தேவரீர் எம்முடன் நெடிதுநாள் வாழ்வதற்கேற்ற இயைபுமுடையேம். ஏனெனில், யாமும் மனம் வேறு செயல் வேறான பொய்யொழுக்கமில்லேம். யாம் எளியேமெனினும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களனைத்தும் எம்மிடம் நிறைந்துள்ளன. அவற்றைப் பெற்றுத்தரவும், குற்றேவல் செய்யவும், பகைகடிந்து நின்னைக் காக்கவும் நாயடியேமாகிய நாமுமுள்ளேம்.

ஐயனே, தேவரீர் திருவமுது செய்தற்குகந்த தேனுந் தினையும் இவ்விடத்தே மிகுதியாக உண்டு. அன்றியும் தேவர்தேவனாகிய கண்ணுதற் பெரு மான், கண்ணப்பன்பால் விரும்பியுண்ட ஊனை யொத்த தீஞ்சுவை ஊனும் உளது. நங்கை நல்லா ளொடும் நீர்விளையாடி மகிழ்ச்சியுற இனிய நீர்ப்

பெருக்குடைய கங்கையாறும், உலாவி விளையாட வானுற வளர்ந்த மரங்கள் செறிந்த பரந்த காடும் இருக்கின்றன. சங்கிலியாற் பிணித்துத் தொங்க விடப்பட்ட தூங்கு மஞ்சம்போல, பெருமரங்களைப் பற்றிப் பிடித்து வளர்ந்துள்ள கொடிகள், ஒன்றோ டொன்று பிணைந்து நிலனளவு பதிந்து படுத்து இனிய துயில்கொள்வதற்கேற்றனவாய் அமைந் துள்ளன. நண்பகல் வெம்மை தாக்காது உறைவதற் குத் தண்ணெனக் குளிர்ந்தனவுந் தூய்மை நிரம்பி யனவுமான கொடிப்பந்தர்கள் ஆங்காங்கு காணப் படுகின்றன. வனவாசகாலத்துக்கேற்ற உடையாகப் பட்டுத் துகில்போன்ற மென்மைவாய்ந்த தோல்களும் இங்குண்டு. இவையெல்லாவற்றையும் பெறுதற்குக் காற்றினுங் கடிதாகச் செல்லவல்ல கால்களும் வில்லைப் பிடித்துப் பகை கடியவல்ல கைகளும் எம்மிடமுள்ளன. நான் இட்ட கட்டளையை உடனே நிறைவேற்றுவதற்கு, ஐந்து நூறுயிரம் வேடர்களும் உள்ளனர். தாங்கள் விரும்பும் பொருள் மண் ணகத்தன்றி விண்ணகத்ததாயினும் அவற்றை விரை வாகக் கொண்டுவர நானும் படையும் உள்ளோம். இவற்றால் எம்மை உறவாகக் கருதி இவ்விடத்தே நீண்டகாலம் உறைவீராக" என்று குகன் கூறினன். கூறியவன், மேலும் இராமனைப் பணிந்து தன்னுள் ளத்தே தோன்றிய அன்புப் பெருக்கோடு, "ஐயனே, என்னுயிர் உள்ளவரையும் என்னூரில் உறைக; அன்றேல், நினது வனவாசகாலம் முடியுந்துணையாவது ஈண்டுத் தங்குக. அதுவும் நினது திருவுளத்துக் கேற்புடைத்தன்றாயின், இன்றொருநாளாயினுந் தங்கிச்செல்க. அதனால், யாம் பெறற்கரிய பெரும்

பேறு பெற்று ஈடேறியவர்களாவோம். எமக்கு அதனி னும் சிறப்புடைய வாழ்வு வேறில்லை" என்று கூறி மீண்டும் பணிந்தான்.

இவ்வாறு குகன் கூறிய மொழிகளைக் கேட்ட இராமன் அவனது உள்ளத்திற் பொங்கிவழிந்த பேரன்பைக் கண்டான். அந்த அன்பிலே மிகுந்த ஈடுபாடுற்று 'இவனன்பு எத்துணைத் தூய்மை வாய்ந் தது' என வியந்தான். மீண்டும் குகனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து, "வீர, இவ் வனவாசகாலத்திலே, யாம் பற்பல புண்ணிய நதிகளாடி, மாதவர்களை வழிபடும் பெருவிருப்புடையேம். அதனால், அப் புண்ணிய கருமங்களையாற்றி, பதினான்காண்டைக் கழித்து, அயோத்திக்குத் திரும்பும்போது உன்னிடம் வந்து தங்குவோம்" என்றான்.

அதனைக் கேட்ட குகன், எதிர்ப்பேச்செதுவு மின்றி, விரைவும் அழகும் வலியும் வாய்ந்ததொரு படகைக் கங்கையின் வடகரையிலுள்ள தோணித் துறைக்குக் கொணர்ந்தான். இராமன், மாதவர் திருவடி போற்றி, அவர்கள்பால் விடைபெற்று, சீதை யோடுந் தம்பியோடும் அதில் ஏறி அமர்ந்தான். படகின் ஒரு மூலையிலே இலக்குமணன் வில்லை யூன்றிய கையோடும் நிலத்தை நோக்கிய கண்ணோ டும் நின்றான். மறுமுனையிலே, குகன் இராமனை மனத்தகத்திருத்தி, போற்றிசெய்துகொண்டும் அவ னது சேவடிக் கொழுந்தை நோக்கிக்கொண்டும், துடுப்பை வலித்துப் படகோட்டினான். இராமனுஞ் சீதையும் எதுவித துன்பமும் அறியார்போன்று

கங்கைநீரை ஒருவர்மீதொருவர் எற்றி விளையாடி மகிழ்ந்தனர். அப்பொழுது அத்தோணி மடவன்னம் போலவும் கால்களையுடைய நண்டுபோலவும் நீர்ப் பரப்பின்மீது ஆடி அசைந்துகொண்டு, கங்கையின் தென்கரையிலுள்ள தோணித்துறையை அடைந்தது.

அப்பொழுது, இராமன் தனது அன்பனை நோக்கி, "சித்திரகூடமலைக்குச் செல்லும் நெறி யாது" என வினவினன். அதனைக் கேட்ட குகன், ஆற்றுமை மிக்க நெஞ்சனாய், இராமனைப் பணிந் தெழுந்து, தன்னையே அருப்பணஞ் செய்யும் தீவிர பத்தி நிலையோடு நின்று, "உத்தமனே, இப்பொழுது இந்த நாயடியேன் கூறுவதொன்றுண்டு; அதனைக் கேட்டருள்க" என்று இரந்து, "ஐயனே, யான் நின்னுடன் வருவதற்கு அருள் கூரல் வேண்டும். அங்ஙனம் வருவேனாகில் கல்லும், முள்ளும் நிறைந்து, செடியுங் கொடியும் பிணைந்து, கடத்தற் கருமையுடைய நெடுவழிகளைச் செம்மையுற ஆக்கித் தருவேன்; கனத்த இருளிலும் வழிகாட்டுவேன்; இனிய காயுங் கனியுந் தேனும் எங்கிருப்பினுந் தேடிக் கொணர்வேன்; வகைவகையான கிழங்குகள் உயர்ந்த குன்றினுச்சியிலுளவாயினும் தோண்டி எடுப் பேன்; பருகுவதற்கு ஏற்ற இனிய ஊற்றுநீர் எக் கானக மத்தியில் இருப்பினுந் தேடித் தருவேன்; எதிர்வரும் கடும்புலியையும் வெங்கட்சீயத்தை யும் விலக்கி, தேவரீர் வாழ்வதற்கேற்ற தூயவனப் பிரதேசத்தைக் காட்டுவேன்; அங்கு நீவிர் மகிழ்ந்து இனிதுறைதற்கேற்ற அழகமைந்த பருணசாலை சமைப்பேன். இன்னும் எவ்வெவை வேண்டுமோ

அவ்வவற்றை உடனுக்குடன் கொணர்வேன்; தங்களுக்குத் திருவுளச் சம்மதமானல் எனது பெருஞ் சேனையையும் உடன் கொண்டு வருவேன். எதிர்ப்படும் பகைஞர் எம்மினும் வலியராகார். வலிய ராயின் அவரொடு போராடி உயிர் துறப்பேன்; ஆகவே, தேவரீருடன் வருகிறேன்; தேவரீரைத் தினைத்துணைப்போதும் பிரிந்து உயிர்வாழேன்" என்று கூறி வணங்கி நின்றான்.

இராமன், தன் முன்னிலையில், அன்புப் பெருக் கினலே தியாகப் பேருருவினனுக நிற்கும் குகனை அருளொடு நோக்கினன். அன்புடையார்க்கு அன் புடையார் அடிமையாதல் இயல்பு; அதுவே உயரிய நிலை. இப்பொழுது இராமன் குகனின் தூய அன்பிற்கு அடிமையானன். அதனல், தான் வேறு குகன் வேறு என்று இராமன் எண்ணவில்லை; தான் உயர்ந்த அரசகுலத்துதித்தவன், அவனே இழிந்த வேடர் குலத்துதித்தவன் என்றும் எண்ணவில்லை; தான் பண்பிற் சிறந்தவன், அவன் பண்பிற்றழ்ந்தவன் என்றும் எண்ணவில்லை. எவ்வகை வேறுபாடுகளை யும் தூய அன்பு மறக்கச் செய்தது; அதனல் அவர்களிருவரும் ஓருருவாயினர். அந்நிலையில் மாசற்ற மனத்தனகிய இராமன் குகனை நோக்கி, "என் னுயிர் போன்றவனே, என்னருமைத் தோழனே" என, உரிமையோடு அழைத்து, இலக்குமணனைச் சுட்டிக்காட்டி, "என் இளவலாகிய இவன் உனக்கு இளையவன்; உன் தம்பி" என்றும், சீதையை நோக்கி, "பிறைச் சந்திரன்போன்ற நல்ல நெற்றியை யுடைய இவள் உன் சுற்றத்தவள்" என்றுங்

கூறினான். இவ்விதங் கூறிவந்த இராமனின் அருளுணர்ச்சி கரைகடந்துவிடவே, "கடல் சூழ்ந்த இந்நிலவுலகெல்லாம் உன்னுடையது. நான் உன்னடிமை" என்றான்.

> "அன்னவ னுரைகேளா அமலனு முரைநேர்வான் ;
> என்னுயி ரனையாய்நீ ; இளவலுன் னிளையான் ;இந்
> நன்னுத லவள்நின்கேள் ; நளிர்கட லிலமெல்லாம்
> உன்னுடை யதுநான்உன் தொழிலுரி மையினுள்ளேன்"
> [கங்கைப்படலம் 73]

என, இராமன் கூறக்கேட்ட குகன், உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் சொரிய, மெய்ம்மயிர் பொடிப்ப, விம்மிதமுற்று நின்றான்.

மேலும், இராமன் குகனை நோக்கி, 'அன்ப, முன்பு பிறப்பினால் எனக்கு மூன்று தம்பியர் இருந்தனர்; இன்றோ அன்புப் பிணைப்பினால் எனக்குத் தம்பியர் நால்வர் ஆயினர். முன்பு, பிறப்புரிமையால் நாங்கள் நால்வர்; இன்றோ நின்னொடும் ஐவர் ஆனோம்" என்றான். பின்னர், "காட்டில் தீங்கெதுவும் வாராது காத்தற்கு உம்பி இலக்குமணன் உளன். அவனது வில்லும் வில்வீரமும் உள. அவன் எம்முடன் வரும்போது எவ்வகைத் துன்பங்களும் எம்மை அணுகா" என்று, முன்னர் குகன் மனத்தெழுந்த அச்சத்தை நீக்கினான். மீண்டும், "நான் அயோத்திக்குத் திரும்பி வரும்போது நிச்சயம் உன்னிடம் வருவேன்; சொன்னசொற் கடவேன்" என, அவனுக்குத் தேறுதல் கூறினான். பின்னும் அவனை நோக்கி, "அன்ப, அயோத்தி மக்களைக் காத்தற்கு அங்கே உன் தம்பி பரதன் இருக்கின்றான்.

நீ என்னுடன் வந்துவிட்டால் இங்குள்ளவர்களைக் காத்தற்கு யார் இருக்கிறார்கள்? நீ என் சகோதர னாய்விட்டமையால் உன் சுற்றம் என் சுற்ற மன்றோ? ஆகவே, என் கிளையாகிய சிருங்கிபேர மக்களை என் ஏவலின்படி இனிது காக்க" என்றான்.

அதனைக் கேட்ட குகனது மனம் வெண்டிங்களைக் கண்ட கருங்கடல்போற் பொங்கி யெழுந்தது. அவன் இரண்டு கன்றினுக் கிரங்கும் ஓராவைப் போன்று, இராமனுடன் செல்ல விரும்பியும் இராம னது கட்டளைக்குப் பணிந்து நடக்க விரும்பியும் பெரிதும் துயருழந்தான்; பிரிவென்னும் கொடும் பிணியினாற் பீடிக்கப்பட்டு வருந்தினான். அப்பொழுது இராமன் குகனைவிட்டுப் பிரிந்து சீதையோடும் தம்பி யோடும் பருமரக் காட்டுள்ளே சென்று மறைந்தான். அவர்கள் சென்று மறையும்வரையும், அவர்களையே நோக்கியவண்ணம் செயலற்று உணர்வற்றுக் கருஞ் சிலைபோல நின்றான் குகன். பின்னர் பிரிவென்னும் பெரும் பாரம் தாங்கிய மனத்தோடு தன்னிருப் பிடஞ் சேர்ந்தான்.

"இராமன் என்னிடம் எப்போது வருவான்; அவன் அருளுருவை எப்போது காண்பேன்" என்று ஏக்கங்கொண்டு, கிளர்ந்து கிளர்ந்தெழும் பேராவலை மனத்தடக்கி, கடமைகளைக் குறைவறச் செய்து வாழ்ந்துவந்தான் குகன். அவன் தனது மனக்கிழி யிலே இராமனது அழகுத் திருவுருவை அழியா ஓவியமாகத் தீட்டி வணங்கி, நினைவெல்லாம் அவனே யாய் இருந்தான். இங்ஙனமாக நாள்கள் பல ஓடி மறைந்தன

# 7. பரதனைக் கண்ட குகனின் சீற்றம்

இராமனைப் பிரிந்தமையால் வருத்தமுற்றிருந்த குகன், ஒருநாள் கங்கையாற்றின் தென்பாலுள்ள காட்டிலே தன் சுற்றத்தினர் புடைசூழத் தங்கியிருந்தான். அப்பொழுது கங்கையின் வடபால், சேய்மைக்கண் தூசிப் படலமொன்று சுழன்று சுழன்று மேலெழுவதைக் கண்ணுற்றான். அது தடித்த பனிப் படலம்போல வானளாவிய வன விருக்கங்களையெல்லாம் மறைத்து, வெண்முகில்போலத் தோற்றமளித்து, மேலே மேலே எழுந்து வான்முகட்டைத் தொட்டது, மண்ணுக்கும் விண்ணுக்குமிடையே பெரும் பரப்புடைய வெண்டிரை தொங்கவிடப்பட்டதைப் போன்று காட்சியளித்தது. அதற்கு, அப்பாலுள்ள எப்பொருள்களும் கண்ணுக்குப் புலனாகா வண்ணம் கங்கைக் கரையை நோக்கி முன்னேறி வரும் தூசிப் படலம் பரந்ததொரு சேனையினது வரவின் அறிகுறியாகுமென்று குகனுக்குத் தெற்றெனப் புலனாயிற்று. அதனால், 'அது யாருடைய படை; அதுவும் இராமன் சென்ற அடிச்சுவட்டைப் பின்பற்றி வருவதற்குக் காரணம் என்ன?' என்னும் எண்ணம் மனத்தகத்தே எழ, இலக்குமணன் கூறிய அயோத்திச் சம்பவங்களுக்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாமெனக் குகனுக்குத் தோன்றியது. இராமன்மீது கொண்ட அளப்பரும் அன்பு இவ்வாறு குகனது அறிவைத் திரையிட்டு மறைத்தது. கைகேயி சூழ்ந்த சூழ்வினை அயோத்தியோ

டமையாது இராமன் சென்ற காட்டுக்குந் தொடர்ந்து வந்திருக்குமோவெனக் குகன் எண்ணினான். மேலும் சிந்தனைசெய்து, பரதன் தனது சேனையோடு இராமனைக் கொல்லவே வந்துள்ளான் எனத் துணிந்தான். 'ஆம்; எம்பிரானாகிய இராமனுக்கு நாட்டில் விளைத்த துன்பங்கள் போதா என எண்ணிக் காட்டிலும் இன்னல் செய்யவே இச் சேனை வருகிறது. இச் சேனை போர் குறித்தே வருகிறது. இது பரதனது சேனையே' எனத் தீர்மானித்தான். உடனே கோபம் ஒருருக்கொண்டாற்போன்று அவன் நிமிர்ந்து நின்றான். இயல்பாகவே கன லுமிழும் அவன் கண்களிற் கோபத் தீ சுடர்விட்டுக் கான்றது. நாசிப் பெருந்துளையிலிருந்து நீண்ட அனற் பெருமூச்சுப் பிறந்தது. நெற்றிப் புருவங்கள் வில்லெனக் குனித்தன, அமர் கிட்டியதென அவனது குன்றனைய திரண்ட தோள்கள் கிளர்ந்தன. பற்களை நறநறெனக் கடித்துக் காடதிரும்வண்ணம் ஏளனமாக நகைத்தான். துடிப்பறையைக் கொட்டியும் கொம்பை ஊதியும் படை வீரரைத் தன்பால் அழைத்து, "இதோ வருகின்ற இப் படைகள் எல்லாம் எலிக் கூட்டங்கள். யான் அதனை உண்ணும் பாம்புபோன்றவன்" என மகிழ்ச்சியோடு கூறினான். அப்பொழுது உலகில் வாழ்கின்ற வலிமைசான்ற புலிகளத்தனையும் ஒருங்கு திரண்டாற்போன்று, நாற்றிசையினின்றும் வந்த அவனது சேனாவீரர்கள் அவனயலிற் கூடினர்; பெருமுழக்கஞ் செய்து ஆரவாரித்தனர். வெந்திறல் படைத்த அக் கருங்கண் வேட்டுவர் தன்னைச் சூழ்ந்துவர, குகன் சிங்க ஏறுபோல நடந்து, கங்கையின் தென்கரை எல்லையை யடைந்து, தனது

வீரர்களை நோக்கி, "வீரர்களே, இராமனைச் சூழ்ச்சியி ஞலே கொல்லக் காட்டகத்தே வந்த படையை அழித்து வீரசுவர்க்கஞ் சேர்ப்பதற்கும் அயோத்தி அரசை இராமனுக்கு அளிப்பதற்கும் நான் தீர்மா னித்துவிட்டேன். நீங்கள் துடிப்பறையைக் கொட் டுங்கள்; நீரிலிறங்குந் துறைகளையும் மற்ற வழிகளை யும் அழியுங்கள்; தோணிகளை ஓட்டாதீர்கள்; கங்கைக் கரையே வருகின்ற அவர்களைப் பிடி யுங்கள்; வெட்டுங்கள்; கொல்லுங்கள்" என்று கூறினுன்.

இவ்வாறு கூறிய குகன் மீண்டும் தன் படை ஞரை நோக்கி, "அஞ்சனவண்ணனுகிய என் ஆருயிர்த் தலைவன் இராச்சியத்தை ஆளவிடாது, வஞ்சனையாலே அரசைக் கைப்பற்றிய பரத மகா ராசாவும் அவ்விராச்சியத்தோடமையாது இராமனைக் கொல்லவும் வந்துவிட்டாரே! இதோ என் கையிற் கிடந்து துடிக்கின்ற தீயுமிழும் வெஞ்சரங்கள் இவர்கள் மேற் செல்லாவோ? இவர்கள் என்னம்புக்குத் தப்பிப்போய்விடின் உலகோர் 'சி, குகன் ஒரு நாய்' என ஏசாரோ? என்னுதவியின்றி இவர் இந்த ஆழ மான நெடுந்திரையையுடைய யாற்றைக் கடந்து போவாரோ? நான் இவர்களது யானைப் படையைக் கண்டு அஞ்சி ஒதுங்கக்கூடிய வில்வீரனே? 'இந்த ஏழை வேடன் என் தோழன்' என்று இராமன் கூறிய வார்த்தை நன்கு மதிக்கத்தக்க ஒரு வார்த்தை யாகாதோ? இவர்களைத் தடுத்து நிறுத்தமுடியாவிட் டால், நான் உயிரையாவது விடவேண்டாவோ? அங்ஙனம் யான் செய்யாவிடின் 'இழிந்த வேடன்

இராமனுக்காகத் தன் உயிரை விட்டிலனே' என்று உலகோர் என்னை ஏசாரோ? அது நிற்க, இந்தப் பரதன், இராமன் தன் தமையன் என்பதையும் நினைத்தானில்லையே! அந்த இராமனைத் தொடர்ந்து நிழல்போல நீங்காது அவனைக் காத்துவரும் புலியேறனைய இலக்குமணன் ஒருவன் உளன் என்பதையும் மறந்துவிட்டானே! இவற்றை மறந்தா னாயினும் என்னை இவன் ஒரு பொருளாக மதி யாதது ஏன்? என்னையும் என் படையையும் வென்றன்றோ இவன் இவ்வெல்லையைக் கடக்க முடியும். இழிந்த வேடர் விடுஞ் சரம் உயர்ந்த அரசர் மார்பிற் பாயாவோ? புகழ் பழி; புண்ணியம் பாவம்; நட்பு பகை; நன்மை தீமை என்னுமிவைகளை இந் நிலவுலகத்தை ஆளும் அரசர்கள் தம் மனத்தினும் எண்ணமாட்டாரோ? என்னுயிரனைய ஸ்ரீராமன்மேல் இவர் படையுடன் செல்வது என் கையம்புக்குத் தப்பிய பின்னரன்றோ என் துணைவனை இராமன் காட்டிலே அருந்தவஞ் செய்ய இவன் பூமியை அரசாள்வானே? என் உயிர் தேவா மிர்தமோ? அன்று, என்னன்பன் உடுப்பதற்கு மர வுரி கொடுத்தனுப்பிய பாதகக் கைகேயியின் மக னை பரதனது படையனைத்தையும் என் கையம்பி னாற் கொல்லேனே! கொன்று குவித்த பிணக் குவையினால் ஆழநீர்க் கங்கையைத் தூரேனே! இவர்களைக் கொன்று அடையும் புகழுக்காக எனது உயிரை விடமாட்டேனே? என்னுடன் மிகுந்த நண்பு பாராட்டிய இறைவனாகிய இராமனுடன் அன்று கூடிச் செல்லாது நான் தங்கியிருந்ததுவும் நல்லதாய்விட்டது. இன்றுடன் இராமனுக்குரிய நட்புக் கடனைக் கழிப்பேன்'' என முழங்கினான்.

பின்னரும் குகன் தனது வீரர்களை நோக்கி, "எனதன்பான தோழர்களே, மாவீரர்களே, ஆடுகின்ற கொடிகளுடன் வெள்ளம்போல்வருகின்ற அப்படையைப் பாருங்கள். அது பரதனது படை; அறத்துக் கெதிரான மறப்படை; மறவினைகொண்ட பரதன் அறவினைபூண்ட இராமனுக்கெதிராக எடுத்த படை. அப் படையை எதிர்த்தல் மறத்தையே எதிர்த்தல் போலாம். அப்படையைச் சாடி, பரதனை அழித்து, அருளாளனை இராமனை உலகாளும்படி செய்வோம்; அறத்துக்குத் துணைசெய்வோம். அவ்வித செயலினால் மங்காப் புகழ் பெறுவீராக. தனக்கு ஆட்சிபுரிய நாட்டையீந்த என் நாயகனுக்கு இவர் காட்டில் வதியும் உரிமையையுங் கொடுக்க மனமின்றி வந்துள்ளமையை உணர்ந்து பார்ப்பீராக. ஆகவே, இவர் கங்கையைக் கடந்து அப்பாற் செல்லாவண்ணம் ஓடங்களனைத்தையுந் துறையினின்றும் விலக்கி வைப்பீராக. இவர் எம்மினும் வலியரானால் யாது செய்வதென அஞ்சல் வேண்டா. அங்ஙனம் வலியரானால் இராமனின்முன் இவருடன் யாம் பொருது உயிர்விடல் நன்றன்றோ? அஃதன்றோ வீரர்க்கு அழகு" என்று இடியோசைபோல ஆர்த்து, ஏறு போல் நடந்து, தனது பரிவாரம் புடைசூழ்ந்து ஆரவாரித்துப் பேரொலிசெய்ய, பரதனது பெரும்படை ஆற்றைக் கடந்துவருதலை எதிர்நோக்கி, கங்கையின் தென்கரையோரமாக வந்து நின்றான்.

# 8. குகன் சீற்றம் தணிந்தமை

இவ்வாறு குகன் கங்கையின் தென்துறை யிலே கோபாவேசத்தனுக நிற்கும்போது, பரதன் தனது சேனை தன்னைப் பின்தொடர, வடகரையி லுள்ள தோணித்துறையை நோக்கி வந்துகொண் டிருந்தான். அவனயலிலே அவன் தம்பியாகிய சத்துருக்கனும் தலைமையமைச்சனுகிய சுமந்திரனும் வந்தனர்.

சுமந்திரன் உற்றதுகொண்டு மேல்வந்துறுவதை உணரும் மதிமந்திரி; நூலறிவும் நுண்மதியும் பரந்த அனுபவஞானமு முடையவன். தன்னுயிர்க்கு உறுதியை எண்ணுது தன் தலைவன் வெகுண்டபோதும், அவ்வெகுளியைத் தாங்கிநின்று, தன் தலைவனுக்கு உறுதிபயப்பனவற்றையே புகலும் வீரன். அவன் தனது ஒற்றர்படைமூலம் எங்குமுள்ள எல்லாச் செய்திகளையும் அறிவான். அதனுல் உலகெங்கும் கண்ணுடையான். அவன் கோசலநாட்டின் எல்லைப் பிரதேசமான சிருங்கிபேர நன்னகரைப்பற்றியும், அதன் தலைவனுன குகனைப்பற்றியும், குகனுக்கும் இராமனுக்கும் ஏற்பட்ட தொடர்பைப்பற்றியும் அறிந் திருந்தான். அத்தகைய சுமந்திரன் முற்கூறியவாறு கங்கையின் தென்துறையில் நின்ற குகனைக் கண்டு, பரதனை நோக்கி, "ஐய, அதோ, அக்கரையில் வேட்டுவப்படை புடைசூழ நிற்கும் அவன், கங்கை யின் இருகரைகளுக்கும் உரிமையுடையான். எண்

ணற்ற நாவாய்களின் தலைவன்; வேடர்களின் வேந்தன்; வில்லேந்திய பரந்த சேனுசமுத்திரத்தை யுடையவன்; மலைபோன்ற திண்மைவாய்ந்தவன்; இருளனைய கரிய, அழகமைந்த மேனியையுடையவன்; எவற்றினும் மேலாக எங்கள் குலத்தனிநாதனுன இராமனின் உயிர்த்துணைவன்; அவன்பாற் கரைகாணுக் காதலுடையவன்; அவன் பெயர் குகன். அவன் நின்னைக்காணும் பெருவிருப்பினனுய் அதோ நிற்கின்றுன்" எனக் கூறிநின்றுன்.

குகன் இராமனின் உயிர்த்துணைவன் என்பதைக் கேட்ட அக்கணமே, பரதன், கண்கலங்க, நாத்தழுதழுக்க, "என் அண்ணுலே தழுவப்பட்டு அன்பு பாராட்டப்பட்ட தோழனுயின், அவன் என்னைக் காண ஈண்டு வருவதன் முன்னர், யானே அவனைக் காண ஆண்டுச் செல்வேன்" என்று கூறி சேனைகளைப் புறம்பே நிற்கும்படி பணித்துவிட்டு, பேரன்பினனுய், தனது தம்பியாகிய சத்துருக்கனேடு, கங்கையின் வடகரையிலுள்ள தோணித் துறையை யடைந்து நின்றுன்.

பரதனும் சத்துருக்கனும் சேய்மைக்கண் வந்தமையாலும், தூசிப்படலமும் சேனைக் கூட்டமும் மறைத்திருந்தமையாலும் அவர்களை முன்னர் தெளிவாகக் குகன் கண்டானல்லன். இப்பொழுது அவை யொன்றுமின்மையால், அவ்விருவரது உருவங்களும் குகனுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தன. சேனையை நிறுத்திவிட்டு வந்த அவர்கள் செயலையுந் தனக்கு எதிர்க்கரையில் நிற்கும் அவர்கள் தோற்றத்தையும் குகன் ஊன்றி நோக்கினுன்,

குகன் தனது கற்பனைக்கண்கொண்டு எதிர் பார்த்திருந்த பரதனை அங்கே கண்டானல்லன்; முற்றும் மாறுபாடுடைய தோற்றங்கொண்ட அன்புப் பரதனையே அவன் கண்டான். தன் அண்ணனுடன் போர்புரிய, போரணி அணிந்து, மேனியிற் போர்க் கவசம் பூண்டு, வீரக் கழல் ஒலிசெய்ய, அரையிலே வாள் வீக்கி, வில்லும் அம்புந் தாங்கிய கோலமாய்ப் பரதன் வருவான் என, எதிர்பார்த்திருந்த குகன் அவனது அப்போதைய நிலையைக் கண்டதும் திகைத்து நின்றான்.

பரதன் மரவுரியை ஆடையாக அணிந்திருந் தான். புழுதியிற் படுத்துறங்கியமையாலும் நெடுந் தூரம் நடந்துவந்தமையாலும் அழகுவாய்ந்த அவன் திருமேனி முழுவதும் புழுதி படிந்திருந்தது. பதினாறு கலைகளையும் இழந்துவிட்ட சந்திரனைப் போன்று, அவன் முகம் களை இழந்து காட்சிகொடுத்தது. வலிய கருங்கல்லுங் கசிந்துருகும்படியான மிகுந்த துயர முடையானாக அவன் விளங்கினான். இத்தகைய தவவேடத்தைப் பொருந்திய,

"வற்கலையின் உடையானை; மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியன்ன நகையிழந்த முகத்தானை
கற்கனியக் கனிகின்ற துய" ருடைய பரதனைக்

குகன் கண்ட மாத்திரத்தே, துயிலுங் குழந்தை தான் கைப்பிடித்திருந்த பொருளைத் தானறியாது வழுவ விடுதல்போல, தன்கையிற் பிடித்திருந்த வில்லானது தன்னையறியாது நிலத்திலே வீழ, கலங்கிச் செய லற்று நின்றான்.

சிறிதுநேரத்தின்பின், குகன் தன் சுயவுணர்வு பெற்றபோது அவன் மனதில் ஒன்றன்பின் ஒன்ருகப் பற்பல சிந்தனைகள் எழுந்தன. 'ஆடவரிற் சிறந்தவனுகிய பரதனும் என் தலைவனுகிய இராமபிரானையே ஒத்திருக்கின்ருன். இவனயலிற் காணப்படும் மற்ெருரு தம்பி, இராமனைப் பிரிதலில்லாத தம்பியாகிய இலக்குமணனைப் போலவே தோன்றுகின்ருன். அன்றியும் இராமபிரான் கொண்ட தவவேடத்தை யொத்து, இப் பரதனும் தவத்தினர்க்குரிய தவவேடம் உடையவனுய்க் காணப்படுகின்ருன். இவன் அடைந்துள்ள துன்பத்திற்கோர் எல்லையில்லைப்போலத் தோன்றுகின்றது. இராமன் சென்ற தென் திசையையே நோக்கித் தொழுகின்ருன். இவற்ருல் பரதன் இராமனுடன் சமர்விளைக்கும் எண்ணம் அணுவளவுமின்றி அவனைப் பணிந்து அன்பு பாராட்டவே வந்திருக்கின்ருன். அறச் செம்மலான இராமனின் பின்பிறந்தவர்களும் தீ நெறிக்கட் சென்று பிழைசெய்வார்களோ!' என, தன் மனத்துள் எண்ணி, வியந்து தனது படைவீரர்களை நோக்கி, "நான் அக்கரை சென்று உண்மைநிலைமையை அறிந்துவருகின்றேன். அவ்வளவும் நீவிர் யாவீரும் இவ்வழியைப் பாதுகாத்திருங்கள்" என்று கூறி, குளிர்ந்த கங்கையின் தென்கரைத் தோணித்துறையிலுள்ள ஒப்பற்ற ஒரு தோணியில் தான் தனியனுக ஏறிப் பரதன் நின்ற வடகரையை நோக்கிச் சென்ருன்.

## 9. குகனுக்குப் பரதன் கூறியவை

தனி யொருவனாகத் தோணி யொன்றைச் செலுத்திக்கொண்டு தான் நின்ற கங்கையின் வட கரையை யடைந்த கிராதர் தலைவனான குகனைப் பரதன் பார்த்தான்; இராகவன்மீது ஆராக்காதல் கொண்ட அக்குகன் தன்னைக் குறுகுமுன்னர், தான் அவனை எதிர்கொள்ளல்வேண்டும் என்னும் பெரு விருப்புடன், தொழுத கையனாகக் குகனிடம் வந்தான். பரதனது செயலினால் அவனது மாசுமறுவற்ற தூயமனதைக் குகன் கண்டு, அவன் வருவதற்கு முன் விரைந்துசென்று, அவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்தான். அவனது பணிவையும் தூய அன்பையும் பார்த்த பரதன் விம்மிதமுற்று மெய்ம் மறந்து நின்றான்; தன்னுயர்குடிப்பிறப்பையும் தான் பாராளும் பார்த்திபன் என்னும் தகைமையையும் மறந்தான்; இழிதகைமைவாய்ந்த வேட்டுவனை வணங்கல் நன்று, அன்று என்ற எண்ணத்தினையும் மறந்தான். அக்கணமே அவன் குகனது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவ்வாறு தன்னை வணங்கிய பரதனைக் குகன் கட்டித் தழுவிப் பேரானந்தங் கொண்டான். அப்பொழுது, அங்கே பரதனும் குகனும் களங்கமற்ற தூய அன்பினாற் பிணைக்கப்பட்டு, உயர்வு தாழ்வு என்னும் பேதங்கடந்து சமத்துவ நிலைபெற்றுத் தோன்றினர்.

பின்னர், குகன் பரதனை நோக்கி, "வீர, மாமன்னராகிய தாங்கள் தவக்கோலந்தாங்கி இவ்

வெங்கானடையக் காரணம் யாதோ? அதனை இவ் எளியேன் அறிதல் தகுமோ?" என்று கேட்க, பரதன், "அன்ப, பாரனைத்துஞ் செங்கோன்முறை வழுவாது ஒருகுடைக்கீழ் ஆண்ட எந்தை, யான் அயோத்தியிலில்லாதபோது, குலமுறைதவறி அரசுரிமையை எனக்கு நல்கினன். அம் முறைகேட்டை நீக்கி, என் முன்னவனை அழைத்துச் செல்லவே இங்கு வந்தேன்" எனக் கூறி, அயோத்தியில் நடந்தனவற்றை விரித்துரைக்கத் தொடங்கினன் :

"அயோத்தி அரமனையிலே இவ்வித முறைகேடு நிகழும்போது, நான் அங்கில்லை. அங்கிருந்தால் குலவொழுக்கம் என்பொருட்டுக் குன்றுதலைச் சிறிதேனும் பொறுத்திரேன். என்னுயி ரீந்தேனும் அதனைக் காத்திருப்பேன். அந்நாள், நான் என்னன்னை பிறந்த பொன்னுடாகிய கேகயநாட்டிலே, எனது பாட்டனின் அரமனையிலே எம்பி சத்துருக்கனோ டிருந்தேன்.

"ஒருநாள், அயோத்தியிலிருந்து வந்த தூதுவர், அரச இலச்சினை பொறிக்கப்பட்டதோர் திருமுகத்தை என்னிடந் தந்தனர். அதனைக் கண்ணுற்றபோது எந்தையையும் எம்முனையும் நேரிற் கண்டாற் போன்று மிக மகிழ்ந்து, அதனை விரித்து வாசித்தேன். அதில், 'கைவிஞ்சிப்போகின்ற காரியமொன்று நிகழ்ந்துளதால், இது கண்டவுடன் விரைந்துவருக' என எழுதப்பட்டிருந்தது. அம்முடங்கலிற் குறித்த பொருள் தெளிவற்றதாயினும் இராமனுதியோரை விரைந்து காணுதற்காகவே அது வந்ததெனக் கருதி, நாளும் கோளும் நன்னிமித்தமுமாகிய எவையும் நோக்காது, எம்பியுடன் தேரேறிக் கோசலநாடு நோக்கிப் புறப்

பட்டேன். எழுநாட்களாகக் கானும் மலையும் கடும் பாலையும் கடந்து, எட்டாம்நாட் காலையிற் கோசல வளநாட்டின் எல்லையை யடைந்தேன். கோசலநாட் டைக் கண்டபோது என்மனந் துணுக்குற்றது. அது பொலிவிழந்ததோர் பொற்பாவைபோன்று கவினழிந்து காணப்பட்டது. சோலைகளிலே தீஞ்சுவைக் கனிகள் யாவும் பறிப்பாரின்மையால் அழுகி நிலத்தில் வீழ்ந்து கிடந்தன. தேன் சிந்தும் மணமலர்கள், கொய்யப் படாமையால் மூக்கவிழ்ந்து உதிர்ந்து கிடந்தன. சில விடங்களில், செந்நெல் பக்குவ காலத்தில் அறுவடை செய்யப்படாமையால் நிலத்தில் வீழ்ந்து முளை கொண்டு காணப்பட்டது. சிலவிடங்களில் வள மான பசும்பயிர்கள், மடைக் கதவங்களைத் திறந்து நீர்ப்பாய்ச்சுவார் இன்மையால் வாடிக் கிடந்தன. அக்காட்சி உலோபிகளான செல்வர்களின் மனையில், பொருள் பெருது வாடி நிற்கும் இரவலரைப்போலத் தோன்றியது. பள்ளர் குடியிருப்புக்களிலே பேரி என் னும் முழவதிரவில்லை. பாட்டொலியும் குழலொலி யும் அதனைத் தொடர்ந்து ஆடும், ஆடன் மகளிர் சதங்கை யொலியுங் கேட்கவில்லை. அந்நாட்டு மக் களின் அழகிய முகங்கள் மனமகிழ்ச்சியின்மையாற் சிரிப்பிழந்து காணப்பட்டன. மாளிகைகள், நறுமணங் கமழ்ந்து மேலெழும் அகிற்புகை நீங்கப்பெற்று, வறிதே நின்றன. எங்கெங்குமுள்ள தீபங்கள் யாவும், நெய் வற்றியமையால் ஒளியிழந்து மங்கிக் கிடந்தன. ஆங்காங்கு காணப்பட்ட மகளிரது கூந்தல், தேன் பிலிற்றும் மலரிழந்து பொலிவழிந்து தோன்றின.

"இவ்வாறு நாவினுற் சொல்லுகற்கரிய வளம்பல நிறைந்த அந்நாடு, திருமகள் நீங்கிய மலர்போலப்

பொலிவிழந்து, ஆவி நீங்கிய உடல்போல உயிர்ப் பின்றிக் கிடந்தது. கோசலநாட்டின் பொலிவழிந்தநிலை என்மனதிற் பெருந்துயரை விளைத்தது அயோத்தியில் யாதோ ஒரு துன்ப நிகழ்ச்சி நிகழ்ந்துள்ளது என என் மனம் எண்ணியது. உடனே மிகு விரைவாகச் சென்று அயோத்திநக ரெல்லையை யடைந்தேன். அயோத்தி நகரிலுள்ள விண்ணைத் தொடவுயர்ந்த மாளிகைகளின் உச்சியிற் கட்டப்பட்ட பலவண்ணத் துகிற் கொடிகள் அகற்றப்பட்டமையால் அவை காற்றி லாடிக் களிக்கவில்லை. விரும்புவோர் விரும்புவன பெற்றுச் செல்க என முழங்கும் கொடைமுரசொலி கேட்கவில்லை. பாணரும் விறலியரும் பாடியும் ஆடி யும் பரிசிலாகக் களிறும் பிடியும் பெற்றுச் செல்ல வில்லை. ஆநிரையோடு பொன்னும் நவமணியும் பெற்று மனநிறைவுடனேகும் வேதியர் கூட்டமுங் காணப்படவில்லை. ஊர்ந்து செல்வோரின்மையால் கவின்றேர்களும் குதிரைகளும் யானைகளும் சிவிகை களும்தெருவீதிகளின்எவ்விடத்துங்காணப்படவில்லை. இவ்வாறு அவ்வணிநகர் விழாவழிந்த களம்போல வறிதே காணப்பட்டது. நகரின் பொலிவழிந்த நிலை யைக் கண்டு, இது எதிர்வரும் அளப்பருந் துன்பத் தின் முன்னறிகுறியாகும் என்பதை உணர்ந்தேன். ஆயினும், இதுவெனத் தெளிவாக என்னல் உணர முடியவில்லை. மிகுந்த மனக்கலக்கத்தோடு தேரி னின் றிழிந்து, எந்தையைக் காணும் ஆவல் மேலிட, அவன் வைகும் கோவில்புக்கு, ஆண்டு அவனைக் காணுமையாலே திகைத்துநின்றேன். அப்பொழுது சேடியர் சிலர் என்னை யணுகி என்னன்னை என்னை அழைப்பதாகக் கூறினர்.

"உடனே, என்தாய் வைகும் அந்தப்புரம் புக்கு, அவள் தாள்பணிந்து, எந்தையைக் காணும் பெரு விருப்பினுல் அவர் யாண்டுளாரென வினவினேன். அதற்கு என் அன்னை, வெட்டினுற்போல, 'சக்கர வர்த்தி விண்ணடைந்தார்' எனக் கூறினுள். அம் மொழிகள் என்னுயிரைச் சுட, உயிர்ப்பும் உணர்வும் நீங்க நிலத்தில் வீழ்ந்து பலவாறு புலம்பிய பின்னர், இராமன் திருவடி சேர்ந்தாலன்றி இத் துன்பங் களுக்குவி டிவில்லை என எண்ணி, 'என்னையன் எங்குளன்' எனக் கேட்டேன். அதற்த அவள், 'தேவியோடும் தம்பியோடும் அவன் கானடைந்தான்' எனக் கூறினுள். இச் சொற்கள் பழுக்கக் காய்ச்சிய கூர்வேல் போன்று என் செவியைத் தீய்த்து, உயிரைக் குடித்தன. 'கொடிதினுங் கொடியதாய இவ்வார்த்தைகளை என் அன்னையா கூறினள்! இராம னைத் தன்னுயிர்போற் போற்றி வளர்த்த பெருமை மிக்கவளா, இராமன் வனமடைந்தான்; எனக் கலங் காது கூறினுள்; இன்னும் எத்தகைய துன்பச் செய்திகளை யான் கேட்டல் வேண்டுமோ!' என என் மனத்துப் பற்பல சந்தேகங்கள் தோன்றின. அப் பொழுது என் அன்னை எனக்குத் தேறுதல் கூறுவாள் போன்று நானில்லாதபோது அயோத்தியில் நிகழ்ந்தன வற்றைக் கூறினுள். அவள் கூறிய நஞ்சனைய வார்த்தைகளிலிருந்து, என்பொருட்டாக என்தாய் தீவினை சூழ்ந்து மாபாதகங்களை விளைத்தாளே, என அறிந்தபோது, என்மனத்துப் பெருஞ்சினம் பொங்கி எழுந்தது அதனுல் அவளைத் தாயெனக் கருதாது கொன்றுவிடல் வேண்டும் என்னும் எண்ணம் எழுந்ததாயினும் அச் செயலை இராமன் மிக வெறுப்

பானே என்பதனுற் செய்யவில்லை. ஆனுல், கொதித்தெழுந்த கொடுங்கோபத்தினுல் என் தாயைப் பலவாறு ஏசி, பெரும்பழிகொண்ட என்னிலையை எண்ணி வருந்தினேன். எந்தை தானிந்த வரத்துக்கு இழிவு ஏற்படாதவாறு தன்னுயிர் துறந்தான். இராமனே தந்தை சொற்காத்தலே அறம், என எண்ணி வனமடைந்தான். அவனேடு பிறந்த நானே, தாயின் சூழ்ச்சியினுற் பாராள நின்றேன். இவ்வித பெரும் பழியை யான் அடைதல் கூடுமோ? என் பொருட்டாக என்தாய் வரங்கொள, எந்தை மாண்டனன்; எம்முன் வனம்புக்கான்; என்றறிந்தும் யாதொன்றுஞ் செய்யாது நிற்கும் நான் அரசை ஆசையால் ஆள்பவனேயாம் அன்ருே? அன்றியும் அன்புடையார் போல அழுவதெல்லாம் வெறும் வேடமேயாமன்ருே? இவ்விதமான என் செயலைக் கண்டு உலகோர் யாது நினைப்பர்? உலகோர் நினைப்பது ஒருபுறம் போக, எம்முன் யாது நினைப்பான்? இவைகளை எண்ணும் போது, என் தாயினது கொலைவாயினுல் நானே என் தந்தையைக் கொன்றேன்! நானே என் அண்ணனைக் கானடையச் செய்தேன்! அதனுல் அரசாளும் பொருட்டு நின்றேன்! யானே பிழையுடையேன்! யானே பழியுடையேன்! எனப் பலவாறு எண்ணி இரங்கி நைந்தேன்.

"பின்னர், கோசலைத் தாயாரைப் பணிந்து, 'இக்கொடுஞ் செயல் நிகழ்தல் தகுமா? இதனைத் தடை செய்யாது விடுத்ததேன்' எனக் கூறி யான் புலம்ப, அவள் என்னை அணைத்து அருகிருத்தி, பல ஆறுதல் வார்த்தைகள் கூறினுள். அப்பொழுது வசிட்டமா முனிவன் அங்குவந்து தந்தையின் ஈமக்கடன் கழிக்க

வரும்படி கூறலும், அவனுடன் சென்று, தைலக் கடலிற் கிடந்த என் தந்தையைக் கண்டேன். ஆருத் துயருடன், இந்நிலை என்னலன்றோ நேர்ந்தது எனப் புழுங்கினேன். பின்னர் அரசனுடலை விமானத்தி லேற்றி, யானைமீதுவைத்து, பிணப்பறை ஒலிசெயச் சரயுநதிக்கரைக்குக் கொணர்ந்து சிதையிலேற்றினர். வசிட்டமுனிவர் என்முன் வந்து. என் தாயையன்றி என்னையும் அரசன் துறந்தானுதலால் ஈமக் கட னியற்றும் உரிமை எனக்கில்லை, என்றுர். அதனைக் கேட்ட நான் எனது இழிநிலையை எண்ணி ஏங்கி நிற்கும்போது, வசிட்டர் சத்துருக்கனைக்கொண்டு ஈமக்கடன்களை முடித்தார்.

"பத்துநாட்கள் கழிந்தபின்னர், ஒருநாள் குலகுரு வாகிய வசிட்டரும் மந்திரிமாரும் என்னிடம் வந்து பல தரும நியாயங்களை எடுத்துக்காட்டி, அரசாளும் படி கேட்டனர். அவர்கள் வார்த்தைகளைக் கேட்டு, மூத்தோனிருக்க இளையோன் அரசாளும்படி தரும சாத்திரங்கள் கூறுதலும் உண்டோ, எனத் திகைத்து, அங்ஙனம் மனுநெறி கூறினும் யான் அரசாள ஒருப்படேன் எனவும், இராமனை அழைத்துவந்து திருமுடி சூட்டுவேன் எனவும், அன்றேல் அவனுடன் கானுறைவேன் எனவும் எனது முடிவான கருத் தைத் தெரிவித்தேன். மறுநாள் இத் தவவடிவுதாங்கி இராமனை அழைத்து வருதற்காகக் காடுநோக்கிப் புறப்பட்டு, கோசலநாட்டெல்லையை யடைந்து அங் கிருந்து கால்நடையாகஇங்குவந்தேன்" என, இவ்வாறு தன்மாட்டு நிகழ்ந்தனவற்றைப் பரதன் கூற அதனைக் கேட்ட குகன், மெய்ம்மயிர் பொடிப்ப, விம்மிதம் கொண்டு, கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்றுன்.

# 10. குகன் பரதனைப் பாராட்டுதல்

குகன், பரதனைக் காணுவதற்கு முன்பு, அவனைத் துரோகி எனவும் தீயவன் எனவும் கருதினான். தூரத்தில் அவனது தவவடிவைக் கண்டபோது, 'எம் பெருமான் பின்பிறந்தார் தவறு செய்வாரோ' என எண்ணினான். பின்னர் பரதன் கூறியவற்றைக் கேட்டபோதும் அவன் செயலை அறிந்தபோதும் தன்னை மறந்து உணர்வுருவானான். இதயம் மேன் மேற் பொங்கிப் பூரித்தது. 'எத்துணை நல்லோனிவன்; இராமனின் பத்தன் இவன்; அறமுறை திறம்பாத பெரியோன் இவன்; இராமனிலும் பார்க்கச் சிறந்தோன் இவன்' என்று எண்ணினான். உவகை மேலீட்டால் விம்மிதங்கொண்டான். உடனே மண்ணில் வீழ்ந்து, பரதனது திருவடித் தாமரைகளைக் கைகளினாற் பற்றிக்கொண்டு நெடிது நேரம் ஆனந்தக் கண்ணீர் வடித்தான். பின்னர் எழுந்துநின்று, உள்ளக் கிளர்ச்சியோடும் பொய்யில் உள்ளத்தோடும் பரதனைப் பார்த்து, "ஐய, உனது முன்னோனை இராமனே, நாட்டுமக்கள் உவப்ப, தந்தை கொடுத்த பேரரசை ஏற்றான். நீயோ, உனக்கே அரசாக்க வேண்டும் என்னும் ஆவல்கொண்ட தாயும் அத்தாய் வரங்கொள்வதனாலே தந்தையும் கொடுத்த அரசை வேண்டாமெனத் துறந்தாய். மூத்தோனிருக்க இளையோன் அரசாளல் பெருந் தீவினையுடைத்தென அதனை வெறுத்தாய். அன்றியும் அடுத்தது காட்டும் பளிங்குபோல, உனது நெஞ்சிற் குடிகொண்ட பெருங்

கவலையை முகத்திற் காட்டினாய். அதனோடமையாது அம்முறைகேட்டை நீக்குதற்பொருட்டு தவவேடந் தலைக்கொண்டு, இராமனை அழைத்துவரக் காடடைந் தாய். அதனால் அப் பேரரசினையும் பெரும் போகத்தையும் வேண்டாமெனத் துறந்த உன்னையும் அவைகளை ஏற்றுக்கொண்ட இராமனையும் ஒப்பிடில், விருப்பின்மைகொண்ட நீயே மிக உயர்ந்தவனாவாய். அதனால் ஆயிரம் இராமர் தாமும் உனக்கு ஒப்பா வரோ" என்றான்.

இவ்விதம் இராமனையும் பரதனையும் ஒப்பிட்டுப் பரதனின் உயர்வைக் கண்ட குகன், அவனைச் சூரிய குல மன்னர்களுடன் ஒப்பிட்டு, மீண்டும் பரதனை நோக்கி, "அருங்குணச் செம்மலே, வானம்போற் பரந்ததும் எல்லையற்றதுமாக விளங்குவது நீ பிறந்த சூரிய குலம். அவ் வானத்தின்கண் சுடர்விட்டு ஒளி காலும் தாரகைகளைப் போன்றவர்கள், அச் சூரிய குல முதல்வர்களாகத் தோன்றி அழியாப்புகழ் பரப்பி மறைந்த மன்னாதி மன்னர்கள். ஆனால் நீயோ, அவ் வானத்துக்கு விளக்கந்தந்து, தாரகைகளின் ஒளி யைத் தன்னொளியால் மறைத்து விளங்கும் சூரிய னைப் போன்றவன். அவ்வானத்துத் தாரகைகளின் ஒளி சூரியனின் செம்பொற்சோதி வெள்ளத்துள் அமிழ்ந்து மறைந்துவிடுதலைப்போல, உன் முன்னோர் களின் புகழ்ப் பெருமை யாவும் நின் ஒருவனின் பெரும் புகழுள் அமிழ்ந்தி மறைந்தன. அதனால் நீ இரவிகுல மன்னர்கள் எவரினும் மேம்பட்டவனாக விளங்குகின்றாய். இதைவிட இவ்வேழை வேடன் நின்னை எவ்வாறு புகழ்வேன். புகழத்தான் வார்த்தை

களும் உளவோ" என்று பணிந்தான். முன்னர் இராமனைக் கண்டபோது அவனது குணாதிசயங்களைக் கண்டு அவன்மீது பெருங் காதல்கொண்ட குகன், இப்பொழுது பரதனது குணத்தையுஞ் செயலையுங் கண்டு, ஈடுபாடுகொண்டு அவனிடம் பேரன்புடையவனாக விளங்கினான். அவன் இராமபத்தியோடு பரத பத்தியும் மேலிட்டவனாக நின்றான்.

அப்பொழுது பரதன், இராமனை நினைத்து, அவன் சென்ற தென்திசைநோக்கித் தொழுது குகனை நோக்கி, "அன்ப, எம்பிரானாகிய இராமன் இவ்விடம் தங்கியிருந்தபோது எங்கே துயின்றனன்?" என வினவ, குகன், "அவ்விடங்களை யான் காட்டுவேன்; எம்முடன் வருக" என அழைத்துச் சென்று, இராமன், தேவியோடும் சயனித்த புற்பாயலைக் காட்டினான். அதனைக்கண்ட பரதன் பருவரலெய்தி, கண்ணீர் சோரத் தன்னைத்தானே வெறுத்துப் புலம்பினான். "ஐயோ, நீ வனத்திலுறைவதற்கு நானே காரணம், என்பதை எப்போது அறிந்தேனோ, அப்போதே நான் உயிர் துறந்திருத்தல் வேண்டும். அதில் நான் தவறினேனாயினும் அறுசுவை யுணவை யுண்ணும் நீ, காயும் கனியும் அருந்தி, கடுங்காட்டில் வலிய புற் படுக்கையைப் பஞ்சணை என எண்ணித் துயின்றாய் என்பதைக் கேட்ட இப்போதாயினும் நான் என் வல்லுயிரைப் போக்கியிருத்தல் வேண்டும். அங் ஙனம் உயிர்போக்காத யான் நின்மீது பேரன்புடை யேன் என்பது முழுப்பொய். இத் தன்மை வாய்ந்த யான் நவமணி குயிற்றிய முடிபுனைந்து அரசபோகம் ஆள்வேன்போலும்!" என வருந்தினான்.

பின்னர், பரதன் குகனை நோக்கி, "இராமன் பிராட்டியோடும் துயின்ற இடம் இதுவெனில், அவன் பின்னே நிழல்போலத் தொடர்ந்த இலக்குமணன் இராப்பொழுதைக் கழித்த இடம் எது? காட்டுக" என்றான். அதற்குக் குகன்,

அல்லையாண் டமைந்த மேனி
    அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
    வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
    கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்
    இமைப்பிலன் நயனம்" என்றான்.

[குகப்படலம் 42]

அதனைக் கேட்ட பரதன் ஆறாப் பெருந்துயரின னாய் இருளனைய நிறம் அமைந்த அழகனாகிய இராமனும் சீதையும் துயில்கொள்ளும்போது, வில்லைத் துணையாக ஊன்றிக்கொண்டும், மனத்தெழுந்த பெருந்துயராற் கண்களினின்று கண்ணீர் சொரிய பெருமூச்செறிந்துகொண்டும் கண்ணிமையாது விடியுமளவும் நின்ற இலக்குமணனையும் தன்னையும் ஒப்பிட்டுத் தன்னிழிவையும் அவனுயர்வையும்கூறி அழுங்கினான். 'ஐயோ, இராமனுக்கு நானும் இலக்குமணனும் இருதம்பியர்களாக இருக்கின்றோம். ஆனால், இராமன் காட்டிலலைந்து காய்கனியருந்திப் பெருந்துயருறக் காரணமான தம்பி நான். என்னால் இராமன் அடைந்த பெருந் துன்பத்தைத் தன்னாலியன்றவரை நீக்கி எம்பிரானைக் கண்ணிமையாது காத்துவருந் தம்பி அவன்.

சீ! நானும் ஒரு தம்பியா? நான் இராமன்மீது கொண்ட அன்பு மிக அழகியது! மிக அழகியது' என்று தன்னைத்தானே வெறுத்துரைத்தான்.

பரதன் இராமன் பள்ளிகொண்ட புற்பாயலின் அருகிலே, புழுதியே பாயலாகப் படுத்து, துன்பத்தினுற் கண்துயிலாது கிடந்து அன்றிரவைக் கழித்தான்.

# 11. குகன் பரதனை இராமனிடம் அழைத்துச் செல்லல்

மறுநாட்காலையிற் பரதன் குகனை நோக்கி, "வேடர் தலைவனே, யாம் இக் கங்கையாற்றைக் கடந்து அக்கரை சேர்தற்குத் துணைபுரிவையாயின், பெருந் துன்பக்கடலைத் தாண்டி எம்பெருமானாகிய இராமனை அடைந்தவர்களாவோம்" என்று கூற, குகன் தன்னருகே நின்ற வீரர்களிடம் பன்னூறு நாவாய்கள் கொணரும்படி பணித்தான். அவ்வீரர்கள் விரைந்துசென்று, வெள்ளிப்பனிவரையும் அம்பொன் மேருவும் குபேரவிமானமும் பலவேறு உருக்கொண்டு வந்தாற்போன்ற அழகமைந்த பல நாவாய்களைப் பரந்த கங்கையும் இடமில்லை யென்னும்படி கொணர்ந்து எங்கும் நிறைத்தனர், அவை இக்கரையிலுள்ளாரை அக்கரைக்கும் அக்கரையிலுள்ளாரை இக்கரைக்கும் கொண்டுசேர்க்கும் இயல்பால், மண்ணிலுள்ளாரை விண்ணுக்கும் விண்ணிலுள்ளாரை மண்ணுக்கும் கொண்டுசேர்க்கும் புண்ணிய பாவமாகிய இருவினை களை நிகர்த்தன.

அப்பொழுது குகன் பரதனை வணங்கி, "ஐய, வரம்பிலவாகிய பல நாவாய்கள் வந்து சேர்ந்தன. இனி, உன் கருத்து யாது?" எனக் கேட்க, பரதன் தன்னயலில் நின்ற சுமந்திரனை நோக்கி, "எந்தை யின் இச் சேனையை இடர் எதுவுமின்றி நாவாய்களி லேற்றி, அக்கரைக்கு அனுப்பி உதவுக" என்று

கூறினன். ஆறு கடலிற் செல்லுதற்கு மாருக, கடல் ஆற்றிற் சென்றமையை யொப்ப, அப்பரந்த கடலனைய சேனையைக் கங்கையாற்றில் நின்ற ஓடங்களில் ஏற்றினன் சுமந்திரன். அந்நாவாய்கள் இரு பக்கத்தும் வீசப்படும் துடுப்புகளாகிய கால்களினல், கங்கை வெள்ளத்தில் நடப்பதையொத்துச் சென்றன. அவை சென்ற வேகத்தில், அக்கரையில் எற்றுண்ட நீரினல், கங்காநதியும் இராமபிரானைக் காணும் பெருவிருப்பால், தென்திசையை நோக்கிச் சென்றமையை ஒத்தது. மேகங்கள் இடி முழக்கத்தோடு நீர் முகப்பதற்குக் கடலிற் படிதலைப்போல, களிறுகள் பிளிறிக்கொண்டு அப் பரந்த கங்கை வெள்ளத்தில் இறங்கின. அவை தமது நீண்ட தும்பிக் கைகளை நீரின்மேல் உயர்த்திக்கொண்டு நீந்திச் சென்றமை பாய்மரத்தோடு கூடிய மரக்கலம், பரந்த கடலிற் செல்வதை நிகர்த்தது. இவ்வாறு அப் பரந்த சேனை முழுவதும் கங்கையின் தென் கரையை யடைந்தபின்னர், பரதன் தாயர் மூவரையும் தம்பியையும் சுமந்திரனையும் ஓரழகிய அன்னம் போன்ற படகிலே ஏறச்செய்து தன் தோழனுகிய குகனுடன் அதில் ஏறி அமர்ந்தான். அப்படகு அன்ன நடையை யொத்துக் கங்கை வெள்ளத்தில் அசைந்தசைந்து செல்லத் தொடங்கியது.

அப்படகிலே அமர்ந்திருந்த தாயர் மூவரையும் இன்னரெனக் குகன் அறிந்தானல்லன். அதனல் குகன், தேவர்களும் தொழுதேத்தும் தகைமை மிக்கவளாகிய கோசலையை யாரென அறியும் விருப்பினனுகிப் பரதனை நோக்கி, ஐய, இவர் யார்?" என

வினவ, பரதன் " அன்ப, இவர் வேந்தர் வேந்தனாகிய எந்தையின் முதற்றேவி ; பட்டத்தரசி; இராமனைப் பெற்ற தாய். அதனாற் பெறவேண்டிய பெருஞ் செல்வத்தை யானொருவன் பிறந்தமையாலே துறந்த பெரியாள். உலகனைத்தும் போற்றும் பெரும் பண்பினள் " என்றான். அதனைக் கேட்ட குகன், பல நாட் பிரிந்து தன் தாயைக் கண்ட ஆன் கன்றை யொப்ப மிக மகிழ்ந்து, விம்மிதங் கொண்டு, கோசலை யின் மலர்பாதங்களில் வீழ்ந்து அழுதான். அவனது தூய அன்பைக் கண்ட கோசலை, பரதனை நோக்கி, "இவன் யார்?" என வினவ, அவன், " தாயே, இவன் இராமனின் அன்பன் ; அவன் இன்னுயிர்த் தம்பி. இலக்குவற்கும் சத்துருக்கற்கும் எனக்கும் மூத்தோன். குகன் என்னும் பெயரினன் " என்றான். அப்பொழுது கோசலை இராமனைக் கண்டாற்போன்று அன்புமிக்கூரக் குகனை நோக்கினாள். அவனை இழிந்த வேடனென்றோ, அயலானென்றோ ஒரு சிறிதும் கருதினாளல்லள் ; உன்னதமான தாய்மைப் பண்பினால், அவனையும் தன் மகனெனவே கருதினாள். அதனால், அவள் பரதன் முதலியோரைப் பார்த்து, " என்னருமை மைந்தர்காள், துயர்கொள்ளாதீர். இராம இலக்குவர் சத்தியத்தைக் காப்பதற்காக, அயோத்தி நகரை நீங்கிக் காடடைந்ததுவும் நன்றாகி விட்டது. ஆம் ; மலைபோலும் வலிய தோள்களை யுடைய, வீரம் பொருந்திய ஆண் யானையை ஒத்த காளையாகிய இவனையும் உங்கள் சகோதரனாகச் சேர்க்கும் சந்தர்ப்பம் அதனால் ஏற்பட்டதன்றோ? ஆகவே, இப்பொழுது நீவிர் ஐவிரானீர். நீவிர் ஐவிரும் ஒருமனம் படைத்தவர்களாய் இவ்வுலகை நெடுங்

காலம் ஆள்வீராக" என்ருள். பின்னர், அவ ளயலிலே, அறமே ஒரு வடிவுகொண்டதனைய சுமித் திரையைக் குகன் யாரென அறியும் விருப்பினனாக நிற்க, பரதன் அவனை நோக்கி, "வீர, தான் கைகே யிக்குக் கொடுத்த வாக்கை நிலைபெறச் செய்வதற்காக, உயிரை இழந்து வாய்மையைக் காத்த தசரதனது இளைய மனைவி. எல்லாராலும் வணங்கப்படத்தக்கவ னாகிய இராமனின் பின் பிறந்தவனும் ஒருவன் உளன் என்னும்படி, அவ் விராமனை விட்டுப் பிரியாதவனாகிய இலக்குவனைப் பெற்ற பெருமை மிக்கவள்" என்று கூறினான்.

பின்னர், தனது துணைவனாகிய கணவன் சுடு காடேகவும் தன்னரிய புதல்வன் துன்பக் கடலுள் மூழ்கவும் கருணைக் கடலான இராமன் கல்லும் முள் ளும் செறிந்த காட்டிற் செல்லவும் காரணளாகி, வீரக் கழல்களையணிந்த மாயன் தனது நீண்ட பாதத்தால் அளந்த உலகங்களையெல்லாம் தனது மனத்திலே தோன்றிய கொடுமையால் அளந்தாளாகிய, கைகேயி யைக் குகன் நோக்கி, "இவர் யார்" என்று பரதனை வினவினான். அதற்குப் பரதன் குகனை நோக்கி, "இப் பொழுது யாமடையும் துன்பங்களெல்லாவற்றையும் உண்டாக்கியவளை—பழி பாவங்களை வளர்ப்பவளை— தனது கொடிய வயிற்றிற் சிசுவாய்க் கிடந்த எனது உடலும் மெலிவுறுவதோடு, உலகத்திலுள்ள மற் றுடல்களும் கொடுந் துன்பத்தினால் உயிரில்லா தனவாயிருக்க, தானொருத்தி மட்டும் துன்பமடையா திருப்பவளை — நீ இதுகாறும் அறிந்ததிலையாகில் இவளே என்னைப் பெற்றவள்" என்று தெரிவித் தான். பரதனது வார்த்தைகளிலே தெறித்த வேதனை

யையும் கோபத்தையும் மாத்திரமன்றி, கைகேயியின் தீய இயல்பையுங் குகன் உணர்ந்தான். ஆயினும் அவள்மீது எட்டுணையும் வெறுப்புக் கொள்ளாது அக் கொடியாளையும் தன் தாயே என எண்ணிப் பணிந்தான். அப்பொழுது அவர்களை ஏற்றிவந்த ஓடம் கங்கையின் தென்கரையை யடைந்தது.

கங்கையின் தென்கரையை யடைந்த பரதன், தாயர் மூவரையும் சிவிகையிலேறி வரும்படி கூறி, தம்பியுடனும் மற்றுமுள்ளோருடனும் கால் நடையாக இராமன் இருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டான். செல்லும் நெறியில் பரதன், வரத்தின் மிக்குயர்ந்த பெருந் தவ முனிவனை பரத்துவாசனைக் கண்டு பணிந்து, அவனது பாதங்களைப் பரவினன். பரதன் தவவேடம்பூண்டு இராமனை அழைக்கவந்த செயலை யும் அவனது அறம் திறம்பா நெஞ்சையுங் கண்ட முனிவன் பெரு மகிழ்வு கொண்டு, ஆசி பல கூறி, அங்கு வந்தோரனைவருக்கும் பெருவிருந்தளித்தான். ஆனல், பரதனே காயுங் கனியும் உண்டு, புழுதியிற் படுத்து, அவ்விரவைக் கழித்தான். மறுநாட் காலை யிலே பரதன், குகன் காட்டிய வழியிலே நடந்து, பல காவதங் கடந்து, ஈற்றில் இராமபிரான் தங்கி யிருந்த சித்திரகூட பர்வதத்தின் எல்லையை யடைந்தான்.

அப்பொழுது, பரதசேனையினால் எழுந்த பெருந் தூசிப்படலத்தையும் ஆரவாரப் பேரொலியையும் உணர்ந்த இலக்குவன், உயர்ந்ததோர் குன்றின் உச்சியில் ஏறி நின்று, தூரத்திலே கடல்போல வரும் பரந்த சேனையைக் கண்டான். இராமன்மேற்

கொண்ட எல்லையில்லாப் பாசத்தினுலும் பரதன் மேற் கொண்ட வெறுப்பினுலும் அவன் சிறிதுஞ் சிந்தனையற்றவனுக, 'ஆம், இது பரதனது சேனையே; பரதன் பார் முழுதும் ஆளவேண்டும் என்னும் பேராசை கொண்டு, இப் பரந்த சேனையோடு, தவ விரதம் மேற்கொண்ட இராமனை எதிர்க்கவே வருகின்றுன். வேறென்றுங் குறித்து வரவில்லை; இது நிச்சயம்' என எண்ணிப் பெருஞ் சினங் கொண்டான்; நிலத்திற் குதித்தான்; துகளெழப் பூமியை மிதித்தான். இராமனை அடைந்து "பரதன் நின்னை மதித்திலனுகி, பெருஞ் சேனையோடு வருகின்றுன்" எனக் கூறி, உடைவாளையும் வீரக்கழலையும் கட்டினுன்; கணைப்புட்டிலைப் புறத்து வீக்கினுன்; கவசமணிந்தான்; வரிவில்லைக் கரத்தேந்தினுன். அவன் இராமன் திருவடிகளைத் தொட்டு வணங்கி, "ஐய, போரொன்று கிட்டிவிட்டது. தீவினைசெய்து இருமையும் இழந்த அப் பரதனையும் பரந்த அச் சேனையையும் கொல்ல என்னம்புகள் துடிக்கின்றன. இப் போரினுற் கானெங்கும் பிணமலைகள் குவிவதையுங் குருதியாறு பெருக்கெடுத்து ஓடுவதையும் அந்த யுத்த பூமியிலே பேய்கள் அறுந்து வீழ்ந்த கைகளைக் கவ்விக்கொண்டு நாடகம் நடிப்பதையும் நீ காண்பாய். சேனை முழுவதும் இறந்து வீரசுவர்க்கம் அடைவதால் விண்ணகம் பாரந் தாங்காது வருந்துதலையும் மண்ணகம் பாரம் நீங்கிக் களித்தலையும் வஞ்சனையால் அரசு கவர்ந்த பரதன் மண்ணுள்வதை விட்டு, என்னம்புக்கிரையாகி அருநரகாள்வதையும் அவன் தாயான பாதகக் கைகேயி பார்மிசை வீழ்ந்து ஆவிசோர்வதையுங் காண்பாய்"

என்று வஞ்சினம் மொழிந்தான். அதனைக் கேட்ட இராமன், பரதன் தன்னைக் காணவே வருகிறான் என எண்ணி, மகிழ்ச்சியடைந்து, இளையவனின் அறியாமைக் கிரங்கி, "இளையவ, நீ உலகனைத்தையுங் கலக்கக் கருதினால், அதனை விலக்கவல்லவர் யார்? ஆயினும் நினக்குக் கூறுவதொன்றுண்டு. நீ என்மேற் கொண்ட பெருங் காதலால் பரதனை உணரத் தவறிவிட்டாய். நமது சூரியகுல மன்னர்களில் எவரேனும் அறமுறை தவறி நடந்தார்களா? அங்ஙனமாக, பரதனை மறவினை பூண்டவனாக எண்ணியதேன்? பரதனது எச்செயல்களும் அறத்தின் பாலன; மறை மொழிக்கு இயைபுடையன. அவன் தருமவடிவினன்; செம்மையின் ஆணி. அவன் என்மேற்கொண்ட பேரன்பினால் வருமெனவும் தான் பெற்ற மண்ணை எனக்குத் தருமெனவும் நினையாது, என்னுடன் பெரும்போர் விளைக்க வருமென நீ நினைப்பது அறிவுடைமையாகுமா? இவ்வுண்மையை நீ சிறிது நேரத்திற் காண்பாய்" எனக் கூறி நின்றான்.

அப்பொழுது பரதன் தன் சேனையைத் தூரத்தே நிறுத்தி, தன் துணைத் தம்பியோடு, தொழுது உயர்ந்த கையனாகவும் துவண்ட மேனியனாகவும் அழுதழுது பொலிவழிந்த கண்ணனாகவும் துன்ப உருவினனாகவும் இராமனிடஞ் சென்றான். அவனது பொலிவழிந்த மேனியழகையும் தவவேடத்தையுங் கண்ட இராமன், இலக்குவனை நோக்கி, "பரதனது போர்க்கோலத்தைப் பார்" என இளநகையோடு கூறினான். இலக்குவன் பரதனைப் பார்த்து, அவன் நிலையையுணர்ந்து சினமடங்கி, கண்ணீரும் தான் பிடித்த

வில்லும் ஒருசேர நிலத்தில் வீழ நின்றான். அப்பொழுது கோசலமென்னும் மங்கை தன்னை ஆள வரும்படி, தன் கணவனாகிய இராமனுக்கு அனுப்பிய தூதுவன்போல, பரதன் இராமன்முன் சென்றான். "அறத்தை மறந்தாய்; அருளை மறந்தாய்; முறைமையை மறந்தாய்" எனப் புலம்பிக்கொண்டு, இராமனின் மலரடிகளில் வீழ்ந்து உயிர்ப்பொழிந்து கிடந்தான். உடனே இராமன் அவனை எடுத்து மார்புறத் தழுவிக் கண்ணீர் சொரிந்தான். பின்னர் பரதனது தவவடிவைக் கண்டு, பலவாறு எண்ணி ஐயுற்று, தந்தையின் சேமத்தை வினவுதலும் தந்தை விண்ணுலகடைந்த செய்தியைக் கூறினான் பரதன். அதனைக் கேட்ட இராமனும் சீதையும் இலக்குவனும் ஆருப் பெருந் துயர்கொண்டு, நிலத்தில் வீழ்ந்து புலம்பி அரற்றினர். ஈற்றில், குலகுருவாகிய வசிட்டர் பல அறிவுரை கூறித் தேற்றத் தெளிந்த இராமன் தந்தைக்குரிய ஈமக் கடன்களை இயற்றினான். அப்பொழுது சூரியனும் தன் குலத்துதித்த தசரதனுக்கு இறுதிக் கடன் செய்ய நீராடுவான்போல மேல்கடலில் வீழ்ந்து மறைந்தான்,

மறுநாள், முனிவர்களுந் தம்பியருஞ் சுற்றத்தினருஞ் சூழவிருந்த இராமன், பரதனைப் பார்த்து "ஐய, நம் தந்தை இறந்தபின்னர் மணிமுடி தரித்து மண்ணுள வேண்டிய நீ, தவவேடந்தாங்கிய காரணம் யாது?" என வினவினான். அதனைக் கேட்ட பரதன் எழுந்து, இராமனைத் தொழுது, "உலகம் ஒப்பாத வரத்தினால், நினக்குத் துன்பமீந்து சக்கரவர்த்தியையுங் கொன்ற தீயாள் மகனாகிய எனக்குத்

தவறும் பொருந்தாதுதான்! நான் எவ்வாறு இப் பெரும்பழிக் கடலுள் நீந்திக் கரைசேர்வேன்! மூத்தவனாகிய நீ குலமுறையாகக் கிடைத்த அரசைத் துறந்து, துறவியானயானால் நான் அறமுறை பிறழ அவ்வரசை ஆள்வேனோ? ஆகவே, தாய் செய்த தீவினையும் தந்தை செய்த தவறும் நான்கொண்ட பெரும்பழியும் நீங்க நீ நாட்டுக்கு வந்து அரசு புரிவாயாக" என்றான். அதனைக் கேட்ட இராமன், "தந்தை தாயரே நாம் வணங்கும் பெருந் தெய்வம். தந்தையே யன்றித் தலைவனுமானவன், தாய் வரங் கொள, அவ்வரப்படி எனக்களித்த ஆணையைத் தலைக்கொண்டு கானடைந்தேன். நீ வேண்டிக்கொள் வதனால் அதனைத் தவிர்த்தல் நீதியாகுமா? நான் அரசாள உடன்படின், தந்தையைப் பொய்யனாக்கிய பெரும்பழியன்றோ வந்துசேரும். தந்தையும் தாயும் உனக்களித்த அரசை நீயே ஆளல் முறை" எனக் கூறினான். பரதன் "நீ ஆளுதற்குரிய அரசு நீ கூறிய படி என்னதானால் நான் அந்த உனக்குத் தருகி றேன். ஏற்றுக்கொண்டு அயோத்திக்கு வந்து அதனை ஆள்வாயாக" என்று கூறி, அவனிரு மலர்ப்பாதங் களில் வீழ்ந்து வேண்டினான். உடனே இராமன், பரதனை எடுத்தணைத்து, "ஐய, நீ இப்போது தந்த அரசை அயோத்திக்குவந்து ஆளவேண்டுமாயின், வனத்திற் கழியவேண்டிய பதினான்காண்டுகளும் கழியவில்லையே; அதனால், நீ எனக்குக் கொடுத்த அரசை என்னேவலால், என் வனவாசகாலம் முடியுந் துணையும் ஆள்வாயாக. யான் உன்னை யாசிக்கின் றேன்; என்னாணைப்படி இராச்சியத்தை ஆள்க" என்று பரதனின் கைகளைப் பற்றிக்கொண்டு

வேண்டினுன். இராமனின் ஆணையை மறுக்கமாட்டாத பரதன், "பதினுன்காண்டு கழிந்தவுடன் நீ அயோத்திக்கு வராவிடில், நான் எரியில் வீழ்ந்து உயிர் துறப்பேன். இது சத்தியம்; உன்மீதாணை. நீ இல்லாதபோது நினது பாதுகைகளையே அரியணையேற்றி அரசுபுரிவேன். ஆகையால் நினது பாதுகைகளைத் தந்தருள்க" என வேண்டினுன். இராமன் தனது பாதுகைகளைக் கொடுத்து, பரதனைக் கட்டித் தழுவி விடை நல்கினுன். பரதன் இராமனது திருவடி நிலைகளைச் சிரமீது சுமந்துகொண்டு அயோத்தியை நோக்கி வழிக்கொண்டான். இராமன் ஆணைப்படியே, அங்கு நின்ற குகனும் இராமனைப் பரவிப் பணிந்து பரதனுடன் தன்னூர்க்குச் செல்லப் புறப்பட்டான்.

## 12. குகனுக்கு அனுமான் கூறியவை

இராமனை வணங்கி, அவனது கமலபாதங்களைக் கண்ணீராற் கழுவி, பெருந் துன்பத்தோடு பிரிந்த குகன், பரதனுடன் சென்று, கங்கையின் தென் கரையையடைந்து, பரதனையும் பரிவாரங்களையும் தனது வேட்டுவ வீரர்களின் துணையுடன் நாவாய்களி லேற்றி வடகரையிற் சேர்த்தான். குகனைக் கட்டித் தழுவி, நெஞ்சம் நெக்குருக நின்று விடை கேட்ட பரதனை, குகனும் கட்டித் தழுவி, கண்ணீர்வாரப் பணிந்து பிரிவாற்றாமையோடு விடையளித்தான். பரதன் கால்நடையாக வடதிசை நோக்கி வழிக் கொண்டான்.

பின்னர், குகன் தன்னூர்புக்கு, தன் சுற்றமனைத் தும் இராமன் சுற்றமேயென எண்ணி, அவர்களுக்கு எத்திங்கும் வராது காத்துச் செங்கோலோச்சியிருந் தான். அவன் மனதிலே இராமன் திருக்கோலமும் பெருங்கருணையும் மாத்திரமன்றி, பரதனது தவவடி வும் பெருங்குணமும் அழியா இடம் பெற்றிருந்தன. இராமனது தோழமைப் பண்பை உன்னுந்தோறும், உன்னுந்தோறும் அவன் மனங்கசிந்துருகக் கண்ணீ ருகுத்தான். இவ்வாறு அவன், இராமன் திரும்பிவரும் நாட்களை எண்ணிக்கொண்டு பதினன்காண்டைக் கழித்தான்.

ஒருநாள் இராமதூதனாகிய அனுமான், இராம நாமசெபத்தோடு மின்னலெனக் குகன் முன்னர்த்

தோன்றினன். அனுமானை முன்னொருபோதுங் கண்டறியாதவனாகிய குகன், பெரிதும் மலைப்பெய்தி, அவனைப் பார்த்து, "நீ யார்?" என வினவினன். அதற்கு அனுமான், "யான் ஒரு குரங்கு; வானர சாதியிலே அஞ்சனாதேவியின் வயிற்றிலே வாயுபகவானுக்குப் புத்திரனாகப் பிறந்தேன். யான் இராமனின் மீளா அடிமை; என்னை யாவரும் அனுமன் என்பர்" என்று விடைபகர்ந்து நின்றான். தன்னைப் போலவே அவனும் இராமனின் அடியவன் என்பதை உணர்ந்தமாத்திரத்தே, குகன் அனுமான்பாற் பேரன்புடையவனாகிப் பணிந்தெழுந்து அவன் முகம் நோக்கி நின்றான். அனுமான் குகனின் முகக் குறிப்பைக் கண்டுணர்ந்து, 'இராமனைப்பற்றி யறியும் பேராவல்கொண்டோனிவன்' என எண்ணி, இராகவன் சித்திரகூடத்தை விட்டு நீங்கிய பின்னர் நிகழ்ந்தனவற்றைக் கூறத் தொடங்கினன் :

"சித்திரகூட பருவதத்தினின்றும் தென்திசை நோக்கிச் சென்ற இராமனாதியோர், வழியிலே அத்திரி என்னும் மாதவனைக் கண்டு, அவனாலுபசரிக்கப்பட்டு, அடுத்தநாள் தண்டகவனத்தை யடைந்தனர். அங்கு அவர்களை எதிர்த்து உயிர்குடிக்கவந்த வன்திறல் விராதனை இராமன் தன்னம்பாற் கொன்று, அவனது சாபத்தை மாற்றி, அப்பாற் சென்று, தவத்துறைபேணி அறநெறிச்செல்லும் மாதவர்கள் வாழுமிடத்தை யடைந்தான். அவர்கள் இராமனைப் பரிவோடு வரவேற்று, தமது தவத்திற்கு வெஞ்சின அரக்கரால் இடையூறேற்படாது காத்தல்வேண்டுமென வேண்ட, இராமன் அத் தபோதனர்களுக்கு அபயமளித்து, அப்புல்லிய அரக்கர்களைக் கொல்லு

தல் தன் கடன் எனச் சூளுரைத்து, வேள்விக்கு இடையூறு விளைவித்த வலிய அரக்கர்கள் அனை வரையும் அழித்துத் தவ நெறியைக் காத்தான். இங் ஙனமாகப் பத்தாண்டுகள் கழிந்தன. பின்னர் இராமன் அம் முனிவர்களின் ஏவலால், சந்தனப்பொதியச் செந்தமிழ் முனிவராகிய அகத்தியர் வாழ்ந்த தபோவனத்தையெய்தி, அவரது தாள்பணிந்து நிற்றலும், அக் குறுமுனிவர் கழிபேருவகைகொண்டு, இராமனுக்கு வலியமைந்த வில்லும் அம்பறாத்தூணியும் தெய்வவாளும் ஈந்து ஆசிபல கூறி, விடை கொடுத்தனுப்பினர். அவர்கள் மூவரும் பல காவதங் கடந்து சென்று, நீண்டுயர்ந்த குன்றின் மீது விளங்கும் மற்றோர் குன்றெனத் தோன்றும் கழுகின் வேந்தனாகிய சடாயுவைக் கண்டனர். சடாயு, இராம இலக்குமணர்களது முகத்தோற்றம் தசரத மன்னனை ஒத்திருத்தல் கண்டு, அவர்களை நோக்கி, "நீவிர் யாவீர்?" என வினவ, பொய்யறியா நெஞ்சராகிய அவர்கள், தாம் தசரதன் புதல்வரெனக் கூறலும், சடாயு தசரத மன்னனைக் கண்டாற்போன்ற உணர்ச்சி வெளிப்பாடுடையனாகி, அவர்களைத் தழுவி, "உமது தந்தை சேமமுடையனோ?" என வினவினான். அவர்கள் தமது அருமைத் தந்தை துறக்கம் புக்க செய்தியைக் கூறியவுடன், சடாயு உயிர்நீத்தான்போன்று மயங்கி, பின்னர் ஒருவாறு தெளிந்து, அவர்கள் அயோத்தியை யடையும்வரையும் அவர்களைத் தந்தைபோற் காத்துப் பின்னர் உயிர்துறப்பதாகக் கூறினான். அதன்பின் இராமன் சடாயுவிடம் விடைபெற்று, பஞ்சவடியை யடைந்து, தம்பியின் கைத் திறமையாற் சமைக்கப்பட்டதொரு

சாலையில், கற்பின் செல்வியாகிய சீதையோடு வாழ்ந்துவந்தான்.

ஒருநாள், அவர்கள் தங்கியிருந்த பஞ்சவடியிற் சஞ்சரிப்பவளும், அரக்கர் வேந்தனாகிய இராவணன் தங்கையுமாகிய சூர்ப்பனகை என்னும் அரக்கி, இராமனிருந்த சூழலையடைந்தாள். அவள் இராமனைக் கண்டு, அவனது எழிலமைந்த திருமேனியழகில் மயங்கி, அவனைக் காமுற்றாள். உடனே, அவள் தனது அரக்கவுருவைக் கரந்து, பேரழகுடைய ஆரணங்காக உருவமெடுத்து, வல்லிக்கொடிபோல ஒல்கியும் அன்னமென நடந்தும் இராமன் முன்னர் வந்து, அவனிடம் தகாத வார்த்தைகள் கூறிநின்றதுமன்றி, சீதாதேவியை இழித்துப் பழித்துப் பலவாறு பேசினாள். அக்கொடுஞ் சொற்களைப் பொறுக்கலாற்றாத இளையவன் வெகுண்டு அவளை வெருட்டிக் கலைக்கவும் அவள் போகாளாக, அவன் அவளது மூக்கையும் காதையும் அறுத்துத் துரத்தினான். அதனால், கடுஞ்சினமும் பேரவமானமுங்கொண்ட அவள், அவ்வனத்திலுறையும் கரனென்னும் அரக்கனிடம் சென்று முறையிட, அவன் தன் தம்பியாகிய திரிசிரா, தூடணன் என்னுமிருவருடன், முப்பெருங்கனல் மூண்டெழுந்தமைபோல் எழுந்து, இராமனை எதிர்த்துச் சமர்விளைத்து, அவனது வில்வீரத்திற்காற்றாது அழிந்தான். அதனைக் கண்ட சூர்ப்பனகை, இலங்கை வேந்தனாகிய தசமுகனிடம் விரைந்து சென்று, தனக்கு இழிதொழிலுடைய இருமானுடரால் நேர்ந்த அவமானத்தைக் காட்டி, அந்த அவமானம் பேரெழிற் சீதையை இராவணனுக்காகக் கவர்ந்துவர முயன்றபோது ஏற்பட்டதெனக் கூறிச் சீதையின் அழகைப்

பலபடப் புனைந்துரைத்தாள். சீதையின் பெருவனப்பில் மனதைப் பறிகொடுத்த இராவணன் தன் தங்கையையும் தங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தையும் மறந்து, சீதையை மாத்திரம் மறவாது, அவள்மீது மோகங்கொண்டு அவளைக் கவரத் துணிந்தான்.

பின்னர், தசக்கிரீவன் மாரீசனென்னும் அரக்கனை யணுகி, அவனைப் பொன்மானுருக்கொண்டு சென்று சீதையை மயக்கும்படி ஏவ, அவ்வண்ணமே அவன் கண்கவர் வனப்புவாய்ந்ததொரு பொன்மானுகி இராமனிருந்த சூழலை நண்ணினுன். அப்பொழுது, அங்கு மலர் கொய்ய வந்த சீதை, அம்மாயமானின் பேரெழிலில் மயங்கி, அதனைப் பிடித்துத் தரும்படி தன்னுயகனை வேண்டினுள். அப்பொன்மான் மாயம் வல்ல அரக்கனின் செயலென இராமன் தெருட்டவும் தெளியாளான சீதையின் விருப்பத்தை நிறைவேற்ற, அவன் அம்மாயமானைப் பிடிக்கச் சென்றுன். அவன் அப்பொன்மானை நெடுந்தொலைவு துரத்திச் சென்றும் பிடிக்க முடியாதவனுகி, ஈற்றில், அம்பு தொடுத்து அதனைக் கொன்று வீழ்த்தினுன். அது நிலத்தில் விழும்போது, "சீதா, இலக்குமணு!" என்று இராமனைப்போல அழைத்தது. அந்த அவலக் குரலைச் செவியுற்ற சானகி, இடியேறுகேட்ட நாகம் போல நடுநடுங்கி, இலக்குவனை இராமன்பால் அனுப்பிவிட்டுத் தனியளாகப் பருணசாலையில் இருந்தாள். அதுவே தக்க தருணமென்பதை, அங்கு மறைந்திருந்த இராவணன் கண்டு, தன்னுருக்கரந்து தாபத வேடந்தாங்கிச் சானகியிடஞ் சென்றுன்.

கள்ளஞ் சிறிதுமறியாச் சீதை, அவனை மாதவ னெனவே எண்ணி வரவேற்று உபசரிக்க, அவ் வஞ்சகன் தன் பேருருக் காட்டி வெருட்டி அவளை அப் பருணசாலையோடு பெயர்த்துத் தன் தேரிலேற் றிச் சென்றான். சீதையின் அழுகுரலைக் கேட்ட கழுகின் வேந்தன் அவ்விடம் விரைந்து வந்து, அவ ளுக்கு 'அஞ்சேல்' என அபயமளித்து, இலங்கை வேந்தனோடு பெருஞ்சமர்விளைத்து, ஈற்றில் இராவண னாற் சிறகு வெட்டப்பட்டு நிலத்தில் விழ்ந்தான். இராவணன் சீதையோடு தென்திசை நோக்கி விரைந்தான்.

மாயமான் பின்னே சென்ற இராமனும் இராம னைத் தேடிச் சென்ற இலக்குமணனும் திரும்பிப் பர்ணசாலையை யடைந்து சீதையைக் காணாராகி அலமந்து, அங்கு தெரிந்த தேர்ச் சில்லின் சுவடு வழியே நடந்து சென்று குற்றுயிராய் நிலத்து வீழ்ந்து கிடந்த சடாயுவைக் கண்டனர் சடாயு, இராவணன் சீதையைக் கவர்ந்துசென்ற வஞ்சனைச் செயலை அவர்களிருவருக்குங் கூறி உயிர் நீத்தான். அவர்கள் புள்ளின் வேந்தற்கு ஈமக் கடன்கள் செய்துமுடித்து, அப்பாற் சென்று வயிற்றிற் பெரிய அங்காத்தவாயை யுடைய கவந்தனைப் போரிலே கொன்று அவனது சாபத்தை மாற்றி அவன் சொற்படி சபரி என்னும் தவ மூதாட்டியைக் கண்டனர். அச் சபரி அளவில் காலமாக இராமனை நினைந்து தவஞ் செய்தாளாகை யால், இராமனை நேரிற் கண்ட அளவிலேயே பேருவகை மிக்கவளாய் அரிய பூசனை செய்து வழிபட்டு, அவர்களுக்கு இரலைமலையில் வாழும் சுக் கிரீவனிடஞ் செல்லும் வழியைக் கூறி அனுப்பினாள்.

சபரியின் சொற்படி இராமன் இரலைமலையை யடைந்து, அங்கு வாலிக்குப் பயந்து கரந் துறையும் சுக்கிரீவனுக்கு அபயமீந்து அவனைத் தன் தம்பியாக ஏற்று, அவன் துயர் களைவதாக உறுதியளித்தான். சுக்கிரீவனின் தமையனான வாலி, ஒப்புயர்வற்ற மாவீரனும் வானர வேந்தனுமாவான். எனினும், அவன் பஞ்சமாபாதகங்களின் இருப்பிட மாக விளங்கி, தன் தம்பிக்குப் பலப்பல இன்னல்கள் செய்து அவன் மனைவியையுங் கவர்ந்துகொண் டான். அவ்விதம் மறவழிச்சென்ற அவனுந் தன்னுயிர் காக்க விரும்பி, தன்னை அடைக்கலமாக அடைந்தால் அவனையுங் காத்தல்வேண்டு மாதலால், இராமன் மறைந்துநின்று அம்பு தொடுத்து வாலியின் உரங் கிழித்தான். பின்னர் சுக்கிரீவனை வானர வேந்த னாக்கி அவனது பெருந்திறல் வீரர்களான கயவன், இடபன், நீலன், அயிந்தன், சதவிலி, அங்கதன் என்பவர்களுடன் எழுபது வெள்ள வானரச் சேனை யைத் துணையாகப் பெற்றான். இரவிசேயாகிய சுக் கிரீவன் தனது எழுபது வெள்ளச் சேனையையும் பல பகுதிகளாகப் பிரித்துச் சீதாபிராட்டியைத் தேடி வரும்படி எண்டிசையும் அனுப்பினான். தென்திசை சென்ற வாலி புத்திரனாகிய அங்கதன், சடாயுவின் தமையனாகிய சம்பாதியின் சொற்கேட்டுச் சீதா பிராட்டி இலங்கைத்தீவி லுள்ளாளெனத் துணிந்து, அங்கு சென்று தேடிவரும்படி என்னைப் பணித்தான். நான் அலைகடலைக் கடந்து, இலங்கையை யடைந்து அங்குள்ள விண்ணிவந்த மாளிகைகளெங்குந் தேடிச் சீதையைக் காணாது, ஈற்றில் அசோகவனத்திலே, அரக்கியர் மத்தியிலே, புலிக்குழாத்தகப்பட்ட மான்

போலவும் வெயிலிடை வைத்த விளக்குப்போலவும் அச்சமுஞ் சோர்வுங்கொண்டு விளங்கிய கற்பினுக் கணியான எம்பிராட்டியைக் கண்டேன். சீதாபிராட்டி யின் பெருந்துயர் நீங்கும்வண்ணம் இராமபிரானின் கணையாழியைக் கொடுத்து, 'எம்பிரான் வெகுவிரை வில் இலங்கை வருவன்' என, ஆறுதல் கூறி, அவ ளிடமிருந்து அடையாளமாகச் சூளாமணியைப் பெற்றுக்கொண்டு இராமன்பால் மீண்டு என் கண் களாற் கண்டனவற்றைக் கூறினேன். உடனே, இரா மன் வானர சேனையின் உதவியாற் கருங்கடலைத் தூர்த்து அணைகண்டு இலங்கையை யடைந்தான். ஆங்கு, இராவணன் தம்பியும் அறச் செம்மலுமாகிய விபீடணன் 'கற்பின் செல்வியாகிய சீதையைச் சிறை வைத்தமை அறமன்று' எனவும், 'அவளது கற்புத் தீயால் இராவணனும் அரக்கர்குலமும் இலங்கை யும் அழிதல் திண்ண'மெனவும் அறிவுரை கூற அதனைக் கேளாளுகிய இராவணனைத் துறந்து, இராமனைப் புகலடைந்தான். அவனைத் தன் மற்றொரு தம்பியாக ஏற்றுக்கொண்ட இராமன், அவனுக்கு இலங்கைச் செல்வம் நல்கி வாழ்த்தினான். பின்னர், இராமன் அறப்போர் முறையை எண்ணி, அங்கதனை இராவணனிடந் தூதாக அனுப்பிச் சீதையை விடு தலை செய்யும்படியும் அன்றேல் போருக்கு ஆயத்த மாகும்படியும் அறிவித்தான். இராவணன் இராமனை இகழ்ந்து, இறுதிவந்துற்றதனல் அறமுறையை மறந்து, சிறுதொழில் மனுடர்களாகிய இராம இலக்கும ணரை வெற்றிபெறல் திண்ணமென எண்ணிப் போருக்கெழுந்தான். முதனட் போரிலே தோற்று நிராயுதபாணியாக நின்ற இராவணனை இராமன்

நோக்கி, 'இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா' எனக் கூற, அவன் வெட்க மடைந்து நிலத்தையே நோக்கிக் கொண்டு அரமனையை யடைந்தான். மறுநாள் இராவணன் தன் தம்பியும் நெடுந்துயில் கொள்ளும் இயல்பு பொருந்தியவனும் பெருவலிபடைத்த வீரனுமாகிய கும்பகருணனை எழுப்பி, போர்க்கோலம் புனைவித்துப் போருக்கனுப்ப, அவன்கடும்போர்செய்து ஈற்றில் இராமபாணத்தால் உயிர் நீத்தான். அதனைக் கேட்டு ஆருத்துயரும் வெஞ்சினமுங் கொண்ட இராவணன் வெந்திறல் வீரனும் மாயத்தில் வல்லவனும் தன்னருமை மகனுமாகிய இந்திரசித்தைப் போருக்கனுப்பினான். அவன் தன்னாற்றலனைத்தையுங் கூட்டி மாயவித்தைகளைக் காட்டிப் போரியற்றிய போதிலும் இளையவனின் வெம்போருக்காற்ருது மடிந்தான். இந்திரசித்து இறந்த செய்தியைக் கேட்டு இராவணன் பெருந்துயர்கொண்டு உயிர் துடிக்கப் புலம்பினனுயினும் அவனது மானவுணர்ச்சி கிளர்ந்தெழுந்தமையால், அவன் தன் மூலபலமனைத்தையுந் திரட்டிப் போருக்கெழுந்து விண்ணும் மண்ணும் வெருக்கொள்ளும்படி வெஞ்சமராற்றி, இராமனது ஆற்றலுக்கும் வில்வீரத்திற்கும் எதிர்நிற்கலாற்ருது, தலைபத்துஞ் சிதறி உயிர்துறந்து மலைபோற் பூமியில் விழ்ந்தான். அதனைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் மகிழ்வாற் பூரித்து ஆர்த்தனர். பின்னர், இராமன் விபீடணன்மூலம் இராவணன் முதலியோருக்கு ஈமக்கடன் இயற்றுவித்து அவனை இலங்கை வேந்தனுக அங்கீகரித்தான். உடனே, நான் இராமன் கட்டளைப்படி அலகில் கற்புடைச் சானகியை அழைத்துவந்து இராமன் முன்னர் விடுதலும்,

இராமன் அவளைச் சினந்துரைக்க, அவள் அக்கினிப் பிரவேசஞ் செய்து அழியாளாகித் தன் கற்பின் செவ்வியை உலகோர்க்கு உணர்த்தினாள். அவளது மாசுமறுவற்ற கற்பின் திண்மையைக் கண்டு யாவரும் வியப்படைந்து ஆர்த்தனர்; இராமன் சீதையை அணைத்து அவள் துயர் துடைத்தான்.

"இவ்வாறு பதினான்காண்டின் முடிபுநாள் வந்தடைந்தது. அதனையுணர்ந்த இராமன் பரதனின் துன்பத்தை நீக்கக் கருதி, சிறிதுந் தாமதஞ் செய்யாது, விபீடணன் நல்கிய விமானத்தில் யாவரையும் ஏற்றி, விண்வழியாக விரைந்துவந்து கங்கைக்கரையில் முனிசிரேட்டராகிய பரத்துவாசனது ஆச்சிரமத்தில் தங்கியுள்ளான். அரக்கர்களை அழித்து அறத்தை நிலைநாட்டிய பெருவீரனை இராமனை அங்குள்ள மாதவர்கள் வாழ்த்தி உபசரித்தனர். அப்பொழுது இராமன் தனது வனவாசகாலத்தின் இறுதிநாள், இன்றே என அறிந்து, என்னை அழைத்து, மிகுவிரைவில் அயோத்தியை யடைந்து, தன் வரவை எதிர்நோக்கிப் பெருந்துன்புழந்து சோரும் பரதனுக்கு ஆறுதல் கூறும்வண்ணம் பணித்தான். அயோத்திக்குச் செல்லும் வழியில் நின்னைக்கண்டு, இராமன் பரத்துவாசமுனிவனது ஆச்சிரமத்தில் எழுந்தருளியிருக்குஞ் செய்தியைத் தெரிவிக்கவே இங்கு வந்தேன்."

இவ்வாறு குகனுக்குத் தானறிந்தனவுங் கண்டனவுமாகிய வரலாறுகளைக் கூறிய அனுமான், கணப்பொழுதுந் தரியாது, காற்றினுங் கடுகி அயோத்தியை நோக்கி விரைந்தான்.

## 13. குகன் இராமனைத் தரிசித்தல்

அனுமான் கூறிய அச் செய்தியினைக் கேட்ட குகன் பெறற்கருந் தவப்பேறு பெற்றவன் போன்று பேருவகை கொண்டான். பிறவிப் பெரும்பயன் கிட்டியதெனப் பூரித்தான். இராமனின் செங்கமலப் பாதங்களைப் பணிந்து தொழும்பு செய்யவேண்டுமென ஏங்கிக் கிடந்த அவனுக்கு அச் செய்தி ஆரமிழ்தம் போன்று இனித்தது. உள்ளக்களிப்பு விஞ்சுதலால் ஆடினன்; பாடினன்; இராமன் எழுந்தருளியிருந்த திசைநோக்கித் தொழுதான். அக்கணமே அவன் தனது வேட்டுவச் சுற்றம் தன்னைச் சூழ்ந்து வர பேராவல் பிடர்பிடித்துத்தள்ள, பரத்துவாச முனிவரது ஆச்சிரமத்தின் சூழலைச் சார்ந்தான்; தன் சேனையைத் தூரத்தே நிறுத்தித் தனியனாகச் சென்று, கமலக் கண்ணனாகிய இராமனை, கண்ணும் மனமுங் குளிரக் கண்டான்.

பதினான்காண்டுகளின் பின்னர், தன்னாருயிர்த் துணைவனும் தலைவனுமாகிய இராமனைக் கண்ட குகனது மனதிலே, பேருவகை வெள்ளம் பொங்கி எழுந்தது. அதனால், அவன் தான் நின்ற சூழலையும் அங்கிருந்த மாதவர்களையும் மாத்திரமன்றித் தன்னையே மறந்து, உணர்வுருவினனாகிக் கரங்களைச் சிரமீது குவித்துக்கொண்டு ஓடினன்; இராமனைச் சுற்றிச் சுற்றிப் பலமுறை வலம் வந்தான்; விம்மி விம்மி இருகணீர்பொழிய அழுதான்; இராமனது கமலபாதங்களில் வீழ்ந்து, கண்ணீரால் அதனைக்

கழுவி, அன்பென்னுந் தூய மென்மலர் சூட்டி நெடிது நேரம் வணங்கிக்கொண்டு கிடந்தான். குகனது எல்லையற்ற பேரன்பையும் அன்பிலே முகிழ்த்த செயல்களையுங் கண்ட இராமன் அருளொழுகுங் கண்ணோடு அவனை நோக்கி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, குகனைத் தூக்கியெடுத்துத் தன்னருமைத் தம்பியைத் தழுவுவான்போன்று மார்புறத்தழுவி மகிழ்ந்தான். மிகுந்த கனிவுடனே, "ஐய, நின் மனைவி, மக்கள் முதலானோர் மிக்க நலமுடையரா?" என்று கேட்டான்.

முன்பு சந்தித்தபோது, இராமன் குகனைத் தன்னருமைத் தம்பியெனக் கூறி அன்பு பாராட்டியமையால், மனங் கசிந்து பரவசமடைந்த குகன், தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் இராமனுக்கு அருப்பணஞ் செய்திருந்தான். இப்பொழுதோ இராமன் தன்னை எடுத்து மார்புற அணைத்தமையால் கண்ணும் மனமும் நீராயொழுகக் குகன் இராமன் வினவிய வினக்களுக்கு விடையாகத் தன் மனைவி மக்கள் ஆகியோரது சுகநலன்களைப் பற்றிக் கூறுது, "எம்பெருமானே, இந் நாயடியேனுக்கு நினது பெருங் கருணை, துணையாக இருக்கிறது, அதுவே எனக்கு உயர்ந்ததும் அரியதுமான பொருள். ஆகவே, எனக்கு மனைவியும் மக்களும் மற்றுமுள்ளோர்களும் உயர்ந்தவர்களல்லர்; அரியவர்களல்லர்; நின் கருணை எனக்குக் கிடைத்தபோதிலும் நான் ஒருபாவி. நின்னை நிழல்போல நீங்காது தொடர்ந்துவந்து நின்னுடன் வாழ்ந்த இலக்குவனைப் போலத் தொண்டுபல செய்ய இயலாத பாவி. அப்படிப்பட்ட மயக்க அறிவுபொருந்திய மனத்தையுடைய நான் உயிர்தாங்கி வாழ்ந்து

யாது பயன்? நான் நின்னைப் பிரிந்தபோதே இறந்திருத்தல் வேண்டும். அங்ஙனம் செய்யாத எனக்கு உயிர்வாழ்வு மிகுந்த இனிமையுடையதுபோலும்!" என்று கூறினான்,

"அருள்உன(து) உளது நாயேற்கு
அவரெலாம் அரிய வாய
பொருளலர்; நின்னை நீங்காப்
புணர்ப்பினால் தொடர்ந்து போந்து,
தெருள்தரும் இளைய வீரன்
செய்வன செய்க லாதேன்
மருள்தரு மனத்தி னேனுக்(கு)
இனிதன்றோ வாழ்வு மன்னோ"

*[மீட்சிப்படலம் 314]*

என்று, இவ்வாறு தன்னைத்தானே வெறுத்துக் கூறி, அழுங்கி நின்ற குகனை, இராமன் அருளொடு நோக்கி, "ஐய, நீ இவ்வாறு கூறுவதேன்? எனக்கு என் அன்புத் தம்பியான பரதன் வேறு; நீ வேறு? அவன் என் கூட வந்து எனக்குப் பணிவிடை புரியாது, என் கட்டளைப்படி அயோத்தியை யடைந்து, நாடாண்டது தவறன்று. அவனைப்போலவே என்கூட வராது என்னை நெடுநாட் பிரிந்திருந்து உன் சுற்றமும் என் சுற்றமுமான குடிமக்களைக் காத்து இங்கிருந்த நீயும் தவறுடையையல்லை. ஆகவே, இவ்வாறு அழுங்கித் துயரெய்திச் சோர்தல் அழகன்று" என ஆறுதல் கூறினான். அதனைக் கேட்ட குகன் சிறிது மனவமைதி பெற்று, மீண்டும் அக் கார்வண்ண மேனியானை வணங்கியும் இராமனருகே நின்ற கார்த்தடங் கண்ணியாஞ் சீதையையும் இளவலையும் பணிந்தெழுந்தும் ஒருபால் ஒதுங்கி நின்றான்.

அப்பொழுது இராமன் தன்னயலிலே நின்ற சுக்கிரீவன் முதலிய வானர வீரர்க்கும் இலங்கை வேந்தனான விபீடணனுக்கும், கங்கை வேடனும் தன் தம்பியுமான குகனை அறிமுகப்படுத்த எண்ணி, அவர்களை நோக்கி, "என்னருந் துணை வீரர்காள், இவன் கங்கையிருகரையிலுமுள்ள சிருங்கிபேரத்தின் தனித்தலைவன்; எயினர் வேந்தன். அனைத்துயிர்களிடத்தும் தாயைப்போல அன்புடையான். தன்னலங் கருதாது தியாககுணம்பூண்டு பரதனுக்கும் எனக்கும் பல்லுதவியீந்த வள்ளல்; குகன் என்னும் பெயரினன்" என்றான். குகனது அருங்குணத்தியல் பனைத்தையும் இராமன் சொல்லக்கேட்ட சுக்கிரீவன் முதலியோர் அவனைத் தழுவி உரையாடிக் கேண்மை பாராட்டினர். அவர்களனைவரும் இராமன்பாற்கொண்ட அன்பையும் பெருமதிப்பையுங் கண்ட குகன் இராமனை வியந்து போற்றினான்; தன் புதிய நண்பருடன் அளவளாவி, அன்பு பாராட்டி மகிழ்ந்தான். அப்பொழுது கதிரவன் பூமகளை யணைத்திருந்த தன் செங்கதிர்க் கரங்களை நீக்கி மேலைக் கடற்கண் மூழ்க, அவள் இருளென்னும் பகைவனது கொடுங்கரங்கள் தீண்டப்பட்டு நலிந்தாள்.

இரவு வந்தெய்தியதும் இராமன் மாலைநியமங்களை முறைப்பட முடித்து, அம் மாதவப்பள்ளியிலே எங்கெங்கும் அன்பும் இன்பமும் பரிமளிக்கச் சானகியோடு புற்பாயலிலே துயின்றான். முன்னொருபோது கங்கைக்கரையிலே இராமன் தங்கியிருந்தகாலை, அவனையுந் தேவியையும் குகனும் இலக்குவனும் கண்ணிமையாது விடியும்வரையும் காவல்புரிந்தமையைப் போன்று, அன்றிரவும் குகன், தனது மாவீர

ரனைவரையும் மாதவப்பள்ளியைச் சூழ்ந்துநின்று காவல்புரியும்படி ஏவி, தானும் இலக்குவனுமாக நாணேற்றிய வரிவில்லுடன் கலங்காது அவ்விராப் பொழுது விடியும்வரையுங் காவல்புரிந்தனர்.

காலை மலர்ந்ததும், முதனாட் பிரிந்த தன்னருமை நாயகனான தினகரனின் இளங்கதிர்க் கரங்கள் தீண்டப்பட்டுப் பூமகள் புதுமையும் பொலிவும் பெற்று மகிழ்ந்தாள். இராமன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, மாதவர்களிடம் விடைபெற்றான். அவர்கள் ஆசி பல வழங்கி, இராமனை அரிதிற் பிரிவாராகி விடையீந்தனர். இராமன் தம்பியுடனும் தையலுடனும் விமானமூர்ந்து தந்துணைவர்களுங் குகனுந் தொடர்தர அயோத்தி நோக்கிப் புறப்பட்டான்.

# 14. குகன் முடிசூட்டுவிழாவைக் கண்டு மீண்டமை

இராமனிடம் பாதுகைகள் பெற்று மீண்ட பரதன் இராமனைப் பிரிந்தமையாற் பொறியற்ற பாவை போற் களையற்றுக் கிடந்த அயோத்திநகரை யடைய விருப்பில்லாதாய் அதன் எல்லைப்புறத்துள்ள நந்திக் கிராமத்திலே தங்கினான்; அங்கே, பாதுகைகளை அரியாசனத்தேற்றி, அவைகளை இராமனாகப் பாவனை செய்து காலை, மாலை, நண்பகல் என்னும் முப்பொழுது மாத்திரமன்றி, எப்பொழுதும் அவைகளைப் பூசனை புரிந்து வழிபட்டான்; இராமனே முழுதுலகையும் முறை திறம்பாது ஆளுகை செய்பவனாகத் தன் மனத்து எண்ணி, செங்கோல் நடத்தினான்; இராமன் கானடைந்து சொல்லொணாக் கடுந் துயருழந்து வாடும்போது, தான் அரமனையிற்றங்கி அரசபோக மனுபவித்தல் அறனன்று என்றெண்ணியமையால் தானும் தவவேடந் தாங்கி காய், கனி, கிழங்கருந்தி புழுதியிற் படுத்துவந்தான். அவன் எப்பொழுதும் இராமன் இருந்த தென்திசையை நோக்கித் தொழு வான்; இராமன் வருகையை எண்ணிப் பெருமூச் செறிவான்; என்புருக அழுவான்; இவ்விதம் துய ரடைந்து உயிர்தேய, அன்பின் ஒப்பற்றதோர் உருவ மாக விளங்கினான்.

ஒருநாள், பரதன், இராமனது வனவாசகால மாகிய பதினான்காண்டுகள் நிறைவுற்றன என்பதை யும் அற்றைநாளே இராமன் அயோத்திக்கு எழுந்

தருளி வரல் வேண்டு மென்பதையுஞ் சோதிடர் உணர்த்த உணர்ந்தனன். அச் செய்தியை யறிந்து பரதன், பருவரலெய்தி உயிர் ஊசலாடக் கலங்கி ஞன். "எனக்கியம்பிய இந்நாளில் இராமன் ஈண் டெழுந்தருளாமைக்குக் காரணம் யாதோ? அவன் சத்தியத்தையும் என் துன்பத்தையுங் கோசலாதேவி யின் அன்பையும் எண்ணி மீண்டுவரும் வழியில் உயிர்குடிக்கத்தக்க தொரு பகை எழுந்ததோ? மூவரையும் வெல்லும் விறலமைந்த இராமனுக்கும் ஒரு பகையுண்டோ? அன்றேல், 'பதினன்காண்டு காலம் அரசாண்ட பரதனே இனியும் அரசாளட் டும்' என்று எண்ணி வாராதிருந்தானே" எனப் பலவாறெண்ணிச் சோர்ந்தான். பின்னர், தனது தம்பியாகிய சத்துருக்கனை அழைத்து, "ஐய, என் முன்னேன் எனக்குச் சொன்ன அவதியில் இங்கு வந்தானல்லன். அதனல், யான் தீயினிற் குதித்து உயிர்துறக்கத் திர்மானித்துவிட்டேன். நீ அரசனகி இக் கோசல நாட்டை ஆள்க" எனக் கூறித் தீ மூட்டும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சத்து ருக்கன், "மூத்தோனுகப் பிறந்து உரிமை முறையால் தான் பெற்ற நிலமகளை ஆட்சி செய்யாது கைவிட்டு, கானுளப் போனவனைக் காத்து அவன் பின்னே தொடர்ந்து சென்றுன் இலக்குமணன் என்னும் ஒரு தம்பி. அப்படிக் கானடைந்த அவர்கள், திரும்பி நாடடையுங் காலவெல்லை கடந்துவிட்டதென்று தன் னுயிர்விடத் திர்மானித்தான் பரதன் என்னும் மற் ருெரு தம்பி. இவர்களுடன் பிறந்த மற்ருெரு தம்பி யாகிய நான் மாத்திரம் நாணமின்றி இவ்விராச்சி யத்தை ஆள்வேனும்! இவ்வரசாட்சி மிக இனிமை

பயப்பதுபோலும்!" என்று பெருந்துயராலே தன்னை மிக வெறுத்துக் கூறினன். ஆயினும் பரதனது கட்டளைக்கமைந்து பெருந் தீ மூட்டினன். அதனைச் செவியுற்ற கோசலை துடித்துப் பதைத்து, மிக விரைவாகப் பரதனை யடைந்து. "மைந்த, உனக்கு இச் செயல் அடாது. நீ தியிற் குதித்தால் மற்ற யாவரும் இத் தீயிற் குதித்து உயிர்விடுவர்; உலகம் அழியும்" எனப் பல அறிவுரைகள் கூறித் தடுத்தாள். பரதன் கோசலையின் சொற்களைக் கேளானய், "தாயே, தாய் தந்தையர் சொற்கேட்டு நடத்தலும், எம்மிடம் கொண்ட அன்பை அடியோடு மறந்துவிடுதலும் எமது தலைவனை இராமனுக்கேயுரியன. யானது செய்யேன்" என்று கூறி, சுடர்விட்டெரியும் அக்கினியை மும்முறை வலம் வந்து, அதற்குப் பூசனை செய்து வழிபட்டுத் தீயிற் குதிக்கப் புகுந்தான்.

அதே கணத்தில், "ஐயன் வந்தனன்; ஆரியன் வந்தனன்" எனக் கூறிக்கொண்டு, அனுமன் பரதன் முன்னிலையிற் குதித்தான். குதித்த அனுமன் கணப்பொழுதுந் தரியாது தன் கையினல் எரியைக் கரியாக்கினன். பின்னர், பரதனது பாதகமலங்களைப் பணிந்தெழுந்து, "ஐயனே, இராமன் நினக்குக் கூறிய அவதிமுடிய இன்னும் நாற்பது நாழிகைப் பொழுதுண்டு. அதற்கு முன்னர் இராமன் நின்னை வந்தடையானேல், யானே நினக்குமுன் எரியிற் குதிப்பேன்" என்று கூறி, இராமனது பெயர் பொறித்த மோதிரத்தை அடையாளமாகக் காட்டினன். விடமுண்டு துன்புற்றோர் அருமருந்து பெற்று விடம் நீங்கி மகிழ்ந்தாற்போன்று, ஆண்டு நின்றோரனைவரும் அக் கணையாழியைக் கண்டு களிபே

ருவகை கொண்டனர். பரதன், மோதிரத்தைப் பெற்று முகத்தோடணைத்து மகிழ்ச்சியாற் பூரித்துச் சோர்வு நீங்கியவனாய், அனுமனைத் தழுவினான். அனுமன், தன் வரலாற்றையும் இராமன் காடேகச் சென்ற பதினான்காண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் யாவரும் அறியும்வண்ணங் கூறினான்.

பின்னர், பரதன் அப் பரந்த காரிருளிலே, காலின் மைந்தனான அனுமானோடு காலால் நடந்து, இராமனை எதிர்கொண் டழைப்பதற்காகக் கங்கைக் கரையை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது கீழ்வானிலே சூரியன், இராமனின் முடிமிசைச் சூடும் ஒப்பற்றதோர் சிகாமணிபோன்று உதயமானான். அந் நேரத்தில் அனுமான் வானிலூர்ந்துவரும் விமானத் தைப் பரதனுக்குக் காட்டி, "அதோ, அண்ணல் வருகிறான்; ஐயன் வருகிறான்" என்று கூறினான். விமானம் கீழிழிதலும் பரதன் இராமனைக் கண்ணா ரக் கண்டு போற்றிப் பணிந்தான். இராமன் பரதனைத் தழுவித் தன்னுடன் வந்தோரனைவரையும் பரதனுக்கு அறிமுகஞ் செய்தான். அப்பொழுது அங்கே நின்ற குகன் ஓடிவந்து, பரதன் பாதங்களில் விழ்ந்து வணங்க, பரதன் அவனைத் தழுவியணைத்து "அன்ப, நீ நின் கிளையோடும் சுகம்பெற்றுள்ளாயோ?" என வினாவினான்.

பின்னர், யாவரும் விமானத்திலிவர்ந்து, நந்திக் கிராமத்தை யடைந்தனர். அங்கு இராமன் தனது சடைமுடியை நீக்கி நீராடிப் பட்டுப் பீதாம்பரங்களி னால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, தன்னருந் தம்பியர் பின்னே நின்று பணிபுரிய, தேரேறி அயோத்திநகரை யடைந்தான். அவனைக் கண்ட

நகர மக்கள் சந்திரனைக் கண்ட கடலைப்போலப் பொங்கி ஆரவாரித்து மகிழ்ந்தனர்.

குலகுருவாகிய வசிட்டமுனிவர் அரியணைமீ தமர்ந்து, "சத்தியச் செம்மலும் அறத்தின் காவலனு மாகிய இராமன் நிலமகள் மணாளனாக மணிமுடி சூடும் நன்னாள் நாளையேயாகும்" என்று கூற அச் செய்தியை வள்ளுவன் முரசறைந்து கோசல நாடெங்கும் தெரிவித்தான். மன்னர்களனைவர்க்கும் ஓலைகள் போக்கப்பட்டன. அன்றே தெய்வச் தச்ச னான மயன் கண்கவர் வனப்பும் கம்பீரமும் சிற்பத் திறனும் வாய்ந்த மகுடாபிடேக மண்டபமொன்றைப் பளிங்கினாற் சமைத்தான். நகரத்திருவீதிகளும் கோபுரங்களுமாகிய எல்லாவிடங்களும் அழகமைய அலங்கரிக்கப்பட்டமையால் அயோத்திமா நகரம் தேவருலகுபோற் பொலிந்தது. மறுநாட்காலையில் இராமனது முடிசூட்டுவிழாவைக் காண்பதற்காக எண்டிசை மக்களும் வந்து குவிந்தனர். மாமன்னர் களும் சிற்றரசர்களும் மாதவத்தவர்களும் வந்து திரண்டனர். மணிமுடி கவிப்பதன்முன் நிகழவேண் டிய சடங்குகளனைத்தையும் முறைப்பட முன்னின்று நடத்திவைத்தார் வசிட்டர். முதலில் இராமனுக்குக் காப்பு நாண் கட்டப்பட்டது. பின்னர், இராமனையும் தேவியையும் உயர்செம்பொற் பீடத்திருத்தி, அனும னாற் கொணரப்பட்ட நாற்கடனீரையும் மன்னர்களாற் கொணரப்பட்ட புண்ணிய தீர்த்தங்களையும் தாயனைய சரயுவினீரையும் பசும்பொற்குடத்தேந்தி, மங்கலகிதம் பாட, மறையொலி முழங்க, சங்கினம் குமுற, தண்ணுமைகொட்ட, பல்லியமார்ப்ப, மக்க ளாரவாரஞ் செய்ய, மாதவர்களும் மந்திரக்கிழவர்

களும் சுக்கிரீவன் முதலிய நண்பர்களும் அபிடே கஞ் செய்தனர். பின்னர், பட்டுப்பீதாம்பரங்க ளுடுத்து, நவமணியணிகள் பூண்டு, கற்பின்செல்வி யாஞ் சீதையோடும் இராமன் இரவிகுலவேந்தர் பலரிருந்து நெறிமுறை தவருது அரசோச்சிய அரி யணையில் அமர்ந்தான். அப்பொழுது அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்திப் பணிந்து நிற்க, பரதன் வெண்குடை கவிக்க, இலக்கு வனுஞ் சத்துருக்கனும் கவரிவீச, மங்கல முரசம் முழங்க, மறையவர் ஆசிகூற, மக்கள் வாழ்த்தொலி கடலொலிபோல் ஒலிக்க, வசிட்டமாமுனிவர் இராம பிரானுக்குத் திருமுடி சூட்டினர். இராமன் பரதனுக்கு மணிமகுடஞ்சூட்டி இளவரசனுக்கினன்.

கருமுகில் தாமரைக்காடு பூத்து, மின்னெளி வீசும் மணிமகுடஞ் சூடி விளங்குதலைப்போன்று, இராமன் ஓலக்கமண்டபத்திலே, அரியணைமீது சீதா தேவியோடும், மன்னரும் மாதவரும் மக்களும் அடி பணிந்தேத்த இருந்தான். அவ்வேளையில் சுழலுங் கண்ணனும் கல்லைப்போலத் திரண்ட தோளனும் மடங்கலன்னனும் கங்கைக் கிறைவனுமான குகன் தனது வெற்றி வெஞ்சேனையோடும் இராமனை வலம் வந்து தொழுது நின்றுன்.

முடிசூட்டுவிழாவுக்கு வந்தோரனைவரும் இரண்டு திங்கள் அயோத்தியிலே இராமனின் விருந்தினராகத் தங்கியிருந்தனர். பின்னர், இராமன் அந்தணர்களின் ஆசை நிறைவுறும்வண்ணம் அவர்களுக்கு மணியும் பொன்னும் முத்தும் முதலியவாய பலபல தானங் கள் ஈந்தான். மன்னர்கள் மனங்களிக்கப் பலபல பரிசிலளித்தான். சுக்கிரீவன் முதலிய வானரவீரர்க்கு

அவரவர் தகுதிக்கேற்பப் பலபல சன்மானங் கொடுத்தான், இலங்கை வேந்தனாகிய விபீடணனுக்குப் பலபல வரிசைகள் செய்தான்.

பின்னர், அயலில் நின்ற குகனைப் பார்த்து, "சிருங்கிபேரநகர்க் கிறைவனே, குற்றமற்ற அரிய துணைவனே, உனக்கு யான் உபசாரங்கூற வார்த்தைகளே இல. உன்னன்பு கடல்போல் ஆழமானது; வான்போற் பரந்தது" எனப் பாராட்டி, கருங்களிறுகளும் உயர்சாதிக் குதிரைகளும் பொன்னும் பட்டாடையும் பலவகை அணிகலன்களும் வழங்கினான். "நீ உன் ஊர் புக்கு, உனது மனைவி மக்களோடு இனிது வாழ்ந்து, குடிமக்களைக் காத்து நெடிதுநாள் அரசாள்வாயாக" என விடையுங் கொடுத்தான்.

விபீடணன் குகனைத் தழுவி அன்பு பாராட்டி, அவனையும் அவனது சேனையையும் வானரவீரர்களையும் தனது விமானத்திலேற்றிக்கொண்டு, ககனமார்க்கமாகப் புறப்பட்டான். முதலில், குகனைக் கங்கைக் கரையிலுள்ள அவனது பேரூரான சிருங்கிபேரத்தில் இறக்கிவிட்டு அப்பாற் சென்றான். குகன் தனது மனமென்னும் உயர்ந்த கோவிலிலே இராமபிரானைத் தெய்வமாகப் பிரதிட்டைசெய்து, அவனையே பெறற்கருஞ் செல்வமாகப் போற்றி, எப்பொழுதும் வழிபட்டு இனிது வாழ்ந்தான்.

அற்றம் நீத்த மனத்தினனாகிய குகன், இராமன் மீது அன்புகொண்டு, பத்தி செய்தமையால், இன்றும் மக்கள் மனத்திலே குகப் பெருமாளாக விளங்கி, சிரஞ்சீவித்தன்மை பெற்று வாழ்கிறான்.

# அரும்பத விளக்கம்

## பாடம் 1 : சிருங்கிபேரம்

### பக்கம் 1

அரசு - அரசன்
திருமால் - விஷ்ணு
தீண்டுதல் - தொடுதல்
புனிதம் - பரிசுத்தம்
வளம் - செழிப்பு
குன்று - மலை
ஆக்குதல் - உண்டாக்குதல்

### பக்கம் 2

கழி - தடி
தள்ளாமை - தளர்ச்சி
நெடுமூச்சு - பெருமூச்சு
நரை - நரைமயிர்
திரை - தோற்சுருக்கம்
மூப்பு - வயோதிபம்
காவிமலர் - குவளைமலர்
தனம் - முலை
நங்கை - பெண்
நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
வணிகமக்கள் - வியாபாரிகள்
வேந்தன் - அரசன்
விளைவு - பயன்
குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
சாரல் - பக்கம்
நறுந்தரு - வாசனையுள்ள மரம்
தேனிறால் - தேன் கூடு
எயினர் - வேடர்
அச்சம் - பயம்
வயிறலைத்தல் - வயிற்றிலடித்தல்

### பக்கம் 3

முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்
ஆயர் - இடையர்
ஆண்டுள்ள - அங்குள்ள
முளிதயிர் - கட்டித்தயிர்
நறுநெய் - வாசனையுள்ள நெய்
ஒசித்து - முறித்து
ஆய்ச்சியர் - இடைச்சியர்
பாலியலீலை - இளமை விளையாட்டு
கமலக்கண்ணன் - கண்ணபிரான்
மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
கதவம் - கதவு
செவிமடுத்தல் - கேட்டல்
மள்ளர் - மருதநில மக்கள்
போற்றி - வணங்கி
கழனி - வயல்
புல்லிய - இழிந்த
நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
வனவிருக்கங்கள் - காட்டு மரங்கள்

பக்கம் 4

தவப்பள்ளிகள் - ஆச்சிரமங்கள்
விழைந்து - விரும்பி
வேள்வியியற்றல் - யாகஞ் செய்தல்
அருணெறி - அருள்வழி
பூசனை - பூசை
கிள்ளை - கிளி
பூவை - நாகணவாய்
கறித்து - கடித்து
முன்றில் - முற்றம்

பக்கம் 5

அங்காந்தவாய் - திறந்தவாய்
கண்ணி - பறவைகளைப் பிடிக்கும் கயிறு
குருளை - குட்டி
துடி - உடுக்கு
ஆறலைத்தல் - வழியிற் செல்வோரைத் துன்புறுத்தல்
வௌவல் - கொள்ளையடித்தல்
திறல் - வலிமை

## பாடம் 2: குகனுஞ் சுற்றமும்

பக்கம் 6

மேம்பாடு - சிறப்பு
பேருரு - பெருந்தோற்றம்
சீற்றம் - கோபம்
எஞ்ஞான்றும் - எப்பொழுதும்
முடை - புலால் நாற்றம்
கண்டை - வீரர்கள் அணியும் காலணி (கழல்)
சல்லடம் - குறுங் காற்சட்டை

பக்கம் 7

கூற்றுவன் - இயமன்
தொனி - சத்தம்
மறவர் - வீரர்
கல் - மலை
திண்மையர் - வலிமை யுடையவர்
ஆராவன்பு - மிகுந்த அன்பு
பரிபாலனம் - ஆட்சி

பக்கம் 8

நெறி - வழி
அம்பி - தோணி
ஓம்பி - காத்து
முறை - நீதி
புரந்து - காத்து
விறல் - வெற்றி
கீர்த்தி } - புகழ்
சீர்த்தி }
நிதி - செல்வம்
வாணிபம் - வியாபாரம்

## பாடம் 3 : குகன் இராமனைக் கண்டமை

### பக்கம் 9

சிற்றன்னை - சிறியதாய்
மாதவர் - முனிவர்
பரிவாரம் - படை
கையுறை - உபகாரப் பொருள்
தபோதனர் - முனிவர்
அகம் - மனம்

### பக்கம் 10

தகைமை - தகுதி
பணித்து - கட்டளையிட்டு
அனுமதி - உத்தரவு
பணிபுரிய - தொண்டுசெய்ய
ஈண்டு - இங்கே
இளவல் - தம்பி (இலக்குமணன்)
நுண்மதி - கூரிய புத்தி

### பக்கம் 11

ஓடம் - தோணி
தணியாக்காதல் - குறையாத அன்பு
சேவிக்க - வணங்க
கொற்றவன் - வெற்றியுடையவன் (அரசன்)
நாவாய் - தோணி
கமலக்கண்ணன் - இராமன்

### பக்கம் 12

குஞ்சி - தலைமயிர்
பணிதல் - வணங்குதல்
இராகவன் - இராமன்

### பக்கம் 13

கண்ணுதற்பெருங்கடவுள் - சிவபெருமான்
மிச்சில் - எச்சில்
ஊன் - இறைச்சி
பரிவு - அன்பு
சீர்த்தது - சிறந்தது
பவித்திரம் - தூய்மை
கிளை - சுற்றம்
வைகறை - விடியற்காலை

### பக்கம் 14

பீதாம்பரம் - பொன்னுடை
கவித்தல் - சூடுதல்
கணப்போது - சிறிதுநேரம்
கருணை - அருள்
விளித்தல் - அழைத்தல்
கேண்மை - நட்பு

### பக்கம் 15

புரத்தல் - காத்தல்
ஆதவன் - சூரியன்
குடபால் - மேற்குத்திசை
பரிபவம் - துன்பம்

## பாடம் 4 : குகன் அயோத்தியில் நிகழ்ந்தன அறிதல்

### பக்கம் 16

இரவிகுலம் - சூரியகுலம்
அரவணைத்தல் – அன்புடன் தழுவுதல்

### பக்கம் 17

தினைத்துணை - தினையளவு (சிறிது)
திமிர்ந்த - வளர்ந்த
ஞானம் - அறிவு
துறந்து - நீங்கி
மறுமை — மோட்சம்
நன்னாள் - நல் + நாள்
வேதியர் — பிராமணர்
பூமகள் - பூமி
கொழுநன் — கணவன்
மௌலி - முடி

### பக்கம் 18

அணிநகர் - அழகிய நகரம்
சுதை - சுண்ணச்சாந்து
அணியணியாக – வரிசை வரிசையாக
பொலிந்த - விளங்கிய
நிமலன் - சிவபெருமான்
பரிதி - சூரியன்
நிகர்த்து - ஒத்து
பன்னிறம் - பல் + நிறம்
வாசனைச்சுண்ணம் - வாசனைப் பொடி
கொண்கன் – கணவன்

### பக்கம் 19

மறை - வேதம்
சுபவேளை — நல்லநேரம்
செவிமடுத்தல் - கேட்டல்
மகுடம் - முடி

### பக்கம் 20

ஆன்கன்று - பசுக்கன்று
இழிந்து - இறங்கி
செங்கை - செம்மை + கை
பவளவாய் - சிவந்தவாய்
சென்னி - தலை
உரை - வார்த்தை
ஆழி - சமுத்திரம்

### பக்கம் 21

பணி - கட்டளை
கோவில் - அரமனை
கவரி - சாமரம்
கானம் - காடு

### பக்கம் 22

அனல் – நெருப்பு
மங்கலவேளை — நல்லசமயம்
மன்னவை - அரசசபை

பக்கம் 23

சாகரம் - கடல்
இளந்தேவி - இளைய மனைவி
அன்னாள் - அப்படிப்பட்ட அவள்
மனக்களிப்பு - சந்தோஷம்
அழுங்குதல் - வருந்துதல்

பக்கம் 24

ஊழி - உலகமுடிபுகாலம்
உருத்து - கோபித்து
தம்முன் - தமையன்

## பாடம் 5: காவல் வீரர் இருவர்

பக்கம் 25

சூழ்வினை - சூழ்ச்சி
ஆரணியம் - காடு
உன்னுதல் - நினைத்தல்
நோற்றல் - தவம்செய்தல்
நாண்மலர் - அன்றலர்ந்த மலர்

பக்கம் 26

பாயல் - படுக்கை
வருடிய - தடவிய
பரிபவம் - துன்பம்
கிளர்தல் - மேன்மேலெழுதல்

பக்கம் 27

கடிதல் - சொல்லுதல்
அருவி - சிற்றாறு
அம்பி - யானை
குழாம் - கூட்டம்
கவசம் - போர்வீரரணியும் சட்டை
கண்வளர்தல் - நித்திரை செய்தல்
அண்ணல் - பெருமையிற் சிறந்தோன்
புன்மை - இழிவு
வியாகுலம் - துன்பம்

பக்கம் 28

சோதி - ஒளி
ஞாயிறு - சூரியன்
கமலம் - தாமரை
சானகி - சீதை
பாணம் - அம்பு
கோன் - அரசன்

## பாடம் 6: குகனை இராமன் பிரிந்தமை

பக்கம் 29

கனிவு - அன்பு
பிதுர்வாக்கியபரிபாலனம் - தந்தைசொற் காத்தல்
இயைபு - தகுதி
தீஞ்சுவை - இனிய சுவை
நங்கை - பெண்

பக்கம் 30

மஞ்சம் – கட்டில்
நண்பகல் – நடுப்பகல்
துகில் – ஆடை
கடிதாக – விரைவாக
விண்ணகம் - வானுலகம்

பக்கம் 31

போற்றி – வணங்கி
சேவடி – சிவந்த பாதம்

பக்கம் 32

மடவன்னம் – இளைய அன்னம்
ஆற்ருமை – சகிக்கக் கூடாமை
அருப்பணம் - நிவேதித்தல்
சியம் – சிங்கம்

பக்கம் 33

மாசற்ற - குற்றமில்லாத

பக்கம் 34

கேளா – கேட்டு
அமலன் – இராமன்
நன்னுதல் – நல்லநெற்றியை யுடையவள் (சீதை)
கேள் – சுற்றம்
நளிர் - குளிர்மை
உம்பி – உன் தம்பி

பக்கம் 35

கிளை – சுற்றம்
ஏவல் - கட்டளை
திங்கள் - சந்திரன்
ஓரா – ஓர் + ஆ (ஒரு பசு)
பிணி - நோய்
மனக்கிழி - மனத்திரை
ஓவியம் - சித்திரம்

## பாடம் 7 : பரதனைக் கண்ட குகனின் சீற்றம்

பக்கம் 36

சேய்மை – தூரம்
வெண்டிரை - வெண்மை + திரை
தெற்றென - தெளிவாக

பக்கம் 37

இன்னல் - துன்பம்
கனல் - நெருப்பு
கான்றது – பிரகாசித்தது
குனிந்தன - வளைந்தன
அமர் - போர்
கடுங்கண் - கொடுமை
சிங்கஏறு - ஆண்சிங்கம்

பக்கம் 38

அஞ்சனவண்ணன் - இராமன்
வெஞ்சரம் - கொடிய அம்பு
யாறு – ஆறு

பக்கம் 39

புலியேறு – ஆண்புலி
பாதகம் – கொடுமை
குவை - குவியல்

பக்கம் 40

மறவினை — தீயசெயல்
சாடி - கொன்று
வதிதல் - வசித்தல்
பொருது - போர்செய்து
ஆர்த்து - ஆரவாரித்து

## பாடம் 8: குகன் சீற்றம் தணிந்தமை

பக்கம் 41

தலைமையமைச்சன் - முதல் மந்திரி
உற்றது – நிகழ்ந்த கருமம்
உறுவது – நிகழும் கருமம்
உறுதி - நன்மை
வெகுண்ட - கோபித்த
வெகுளி - கோபம்

பக்கம் 42

தனிநாதன் - ஒப்பற்ற தலைவன்
ஊன்றிநோக்கினன் - கவனமாகப் பார்த்தான்

பக்கம் 43

மேனி - உடம்பு
விக்கி – கட்டி
வற்கலை - மரவுரி

பக்கம் 44

ஆடவர் - ஆண்கள்
சமர் - யுத்தம்
அணுவளவு - சிறிது

## பாடம் 9: குகனுக்குப் பரதன் கூறியவை

பக்கம் 45

கிராதர் – வேடர்
குறுகுதல் - அடைதல்
மெய்ம்மறந்து - தன்னை மறந்து
பார்த்திபன் - அரசன்
தகைமை - தகுதி
பேரானந்தம் - மிகுந்த சந்தோஷம்
களங்கம் - குற்றம்
பேதம் - வித்தியாசம்

பசகம் 46

எந்தை - எமது தந்தை
நல்கினன் - கொடுத்தான்
முன்னவன் - தமையன்
குன்றுதல் - அழிதல்
இலச்சினை – அடையாளம்
திருமுகம் - கடிதம்
எம்முன் – எமது தமையன்
முடங்கல் - கடிதம்
கோள் – நட்சத்திரம்
நன்னிமித்தம் - நல்லசகுனம்

பக்கம் 47

கான் - காடு
கவின் - அழகு
தீஞ்சுவை - இனியசுவை
இரவலர் - பிச்சைக்காரர்
முழவு - முரசு
வறிது - வெறுமை
தீபம் - விளக்கு
பிலிற்றும் - சிந்தும்

பக்கம் 48

ஆவி - உயிர்
துகில் - சீலை
பாணர் - யாழ் வாசித்துப் பாடுவோர்
விறலியர் - நடனமாடுவோர்
களம் - இடம்
இழிதல் - இறங்குதல்
சேடியர் - தோழிப் பெண்கள்

பக்கம் 49

தீய்த்தல் - சுடுதல்
பாதகம் - கொடுமை

பக்கம் 50

அறம் - தருமம்
பாராள - பூமியை அரசாள
நைந்தேன் - வருந்தினேன்
ஈமக்கடன் - இறுதிக்கிரியை

பக்கம் 51

தைலம் - எண்ணெய்
நேர்ந்தது - சம்பவித்தது
விமானம் - சிவிகை
சிதை - ஈமவிறகு
மனுநெறி - நீதிமுறை

## பாடம் 10: குகன் பரதனைப் பாராட்டுதல்

பக்கம் 52

உவகை - மகிழ்ச்சி
திறம்பாத - தவறாத
உள்ளக்கிளர்ச்சி - மன எழுச்சி

பக்கம் 53

போகம் - செல்வம்
காலும் - பிரகாசிக்கும்
தாரகை - நட்சத்திரம்
இரவி - சூரியன்

பக்கம் 54

ஈடுபாடு - நெருங்கிய தொடர்பு
துயின்றனன் - நித்திரை செய்தான்
சயனித்த - நித்திரைசெய்த
பருவரல் - துன்பம்
நவமணி - ஒன்பது வகை இரத்தினங்கள்
குயிற்றிய - பதித்த

பக்கம் 55

அல் - இருள்
அழகன் - அழகனான இராமன்
வெய்துயிர்ப்பு - பெருமூச்சு
கல் - மலை
கங்குல் - இரவு
நயனம் - கண்
அழுங்கினன் - வருந்தினன்

## பாடம் 11: குகன் பரதனை இராமனிடம் அழைத்துச் செல்லல்

பக்கம் 57

வெள்ளிப்பனிவரை - கைலை மலை
அம்பொன் மேரு - அழகிய பொன்மயமான மேருமலை
இடர் - துன்பம்

பக்கம் 58

முகத்தல் - அள்ளுதல்
களிறு - யானை
மரக்கலம் - கப்பல்
நிகர்த்தது - ஒத்தது

பக்கம் 59

வேந்தர்வேந்தன் - சக்கரவர்த்தி
அன்புமீக்கூர - அன்புமிக
உன்னதம் - சிறப்பு

பக்கம் 60

வாய்மை - சத்தியம்
கருணை - அருள்
காரணன் - காரணமானவன்
மாயன் - திருமால்

பக்கம் 61

எட்டுணை - எள்ளளவு
நெறி - வழி

பக்கம் 62

பார் - பூமி
துகளெழ - தூசிஉண்டாக
கணைப்புட்டில் - அம்புக்கூடு
குருதி - இரத்தம்
மண்ணகம் - பூமி

பக்கம் 63

வஞ்சினம் - சபதம்
மறைமொழி - வேதவாக்கு
துவண்டமேனி - சோர்ந்த உடல்
இளநகை - புன்முறுவல்

பக்கம் 64

சேமம் - நன்மை
ஒப்பாத - ஏற்காத

பக்கம் 65

பிறழ - தவற
யாசிக்கிறேன் - இரக்கிறேன்

பக்கம் 66

ஆணை - கட்டளை
எரி - நெருப்பு
பாதுகை - மிதிதடி
அரியணை - சிங்காசனம்
திருவடிநிலை - மிதிதடி

## பாடம் 12: குகனுக்கு அனுமான் கூறியவை

பக்கம் 67

கமலபாதம் - தாமரைமலர் போன்ற அடிகள்
பரிவாரம் - படை
தோழமை - நட்பு

பக்கம் 68

மலைப்பெய்தி - திகைத்து
திறல் - வலிமை
அபயம் - அடைக்கலம்

பக்கம் 69

சூள் - சபதம்
பொதியம் - பொதியமலை
குறுமுனிவன் - அகத்தியன்
கழிபேருவகை - மிக்க சந்தோஷம்
அம்பறாத்தூணி - அம்புக்கூடு
துறக்கம் - சுவர்க்கம்

பக்கம் 70

சஞ்சரிப்பவள் - வசிப்பவள்
எழில் - அழகு
கரந்து - மறைத்து
ஆரணங்கு - தெய்வப்பெண்
ஒல்கி - வளைந்து
தசமுகன் - இராவணன்

பக்கம் 71

புனைந்துரைத்தாள் - வருணித்தாள்
வனப்பு - அழகு
மோகம் - ஆசை
தசக்கிரீவன் - இராவணன்
தெருட்டல் - தெளிவித்தல்
அவலம் - அபாயம்
தாபதவேடம் - துறவிகள் வேடம்

பக்கம் 72

அலமந்து - துன்பமடைந்து
சுவடு - அடையாளம்
குற்றுயிர் - குறையுயிர்
புள்ளின்வேந்தன் - சடாயு
மூதாட்டி - முதியவள்

பக்கம் 73

கரந்துறையும் - மறைந்து வசிக்கும்
களைவதாக - நீக்குவதாக
உரம் - மார்பு
எண்டிசை - எட்டுத்திக்கு

பக்கம் 74

கணையாழி - மோதிரம்
சூளாமணி - பெண்களின் தலையணி
தூர்த்து - நிரப்பி
நிராயுதபாணி - ஆயுதங்களற்ற நிலை

பக்கம் 75

புனைவித்தல் - அணிவித்தல்
பாணம் - அம்பு
மடிந்தான் - இறந்தான்
வெருக்கொள - பயமடைய
அலகில் - அளவில்லாத

பக்கம் 76

அக்கினி - நெருப்பு
செவ்வி - சிறப்பு
முனிசிரேட்டர் - முனிவர்களிற் சிறந்தவர்
கடுகி - விரைந்து

## பாடம் 13: குகன் இராமனைத் தரிசித்தல்

பக்கம் 77

தொழும்பு - தொண்டு
சிரம் - தலை
சார்ந்தான் - அடைந்தான்

பக்கம் 78

முகிழ்த்த - அரும்பிய
கசிந்து - உருகி

பக்கம் 79

புணர்ப்பு - தொடர்பு
தெருள் – தெளிவு
மருள் - மயக்கம்
கார்வண்ணமேனியான் - இராமன்
கார்த்தடங்கண்ணி - கரிய அகன்ற விழியுடையாள்

பக்கம் 80

தனித்தலைவன் - ஒப்பற்ற தலைவன்
அளவளாவி - ஒருவருடன் ஒருவர் கதைத்து
கதிரவன் - சூரியன்
கரம் - கை
நலிந்தாள் - வருந்தினாள்
நியமம் - நித்தியகருமம்

பக்கம் 81

தினகரன் - சூரியன்
தையல் - பெண் (சீதை)

## பாடம் 14 : குகன் முடிசூட்டு விழாவைக் கண்டு மீண்டமை

பக்கம் 82

பொறி - இயந்திரம்
பாவனை - பாவித்தல்
திறம்பாது - தவறுது
சொல்லொணு - சொல்ல முடியாத
அற்றைநாள் - அன்று

பக்கம் 83

பருவரல் - துன்பம்
விறல் - வலிமை
அவதி - தவணை
நிலமகள் - பூமி

பக்கம் 84

செவியுற்ற - கேட்ட
அடாது - தகாது
பூசனை - பூசை
ஆரியன் - அறிவிற் சிறந்தோன்
ஐயன் - தலைவன்
விடம் - நஞ்சு

பக்கம் 85

சிகாமணி - தலையிலணியும் இரத்தினக்கல்
கிளை - சுற்றம்
பீதாம்பரம் - பொன்னுடை

பக்கம் 86

மணுளன் - கணவன்
வள்ளுவன் - பறையறைவோன்
காப்புநாண் - காவற்கயிறு
தண்ணுமை - மத்தளம்
பல்லியம் - பலவகை வாத்தியங்கள்
மந்திரக்கிழவர் - மந்திரிமார்

பக்கம் 87

ஓலக்கமண்டபம் - சபாமண்டபம்
மடங்கல் - சிங்கம்
திங்கள் - மாதம்

பக்கம் 88

சன்மானம் - உபகாரப் பொருள்
வரிசைகள் - சிறப்புக்கள்
ககனம் - ஆகாயம்
அற்றம் - குற்றம்
சிரஞ்சீவித்தன்மை - என்றும் உயிர்வாழுந்தன்மை

# பயிற்சி வினாக்கள்

## 1. சிருங்கிபேரம்

1. கங்கை நதிக்குக் கூறப்பட்ட உவமைகள் எவை? அவை எவ்வாறு பொருந்துகின்றன என விளக்குக.
2. கங்கை; குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களுக்கூடாகப் பாயும் வகையை வருணித்தெழுதுக.
3. கங்கை நதிக் கரையிலுள்ள வேடர் குடியிருப்புகளைப் பற்றி யாது அறிவீர்?
4. சிருங்கிபேரம் பிரதான இடமாக விளங்கக் காரணம் யாது?

## 2. குகனுஞ் சுற்றமும்

1. குகனின் வெளித்தோற்றம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.
2. குகனது ஆடை, அணிகளை வருணிக்க.
3. குகனது சுற்றத்தினரின் இயல்புகள் எவை?
4. குகனது புறத் தோற்றத்திற்கும் அகத் தோற்றத்திற்கு முள்ள வேறுபாடு யாது?

## 3. குகன் இராமனைக் கண்டமை

1. குகன் கொண்டுசென்ற கையுறைப் பொருள்கள் எவை? அவை எதற்கு ஒப்பிடப்பட்டன?
2. தபோவனத்தின் எல்லையை யடைந்த குகன் செய்தன யாவை?
3. இலக்குமணன் குகனைப்பற்றி இராமனிடம் கூறியவை எவை?

4. "குகன் சொல்வழி கேளாத் தம்பி." ஏன்?
5. மீனையும் தேனையும் கண்ட இராமன் குகனுக்குக் கூறியதென்ன?
6. சந்தர்ப்பங் கூறுக:
   (அ) "அப்பா, இப்பொருள்கள் என்மீது நீ கொண்ட அன்பின் அருமையைக் காட்டுகின்றன."
   (ஆ) "யான் நின்னை விட்டுக் கணப்போதும் பிரியேன்."

## 4. குகன் அயோத்தியில் நிகழ்ந்தன அறிதல்

1. "இராமன் நாளை முடிசூடுவான்" என்பதனைக் கேட்ட அயோத்தி மாந்தர் நிலையையும், அவர்கள் நகரை அலங்கரித்த வகையையுங் கூறுக.
2. இராமர் முடி புனைவதற்கு ஏற்பட்ட தடையை விபரிக்க.
3. கைகேயி தசரதனிடம் வேண்டிய வரங்கள் யாவை?
4. பரதன் முடிசூடுவான் என்பதைக் கேட்ட கோசலை கூறியதென்ன?
5. இலக்குமணன் குகனுக்குக் கூறிய அயோத்திச் சம்பவங்களை இருபது வரிகளுக்கு மேற்படாமற் சுருக்கி எழுதுக.
6. சந்தர்ப்பங் கூறுக:
   (அ) "மன்னவன் பணியன்றி, நும்பணி யாயினும் யான் மறுப்பனோ."
   (ஆ) "அவன் நின்னினும் நல்லவன்."

## 5. காவல் வீரர் இருவர்

1. அயோத்திச் சம்பவங்களை யறிந்த குகன் யாது செய்தான்?

2. குகன், அருவியானது கீழே விழக் காணப்படும் ஒரு குன்றுபோல நின்றது எப்போது? ஏன்?

3. சந்தர்ப்பங் கூறுக:
   (அ) "இந்த நாயடியேன் கண்ணுங் கவசமும் போலத் தேவனையும் தேவியையும் காப்பேன்."
   (ஆ) "இப்பொழுது என்னைத் துன்புறுத்தாது நீங்கிச் செல்க."

## 6. குகனை இராமன் பிரிந்தமை

1. குகனுடன் சிருங்கிபேரத்தில் தங்க முடியாமைக்கு இராமன் கூறிய காரணம் யாது?

2. "சித்திரகூட மலைக்குச் செல்லும் வழி யாது?" என்று கேட்ட இராமனுக்குக் குகன் கூறிய விடை என்ன?

3. குகனின் அன்புப் பெருக்கைக்கண்டு இராமன் குகனுக்குக் கூறியன யாவை?

4. சந்தர்ப்பங் கூறுக:
   (அ) "என் கிளையாகிய சிருங்கிபேர மக்களை என் ஏவலின்படி இனிது காக்க."
   (ஆ) "என்னுயிர் உள்ளவரையும் என்னூரில் உறைக."

## 7. பரதனைக் கண்ட குகனின் சீற்றம்

1. குகன், சேனையோடு வரும் பரதனைக் கண்டு சீற்றங்கொண்டதேன்?

2. குகன் தன் படைவீரருக்கு இட்ட கட்டளை யாது?

3. குகன், பரதனது வருகையைக் கண்டு கூறிய கோப வார்த்தைகள் யாவை?

4. தான் இராமனுடன் செல்லாதிருந்ததும் நன்றெனக் குகன் கூறியதேன்?

5. குகன் தன் வீரர்களுக்குக் கூறிய வீர வாசகங்கள் யாவை?

## 8. குகன் சீற்றம் தணிந்தமை

1. சுமந்திரனின் இயல்புகளைக் கூறுக.

2. சுமந்திரன் பரதனுக்குக் கூறியதென்ன?

3. குகனது கோபம் தணிந்த தெங்ஙனம்?

4. குகன் எதிர்பார்த்த பரதனுக்கும், கண்ட பரதனுக்கு முள்ள வேறுபாடுகள் யாவை?

5. சீற்றந் தணிந்த குகன் தனது படை வீரர்களுக்குக் கூறியதென்ன?

## 9. குகனுக்குப் பரதன் கூறியவை

1. குகனும் பரதனும் சந்தித்த தெங்ஙனம்?
2. பரதன் காட்டுக்கு வரக் காரணம் யாது?
3. பரதன் கேகய நாட்டினின்றும் திரும்பியபோது கண்ட கோசலக் காட்சிகளையும் அயோத்திநகர்க் காட்சிகளையும் எழுதுக.

4. பரதன் தன்னைத் தான் வெறுத்துக் கூறியன யாவை?

5. பரதன் குகனுக்குக் கூறியனவற்றைச் சுருக்கி இருபது வரிக்கு மேற்படாமல் எழுதுக.

## 10. குகன் பரதனைப் பாராட்டுதல்

1. "ஆயிரம் இராமர் தாமும் உனக்கு ஒப்பாவரோ" எனக் குகன் கூறியதேன்?

2. இராமன் துயின்ற இடத்தைக் குகன் காட்டிய போது பரதன் கூறியது யாது?

3. சந்தர்ப்பங் கூறுக:

    (அ) "சீ நானும் ஒரு தம்பியா?"

    (ஆ) "நீ இரவிகுல மன்னர்கள் எவரினும் மேம்பட்டவனாக விளங்குகிறாய்"

## 11. குகன் பரதனை இராமனிடம் அழைத்துச் செல்லல்

1. படகுகள் எவ்விதம் இருவினைகளை நிகர்த்தன?

2. பரதசேனை ஆற்றிற் சென்ற வகையை வருணித்தெழுதுக.

3. குகனை இன்னனென அறிந்த கோசலை கூறியதென்ன?

4. பரதன் தன் தாயான கைகேயியை எவ்வாறு குகனுக்கு அறிமுகப்படுத்தினான்?

5. பரதனையும் சேனையையும் கண்ணுற்ற இலக்குமணன் கோபங்கொண்டதேன்?

6. இலக்குமணன் வஞ்சினம் கூறியபோது இராமன் கூறிய ஆறுதல் மொழிகள் யாவை?

7. நாட்டுக்குவந்து அரசுபுரியும்படி வேண்டிய பரதனுக்கு இராமன் யாது கூறினன்?

8. பரதன் இராமனது பாதுகைகளைப் பெற்றுச் சென்றதேன்?

9. சந்தர்ப்பங் கூறுக:

(அ) "தந்தைதாயரே நாம் வணங்கும் தெய்வம்"

(ஆ) நீ உலகனைத்தையும் கலக்கக் கருதினல் அதனை விலக்க வல்லவர் யார்?

(இ) "நீவிர் ஐவீரும் ஒருமனம் படைத்தவர்களாய் இவ்வுலகை நெடுங்காலம் ஆள்விராக."

## 12. குகனுக்கு அனுமான் கூறியவை

1. அனுமான் யார்?

2. பின் வருபவர்களைப்பற்றி எழுதுக:

விராதன், சடாயு, அகத்தியர், சபரி, வாலி, சுக்கிரீவன், மாரீசன், விபீடணன், கும்பகர்ணன், அங்கதன்.

3. இராவணன் சீதையின் அழகை எவ்வாறு அறிந்தான்?

4. இராவணன் சீதையைக் கவரச் செய்த சூழ்ச்சியையும், அவளைக் கவர்ந்த வகையையுங் கூறுக.

5. இராமன் வாலியை மறைந்துநின்று கொன்றதேன்?

6. அனுமான் அயோத்திக்குச் செல்லக் காரணம் யாது?

## 13. குகன் இராமனைத் தரிசித்தல்

1. இராமன், குகனது நலம்பற்றி வினாவியபோது குகன் யாது கூறினான்?

2. இராமன் குகனுக்குக் கூறிய ஆறுதல் யாது?

3. இராமன் தனது நண்பர்களுக்குக் குகனை எவ்வாறு அறிமுகப்படுத்தினான்?

## 14. குகன் முடிசூட்டு விழாவைக் கண்டு மீண்டமை

1. பாதுகையைப் பெற்று மீண்ட பரதன் என்ன செய்தான்?

2. இராமன் வரும் அவதி போயிற்றென்று பரதன் செய்த செயல் யாது?

3. "நீ அரசனாகி இக் கோசலநாட்டை ஆள்க" எனக் கூறிய பரதனுக்குச் சத்துருக்கன் கூறிய பதில் என்ன?

4. இராமனது முடிசூட்டு வைபவத்தைப்பற்றிப் பத்து வசனங்கள் எழுதுக.

5. குகனை இராமன் எவ்வாறு பாராட்டினான்?

# KUHAN

By

S. VELUPPILLAI

Approved by the Director of Education, on the recommendation of the Educational Publications Advisory Board.

North-Ceylon Tamil Works Publishing House

*Copyright* ] CHUNNAKAM [ Re. 1-00